452

உ

கடவுள் துணை.

அகஸ்தியர் அருளிச்செய்த

மணிகண்ட

கேரளசோதிடம்.

1 OCT 192

இஃது

சென்னைபுரசை

நித்தியாநந்த ஜோசியரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

பு. சு. துரைசாமிமுதலியார்

அவர்களால் தமது

சென்னை புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

ல] [அணா 8.

222978

உ

கடவுள் துணை.

அகஸ்தியர் அருளிச்செய்த

மணிகண்ட

கேரளசோதிடம்.

இஃது

சென்னை புரசை

நித்தியாநந்த ஜோசியரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரு. சு. துரைசாமிமுதலியார்

அவர்களால் தமது

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924

... OF THE REGISTR...
18 OCT 19...

வான்மீகர் ஆரூட சாஸ்திரம்

40 பாடல் மூலமும் உரையும்.

இதை வாசிக்கும் பேயர்கட்குத் தெரிவிப்பது யாதெனில், வான்மீகர் திருவாய் மலர்ந்தருளிய ஆரூடசாஸ்திரமென்னும் 40 பாட்டுகளுக்கும் இதுவரையில்உரையில்லாதிருந்ததினல் யாவரும் எளிதில் தெள்ளிவாய்தெரியும்படி உரைஎழுதி அச்சிடும்படி அநேகர் கேட்டுக்கொண்டதின் பேரில் நன்றாயும் தெளிவாயும் சுலபத்தில் தெரிந்துக்கொண்டு பலாபலன்களை அடையும்படி உரையெழுதி நல்ல உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது.

சாஸ்திரம் பார்ப்பவர்கள் சுத்தியாய் கையில் ஏதாகிலும் ஓர் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு இதிலுள்ள ராசி சக்கரத்தில் ஓர் வீட்டைத்தொட்டு அதிலுள்ள எழுத்துகளைக்கொண்டு அதற்கேற்றபாட்டையும் உரையையும்பார்த்து தாங்கள் நினைத்த காரியம்ஜெய அபஜெயங்களை தெரிந்துக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0 3 0

ஜாதக சித்தியென்னும்

அனுபோக சோதிட ப்ரம்ம ரஹஸ்யம்

இந்த அனுபோகசோதிடமானது பார்ப்பதற்கு கண்ணாடி போல் விளங்கும். குரு இல்லாமல் பார்த்துச்சொல்லலாம். இது வெகு சுலபமாய் எழுதி இருக்கிறது.

இதன் விலை அணா-12.

மெடல்கள் பரிசுபெற்றது! மெடல்கள் பரிசுபெற்றது!!

ஐந்தே நிமிஷத்தில் நரைமயிர் கருக்குந் தைலம்.

இதற்கு மிஞ்சின தைலம் உலகத்தில் கிடையாது.

தற்காலத்தில் பலவிதமாய்செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டைநிறமாகவும் பசுமைநிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி மயிரை விகாரப்படுத்திவிடுகின்றன. நம்முடைய தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 5-நிமிஷத்திற் குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையு முண்டுபண்ணும். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்துவரும்.

புட்டி 1-க்கு ரூபா 1.

த, துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன்தெரு, மின்ட் பில்டிங் போஸ்ட், மதராஸ்.

222978
-600 008

உ

கடவுள்துணை.

கேரளசோதிடம்.

——(0)——

பாயிரம்.

பார்வதிவாணிலக்ஷ்மி பரமேசன்பிரமன்விஷ்ணு
கார்முகங்கந்தனேழு கனத்ததோரிஷிகடங்கள்
சீர்பதந்தெண்டனிட்டுத் தெரிசித்தல்வேண்டல்செய்தே
ஓர்மதியுதையங்கொண்டிங் குற்றதுகூறலுற்றாம் 1

நல்லதோர்வேதமூர்த்தி நந்தனார்சொன்ன நூலாம்
வல்லதோர்கிரந்தவாக்கிய மதையிந்தமாநிலத்திற
சொல்லது தெரியாதார்க்குந்தமிழ்சொன்னனோர்வேத-
வல்லவன்சோழிநூலில வகுத்தலங்காரந்தானே. 2

நூற்பயன்,

செகத்தினிலுதித்தபேர்க்குச் செல்லமும்பகையுங்காண
மிகுந்ததோர்துயரந்தன்னின் மிகயோகமுதிப்புங்கண்டு
யுகத்தினடக்குங்கர்ம்மம் வேதனுண்டாக்கிச்சொன்ன
* விதத்திலுள்ளபேர்க்கு விவரமேதெரியச்சொல்வாம் 3

நூல்.

அரிடஷ்காண்டம்

பாலரிஷ்டம்.

உதித்ததுவிரையமெட்டி லொளிர்மதியரசன்கூடில்
திதித்தனினின்றாகிற் றிறபலனுறுதியாகும்
கதித்தவாறெட்டாகிற் கடினமாய்க்கண்டமுண்டு
விதித்தியாண்டீரிரண்டில் விளையுமேதீம்பாய்மாதே. 1

மந்தன்சேயிருவர்கூடி யிருந்திடத்ததுவுந்தீது.
அந்தெதிரிடமுமாகா தறுதியாய்த்தீம்புண்டாகும்.
உந்தவர்நான்குமூன்று மோரெட்டும்பத்துநோக்க
அந்தமாய்நினைப்பர்கண்டா யாறிருமாதந்தன்னில் 2

---

* விதத்திலுலென்பது இனவெதுகை இவ்வெதுகை இந்நூலில் பெரும்பாலும் வருவனகாண்க

வலமதிலாவங்காரி வந்திடத்ததுவுந்தீது
குலமதிலீன்றசுற்றங் குடியதமாகச்செய்யும்
பலனதுசெய்யுந்தீது பன்னிரண்டாண்டிற்காணும்
சுலமதுவாகத்துன்பஞ் சலிப்பிட்டனிருப்பன்மாதே. 3

கரும்பாம்புஞ்சனியுங்கூடிக் கலந்துடனிரவிநிற்க
வரும்பாடுபிதுர்க்குத்தோஷம் வகைவங்கிசத்தைக்கொல்லும்.
திரும்பாதுதீதாய்நிற்குந் தீங்கொன்பதாண்டிற்கொல்லும்
கரும்பூதமறைந்திட்டாற்போற் கலங்குவன்புவியின்மாதே. 4

பூமனுமதியுங்கூடிப் புகுந்திடப்புந்திதானும்
சோமனுக்கேழிற்காரி சோபித்துநின்றதாகில்
மாமனுமாதுருவம்ச மடியுமேயிருமூன்றாண்டிற்
காமனுக்கினியமாதே கருத்திலார்க்குரைக்குங்காலே 5

சுங்கனுஞ்சனியுங்கூட்ச சூரியன்வந்துநிற்கப்
பொங்கமாயவர்க்கேயேழிற் புகுந்திடப்பூமனுரும்
அங்கனேவிவாகங்கூடி யோராண்டிற்றீம்புண்டாகும்
இங்குள்ளமாதர்கட்கு மிவன்சோரபுருஷனுமே. 6

மன்றவன்சிர்விகூடி மீனக்கேழிற்காரிசெவ்வாய்
நின்றிடிற்றீம்பேதென்னி னில்லாதுபுத்திரவம்சம்
அன்னதிற்சோமன்கூடி லவன்பிதுர்தாய்க்குமாகா
தென்றவர்சொன்னதீம்ப தேழிரண்டாண்டிற்றானே. 7

துலக்கமால்வெள்ளிமூன்றிற் றோன்றியேயொருவர்பாரா
நலக்கமில்லாமநின்றாற் ஞசமாங்குலமுந்தீதாய்க்
கலக்கமில்லாமநின்றா கருவற்றுமனையும்பாழாம்
விலக்கவுமொருவராலே விண்ணிலுமில்லைமாதே. 8

இணக்கமாய்க்காரிசெவ்வா யிருவருங்கூடிநின்ற
அணைகந்தமனையுமேழு மம்பலயாகிநிற்கும்
வணக்கமுநன்மைசெய்யார் வருமதிற்றீம்பேயுண்டாம்
இணைக்கரிசெய்வர்கண்டா யீராறுமாதந்தன்னில். 9

மூணினிற்செவ்வாய்நிற்க மும்மூன்றிற்காரிசேரக்
காணுமேயுடன்பிறப்புக் கடிதாய்க்கெண்டமுண்டு
நாணியேபிதுர்க்குக்கண்ட நாலுதிங்களிலேகாணும்
வேணுமென்பகையோர்பார்க்கின் விளைவதுதீம்பைந்தாண்டில் 10

பத்தினிற்சனியுநிற்கப் பனிமனியீனமாக
ஒததுநாவிரவிநிற்க வோரேழிற்பூமன்சேர
மற்றுளோராறெட்டாக மரணமாங்குழவிமாதா
அற்றவன்றிரவுதன்னி லாகாதுமனைக்குந்தோஷம். 11

உதித்தவராறிற்காரி யுடையவனீனமாக
எதிர்த்ததோரேழிநின்ற விரவியும்பெலத்துநிற்கப்
பதிக்குருவுடனேபூமன் பற்றியேநின்றானாகில்
பிதுர்க்கொருதீம்பாய்பெற்ற பிள்ளையுமரணமாண்டில். 12

அஞ்சுடனுயர்ந்த வீட்டிலம்புலிசனியுங்கூட
மிஞ்சியேவிடத்திற்பூமன் வெங்கதிரிரவிநின்றால்
கொஞ்சமாய்ப்பாட்டன்பாட்டி குலமுளோர்க்குழவிமாதா
வஞ்சியேமூன்றுமாத மடிவதுநிசமேமாதே 13

ஏழுடனிரண்டுவீட்டா னிருவருமஸ்தமிக்கத்
தாழ்வுடன்மதியுமாறிற் றலைவனுமுதையங்காரி
சூழிடம்பாம்புபின்சேய் சுங்கனுங்கூடிநின்றால்
வாழ்வுடன்குலந்துவந்த குழவியுமரணமாண்டில். 14

எட்டினிலாசன்சேர விதற்கேழிற்சுங்கனிற்க
மடியிற்சோமன்மூன்றின் மனையவனீனமாக
எட்டினிலுதையங்காரி தொனிப்பவன்பூமன்கூட
விட்டிடுங்குழவிசீவன் விரையமாய்க்கொஞ்சநாளில். 15

இன்பமாய்லாபலாபத் தினியவனஸ்தமிக்கில்
ஒன்பதிற்சனியேநிற்க வொருநான்கிற்செவ்வாய்சேர
அன்பதாய்விரையலாப மரசனுங் சுங்கனீனம்
துன்பமாய்மதியுமானாற் சொற்றனங்குழவிபோமே. 16

சிறந்தவன் மதியுமீனஞ் சீணமாயரசன்சுங்கன்
மறந்துடனிருந்தாராகின் மற்றதீக்கோளார்மேலாய்
இறந்துடன்போகச்செய்வ ரிதுகுறிதப்பாமாதே
அறிந்துகோணினைவதாகி யவனியினுதித்தபேர்க்கே. 17

உலகினிலுதித்தபேர்கட் கொளிர்மதியரசன்சுங்கன்
கலக்கமில்லாமனின்றாற் கண்டவன்மதிவீட்டானும்

நிலமதிலுறவேயாகி னிக்சயநன்மையுண்டு
சலமதாய்த்தியர்தீம்பாய்ச் சாகவுமொட்டார்மாதே. 18

ஒரு சுபன்மிகுத்திருந்தா லொட்டார்கடீயர்சூழ்ந்து
இருசுபர்மிகுத்திருந்தா லிரெட்டாப்ப்பகையேசெய்வார்
திருநலமானேர்நன்மை தியருங்கிட்டார் தாரம்
பெருசுபர்நீலேயாகிற் பேர்சொலக்காணர் தீயர் 19

உதையாதிசுங்கன்ராஜ னெளிர்மதிபதியுநல்லோர்
இதமிலாப்பாபியந்த னிரவிசேயெட்டோன்பாமபும்
இதுவைந்துபேருமாகு மெழிற்புதன்சமனேயாகும்
இதிலாகுந்ன்மையெண்ணி யினிப்பலன் சொல்வாய்மாதே 20

உதித்ததற்கெட்டோன்காரி மதிக்கெட்டோன்பகையாய்நிற்க
மதித்தந்தவிட்டத்தினின்று மன்னரும்பகையேயாவர்
கதித்தவர்மேலாய்நின்றாற் கண்டமுந்தோஷமுண்டு
பதித்துடன்மாறிநின்றாற் பாவமுமில்லைமாதே. 21

இப்படியுதினட்பாட்சி யுச்சமுமிழ்ந்துபோகும்
பொய்பட்டிருந்தபேர்கள் போய்பகைநீசமானல்
நற்படியாகினின்று நலந்தரும்வகையேசெய்வார்
சொற்படித்தப்பாதாகுந் தொல்புவியோர்க்குமாதே. 22

புந்தியோநிவர்க்குநாலி லிருந்திடகுற்றமுண்டு
அந்தெதிர்சோமநின்று லவனுக்கேயீனமுண்டு
வந்தித்தவடைவேயாகில் வருமதிதீமையாகும்
இந்திரும்பகையாற்சிவ னிறக்குமெட்டாண்டின்மாதே. 23

மதிநின்றவீட்டுக்காறின் மந்தனாரவங்கூட
விதியெட்டிலிரவிபூமன் வீறியேநின்றாராகில்
பதியெட்டுமாதந்தன்னிற் பறந்திடும்பிறந்தபிள்ளை
எதிரிட்டுநிறுத்தவல்லா ரெவர்களுமில்லைமாதே 24

சோமற்குமுன்னேகாரி பின்னுமோற்பூமனிற்க
ஆமவர்க்கெட்டிற்பாம்பு மலரியுநின்றாராகில்
சாமதுகுழவிதானுஞ் சரியிருமாதந்தன்னில்
பேர்மதைநிறுத்தவல்லார் பூமியிலில்லைமாதே. 25

மதியுதைய த்துக்கெட்டின் மன்னவனொருவனிற்க
அதிர்விரைய த்திற்காரி யாவருமவர்க்கேயேழிற்
கதிருஞ்சேய்நின்றாகிற் கண்டாறுமாதந்தன்னில்
விதிமுடிந்தோடிப்போமே மேதினியுதித்தகாலே. 26

சந்திரனிருப்பிடத்திற் சூரியன்முன்னேநிற்கச்
சந்திரற்கெட்டிற்காரி சத்தமஞ்செவ்வாய்சேர
இந்திரலாபஞ்சுங்க னிருந்திடவொருவனுகை
மந்திரியஞ்சிநின்றன் மரணமாங்குழவிநாலில். 27

ஒருபிறையாகிநிற்க வொருநான்கிற்காரிசேர
இருமூன்றிலொன்றிற்செவ்வா யிருந்திடவரவங்கூட
மருமணராசன்சுங்கன் மதிக்கெட்டினின்றாகில்
வருவதோர்குழவியன்றே மன்றினிற்சாகுமாதே. 28

பிறைநிறைவித்திற்காரி பூமனுமஞ்சிநிற்க
அரையுமீரைந்துவிட்டி லரவமுமிரவிநிற்கக்
குறைவிலாச்சுங்கன்ராஜன் கூடாமலாறெட்டாகில்
முறையிட்டிங்கெட்டுநாளின் முன்னிட்டுபோமேபிள்ளை. 29

பூரணமதியேயாகிப் புந்தியுமேழினிற்கக்
காரணமானமந்தன் கடும்பத்துநாலின்செவ்வாய்
ஏரணியிரவியாதி யிருந்திடவெட்டிற்பொன்னும்
வாரணிதனத்தினுளே வருமந்தக்குழவிசாமே. 30

குறைமதிநின்றவீட்டுக் கொருபக்கங்குருவேநிற்க
அறியவர்க்கேழிற்காரி யரவமுங்கூடிநிற்க
நறியதோர்தனத்திற்செவ்வாய் நற்சுங்கனவர்க்கேயேழில்
நிறைமதியதற்கேழ்புந்தி யூழ்நிற்கிற்குழவிசாமே. 31

அரவுடன்மதியுங்கூட வவர்க்குநால்சனிசேய்நிற்கத்
திரமுடன்சேய்க்கேழ்சுங்கன் றிருப்புந்திகூடிநிற்கக்
குருவுடனிரவியெட்டிற் கூடியேநின்றாகில்
வருவதுதீம்பாடெட்டின் மரிப்பவரில்லைமாதே 32

சனிமதியரவங்கூடச் சத்தமஞ்செவ்வாய்நிற்க
மணியதாமிரவிபுந்தி மன்னவர்க்கெட்டாய்நிற்கிற்

பணிசுங்கன்சனிக்கெட்டாகிற் படிதனிற்பிறந்தபிள்ளை
இனியொருநாளுமில்லா திறந்திடுமென்பார்மாதே. 33

மதியிருபிறையுமாக மன்னவன்பகையாநிற்க
விதியொருநீசமாக வெள்ளியுமஸ்தமிக்கப்
பதிமதியிடத்தாள்காரி பக்கலிற்சேர்ந்தானாகில்
கதியறைக்குள்ளேமாண்டு கவிழ்ந்துடல்வீழுமாதே. 34

நிறைகொண்டமதிக்கேழன்றி னின்றதனிரவிமைந்தன்
அறைகின்றவைந்திற்செவ்வா யதற்கேழிலிரவிநிற்க
முறைகொண்டுவெள்ளியாறின் முன்குருவிரையநின்றாற்
சிறைகொண்டமதியுமுந்தி சேர்ந்திடக்குழவிசாமே. 35

அரவுடன்மதியுநிற்க வைந்தினிலலரிமைந்தன்
உரமுடனலத்திற்செவ்வா யொளிற்வெள்ளியாறினிற்கத்
திரமுடன்குருவுமெட்டிற் றிரும்பியேநின்றாகில்
முறையிட்டுப்பிறந்தபிள்ளை மூன்றிருமாதஞ்சாமே. 36

சாவதுமேதோவென்னிற் சனிமதியுதையமீனம்
ஆவதுபகைமரிப்பு மாதமமாகிநின்றாற்
போவதுமெய்தான்சிவன் பொல்லாதுபகையேயானால்
நாவதுதப்பாமாதே நாட்டுளோர்க்குரைக்குங்காலே. 37

விதியற்றுப்போனபேர்க்கு மதியதைப்பார்த்துச்சொல்லு
மதியற்றுப்போனபேர்க்குச் சனியதைபார்த்துச்சொல்லு
சனியற்றுப்போனகாலே யுதயத்தைப்பார்த்துசொல்லு
சனிமதியுதயந்தப்பா தகப்படுமரணகாலம் 38

மதிக்கேபோலுதையத்திற்குஞ் சனிக்குமேபாய்ந்துபார்க்க
இதற்குமிவ்வண்ணமாய்ந்தா லேவியவீதியுந்தீது
வீதிக்குறிதப்பாதாகு மேதினிதனிலுற்றோர்க்குப்
பதிக்குறிமாதேகேளாய் பாரினிற்றப்பாவாறே. 39

இதைவிடவேறேயில்லை யேதேதுபார்த்திட்டாலும்
அறையவர்நின்றதீம்பு மனைத்துமேமதியாலாய்ந்து
உதயமுஞ்சனினின்றோருக் கொருவறையூடுதாக்கிச்
சிதைபதஞ்சொல்லலாகுஞ் செகத்தினிலுதித்தபேர்க்கே.

அரிஷ்டகாண்டம் முற்றிற்று-ஆக 43.

———

கருதியகருமங்கட்குக் காரிகைமாதேகேளாய்
வருநலமதிதனக்கும் வகுத்தைந்துநான்குபேரை
பொருமதியுதையங்கண்டு பொல்லாதபேரைத்தள்ளி
குருமதிசுங்கனின்ற குறிநடுவாகச்சொல்லே. 1

நல்லவர்நாலுபேர்க்கு நடுவதிர்சொல்லமேலாம்
பொல்லவர்க்கதுவேயானாற் போய்விடுங்கருமங்கிட்டாப்
பின்னலங்கலந்துநின்று பிறிவினையில்லாதாகில்
சொல்லுவர்மதிலைபற்றித் தொனியுரைநடுவாய்மாதே. 2

நஷ்டி.

நல்லதோர்பொருளைபோக்கி நாடியேவருவோர்க்கெல்லாம்
வல்லதோராவங்காரி யீரவிசேய்க்கேட்பானாகிற்
சொல்வதுவன்றேசேருந் தொனிப்பவர்கோணமானால்
அல்லதுமும்மூன்றைந்தி லலறியேவருமேமாதே. 3

இப்படிநல்லோர்நின்ற விடத்தினிற்கேட்பானாகிற்
பொய்ப்படப்போனநட்டம் போய்வரன்மெதுவேயென்று
மெய்ப்படச்சொல்லலாகு மேலன்றிக்கோட்கணின்றாற்
சொற்படிவேதமூர்த்தி சொன்னசொற்றவறாமாதே. 4

சதாமுகூர்த்தம்.

நினைத்திடுகருமங்கட்கு நிட்சயநாளேசோமன்
அணைத்தரோகணியாநாட்கொண் டைமூன்றுநாழிதள்ளி
இனைத்தொருநன்மைசெய்தா லிடையூறுவருவதில்லை
பணைத்தடிபருவதம்போற் பாரினிலிருக்குமாதே. 5

ஐந்தொருநாட்குநாலா யமர்ந்தநாளதுவுஞ்சுத்தம்
மூந்தொருசொன்னநன்மை மூன்றிலொண்பலனேயாகும்
இந்தனாளன்றிவேறு சுபமேற்கவேவேறேயில்லை
தொந்தமாங்கனகமாதே சொல்லுநீயவனியோர்க்கே. 6

இந்தனாளதற்குக்கூற்றங் குருவிற்குச்சகடந்தள்ளி
எந்தனாளேனுநன்மை யிருக்குமேன்மேருவாகி
அந்தனாளதனினன்மை யாயிழைமாதேகேளாய்
இந்தொருகுறிதப்பாதே யிந்திரபதிபோல்வாழ்வன் 7

நலந்தீங்குகாண்டம்-முற்றிற்று-ஆக ௫௰

அற்பாயுட்காண்டம்.

——(௦)——

உதையாதிசுருபங்கூடி போரிடநிற்கத்தானு
மதியாகிப்பாபர்கூடி மற்றொருருவிடத்தினிற்கச்
சிதையாமற்சுபரும்பாபர்சேர்ந்துடனின்றாராகில்
இதையாதித்தீம்புண்டாகி யிருப்பகாண்டிருபத்தைந்தே. 1

செனித்ததோருதையந்தன்னிற் சேர்ந்துநற்சுபருநிற்க
இனிக்குருவிடனேபாப ரிருந்திடவரவஞ்சுங்கன்
தனித்தொருசென்மத்தானுஞ் சனிக்கேழினின்றாராகில்
மதிக்கொருவீனமானன் மரணமாண்டிருபத்தைந்தே. 2

சென்மாதிசனியுங்கூடிச் சேர்ந்துடனேழில்நிற்க
கன்மாதிகெதிரோன்கூடிக் கலந்துடனிரவிநான்கில்
தன்மாதிதனத்தோன்சேர்ந்து தரைமகனுடனேகூடப்
பொன்மாதினரசேகேளாய்ப் போய்விடுமீரெட்டாண்டில். 3

மன்னவனுதையந்தன்னின் மதியுடன்காரிநிற்க
அன்னரித்தானபூமனனுகியேயிரவிக்கேழில்
நின்றவர்சுங்கற்காறி னிலையதிற்பாம்பேயாகில்
சொன்னதோரீரிரண்டிற் சோதனையாகப்போவன். 4

குறித்தலக்கினத்திற்காரி கூடியேமதியுநிற்க
வெறித்தங்கேயுதயத்தானும் வெள்ளியுமிரவியேழில்
பறித்தலக்கினதிக்காறிற் பாம்புடன்குருவுநிற்க
நெறித்தவனொருபத்தாண்டு நிலையதிற்சாவுண்டாமே. 5

ஆறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
வேறுபட்டுதையத்தானும் விடையும்பெண்ணிடமேசேர
மாறுமுக்கோணரீன மாயினன்மாதேகேளாய்
ஈறுபட்டுஉயிரேழாண்டி லிறப்பனென்றியம்பலாமே. 6

உதையத்திற்கேழிழ்வேந்த னுத்தமர்கெட்டிற்காரி
மதிபத்திலவர்கேழ்புந்தி மணிசுங்கனெட்டாய்நிற்கச
சிதைவுற்ற மதிக்கேயாகிற் றீயருநின்றாராகில்
அதையொத்தகட்பானலு மோரைந்தாமாண்டிற்சாவே. 7

ஒன்பதுபேருநின்ற னிலையதற்கொருவரெட்டாய்
இன்பமற்றிருந்தாராகி லிவனுமோராண்டிற்சாவன்
அன்பதாய்மதிக்கெட்டாகிற் சனியைந்தாண்டதனிற்சாவன்
தன்பதிசுங்கற்கெட்டிற் றரைமகனிருந்தார்சாவே. 8

மதிக்கெட்டின்மந்தனிற்க மன்னவன்பூமறகெட்டாய்
விதிக்கெட்டில்வெள்ளிநிற்க விடையிமோயிரவிக்கெட்டில்
உதிக்கெட்டிற்புந்திக்கேழி லொருவனாய்ச்சோமனிற்கக்
கதித்தெட்டுவருடந்தன்னிற் கண்டிடுமோதேசாவே. 9

சூரியர்க்கெட்டிற்சோமன்சுன் னுதையத்துக்கெட்டில்
வீரியர்க்கெட்டில்வேந்தன் விடைக்கேழிலுதையனிற்கக்
காரியர்க்கெட்டாய்சுங்கன் கடுமதிகேழிற்பூமன்
பாரிவைநின்றாகிற் பத்தணைவருடஞ்சாவன் 10

பூமனாமந்தன்வீட்டான் புந்திடவுதையந்தன்னிற்
காமனாரிருந்தவீட்டான காரியுங்கலந்தேனிற்கச்
சோமனாரிரவிகூடிச் சொன்னதிலுதையனிற்க
ஆமதிர்கெட்டிற்பொன்சே யாண்டிரண்டதனிற்சாவே. 11

அற்பாயுட்காண்டம் முற்றிற்று. ஆகசுக.

யோககாண்டம்

குருசொன்னது

இராஜயோகம்.

இசைந்தொருவுதயந்தன்னி லிருப்பவரிளையோர்சோமன்
உசந்தொருகுருவுமேழி லொருவனாய்நிற்கத்தானும்
அசைந்தொருபாம்புஞ்சுங்க னவருமேபத்தினிற்கக்
கசந்தவர்நவத்தினின்றார் கரிபரிராஜயோகம். 1

தஞ்சமாயுதையோன்கூடச் சந்திரனிடத்தான்சேரக்
கெஞ்சியேசுங்கனேழிற் கோலமாய்நின்றானாகில்
மிஞ்சியேகுருவும்பாம்பு மிகைத்துடன்பத்தினிற்க
வஞ்சனையோரும்பாக்கியம் வந்திடிலிராஜயோகம். 2

நேசமாயாசனின்றனிலையதேவுதையமாகிப்
பாசமாய்மதியமேழிற் பதியவன்சுங்கன்கூட
ஆசையாய்பத்தினின்றால் லாபனுமதிலேசேரத்
தேசமாய்ப்பாவர்கோணாஞ் சேர்ந்திடிலிராஜயோகம். 3

ஒத்தவனுதையன்சுங்க னொன்றுமையாயுதையந்தன்னின்
மத்தவன்மதிதன்வீட்டான் மகிழ்ந்துடனேழினிற்க
எத்துடன்குருவும்பாம்பு மிருவருமபத்தினிற்க
கத்தவன்பாபரா றாயினுமிராஜயோகம். 4

உதையாதிசுங்கன்பத்தி லொருமையாயிருக்கத்தானும்
சிதையாமன்மதியினாலிற் சேர்ந்துடன்குருவும்பாம்பும்
பதியாகவேழிற்சேரப் பாபருமிலாபனிற்க
இதையாகனின்றாகி லிவனுக்கேயிராஜயோகம். 5

அந்தமாயுதைத்தோனு மரசனுநாலினிற்கத்
தொந்தமாய்மதியினாலே சுகமதில்லாமற்பத்திற்
சொந்தமாய்ச்சுங்கனேழிற் சுகமுடன்பாம்புங்கூட
அந்தமாய்ப்பாபரீரா றிருக்கினுமிராஜயோகம். 6

நன்றுள்ளவுதையத்தானு நன்மதிசுங்கனாலில்
அன்றுள்ளமதியும்விட்டா னரசனுவிடையுமேழில்
என்றுள்ளவிரவிமூன்றி லிருந்திடச்சனிசேய்லாபம்
ஒன்றுலகாளும்ராஜ யோகமேயுண்டுமாதே. 7

சுந்திரலக்கினாதி தீனிலிடையரசநாளிற்
சுந்திரவுதையத்தானுஞ் சோகமில்லாமற்பத்தில்
வந்தாசானேனேழில் வருமதியுதையனிற்க
இந்தவர்பாபலாபமிருந்திடில்ராஜயோகம். 8

சொன்னதியுதையத்தானுஞ் சுங்கனுமாவம்பத்தில்
நின்றதில்வேந்தன்சோம னிலையேழினிற்கத்தானும்
நன்னதிர்காரிசெவ்வா யிலாபத்திர்புந்திவேந்தன்
பன்னதாயிருந்தாராகில் பாராளுமிராஜயோகம். 9

குரும்தியுதையத்தானுங் கூடியேபத்தினிற்க
மதிபதிசுங்கன்றானு மகிழ்ந்துட னுதயனிற்கத்
தருமதிற்பாம்புநான்கிற் றரும்புந்தியிரவிசேர
இருமூன்றிற்செவ்வாய்காரி யிருந்திடிவிராஜயோகம் 10

அரவுமேயிருந்தவீட்டா னம்புலிக்கேழினிற்கத்
திரமுடன்சென்மவாதி சேர்ந்துடன்குருவும்பாம்பும்
மாபுளசுங்கன்பத்தின் மகிழ்ந்துடனிருந்தாராகில்
குறைவிலாவிராஜயோகங் கொடுங்கணைவிழியினாளே. 11

நரயோகம்.

சென்மாதிபனும்பெருமதியுஞ் சேர்ந்தேயொருவர்க்கொருநான்கிற்
கன்மாதிபனும்பின்னிடத்தார் கலந்தேயாவத்துடன்சேரப்
பொன்மாநகருக்கதிபதியும் பொன்னேயிரண்டாகிநின்னின்றால்
பெண்மானரசேநரயோகம் பெரியோருரைத்தபடிசொல்லே. 12

சொல்லிலேசுங்கன் றனித்திருக்கச் சோதிமதியுளரவமுடன்
நல்லோரைந்தினயந்திருக்க நலமாய்ப்பதினொன்றதிற்குருவும்

பொல்லார்கூடியிருந்தாலும் போகாதிவர்வாகனயோகம்
கல்லார்மதியின்கனங்குழலே காணுதவர்க்கிங்குரைசெய்வாய் 13

அரவுடன்கூடச்சோமன் குருபதினொன்றினிற்க
விரகுடன்சுங்கன்வாக்கில் வெய்யவன்பஞ்சங்காக்க
மரபுடையிலக்கினுதி மனமகிழ்ந்திருக்கக்கூட
விரைசெறிகுழலாய்கேளாய் வேண்டியசிவிகையேறும். 14

பாம்பொக்கப்பக்கம்மூன்றிற் பரவியேசுபர்கணிற்க
வேம்பொக்கச்சனிசெவ்வாய்தான் வீரியவிலாபஞ்சோக்
கா[illegible]வாக்குழலேயினளே கருதியேநிற்பாராகில்
ஆம்பொக்கநரயோகந்தா னறிந்துரையவனியோர்க்கே. 15

குருசுங்கனிருந்தவீட்டான் கூடியேயரவஞ்சேர
அரவுசசங்கதிரோனட்பி லாறினின்மூன்றினிற்கப்
பருமுச்சங்கதனைப்பொன்னும் பாம்புக்குநாலாய்நிற்க
மருவுச்சங்குழலாய்கேளாய் மருவிலாங்[illegible]ளியுண்டே. 16

அரவோடரவமதின்வீட்டா னமர்ந்தேயோருவர்க்கொருநான்கில்
உரவாயரசனீரிரண்டி லொளிசேர்வெள்ளியிருந்தாலும்
பரவாயுயர்ந்தசந்திரனும் பாம்புமதற்குச்சதிரத்தே
உரவாயிருந்தாலெங்காளு மொழியாதவர்க்குநரயோகம். 17

சிவாதிபனுஞ்சென்மமுடன் சேர்ந்தேயானோர்க்கேழாகில்
ஈவாவுடன்சேர்ந்திடப்பாம்பு மேழைமதியுமீரிரண்டிற
பாவாய்பாகமிடமறிந்து பத்தியிருந்தாற்சுங்கனுமே
ஆவாதொருகாலமுமில்லை யறையாவர்க்குநரயோகம். 18

பேரியோகம்.

சென்மாதிக்கிருபான்மூன்றிற் சேரவேசுங்கன்பொன்னும்
கன்மாதிபின்னேனேழிற் கலந்துடனிருப்பாராகில்
பொன்னுன்கிலரவஞ்சேர்ந்து போதவேயிருக்கத்தானும்
பின்சாய்ந்தகுழலினளே பேரியங்கிசமுண்டாமே. 19

ஏகச்சக்கிராதிபன்

பதிக்காறிற்புந்திநிற்க மற்றபொன்னேழிற்சேர
விதிக்காறிற்சுங்கனிற்க வீரியவிராகுதானும்
மதிக்காறினுலினல்ல பஞ்சுமன்மின்னேன்சேர
எதிர்த்தாடவெவருமில்லா வேகபூபாலனுமே. 20

அரவுஞ்சுங்கன்மதியரச னமர்ந்தவீட்டோன்றென்குநான்காய்
உரவாயிவர்க்குமேழன்றி யொருபத்தாகவிருந்தாலும்

குருவுமதியுங்கூடவதற் கொருபத்தாகவிண்டசுங்கன்
இரவும்பகலுமொருகுடைக்கீ ழேகசக்கிரவர்த்தியுமாம். 21

குருவுக்கைந்திடத்தேசுங்கன் கோலமாநவத்திற்சேர
இரவுக்குப்பகையோன்விண்டா னிவருடன்கூடிநிற்க
அரவுக்குச்சோமன்வீட்டா னவனுமேயீரிரண்டில்
மருவொக்குங்குழலினளே மணிமுடியிராஜயோகம். 22

வருவதியோகந்தானும் வளர்பிறையுச்சமாகிற்
குருவதுகடகந்தன்னிற் கூடிலக்கினத்தானத்துக்
காவதுபத்தினிற்க வவ்வெள்ளியுச்சமாகில்
இருபதுகட்கத்தானை யேறியேயரசேயாள்வன். 23

சீவாதிபனுமாலமுமே சேர்ந்தேயரசனுலாகிற
பாவாதிபனுனிறைமதியும் பத்தேசுங்கைவந்திருக்க
ஆவாவிடையினவ்வீட்டா னம்புலினின்றவதிபதியும்
ஈவாரொருவர்க்கொருநான்கி லிருந்தாலரசேயாளுவனே. 24

சதிரெதிர்வீட்டானைந்திற் சரசமாய்முன்பின்னேரும்
அதிர்தருமிலக்கினத்தே யவருமேனிற்பாராகில்
எதிரவேயிலக்கினத்தா னிருவருந்தாமஞ்சேர
மதுரமாய்நிலவும்பாம்புஞ் சதிரமேயாகில்ராஜன். 25

யோகமுண்டின்றுசொல்க வொருநான்குமைந்துஞ்சேர
ஆகமுமூன்றுமுன்னே னவருமேசேர்ந்திருக்க
நாகமுமிருந்தவீட்டா னடுப்பதினாலாய்நிற்க
ஏகமாய்ச்சுங்கன்சென்மத் தாதியுங்கூடில்ராஜன். 26

கண்டுசொல்யோகந்தன்னைக் கருத்திலாரறியவேண்டி
விண்டுநல்லரசன்சோமன் வீரியேசுங்கன்பாம்பும்
அண்டிடிலிருரெண்டாகி லவரவரிடந்தானுலாய்
வண்டுநேர்விழியாய்கேளாய் வருவதியோகந்தானே. 27

அம்புலியிருந்தவீட்டா னரசற்கோரேழினிற்க
வெம்புலிசுங்கனூரான் வீரியேசோமற்கேழில்
நம்புலிபாம்பிடத்தா னயந்துடனவர்க்கேபத்திற்
செம்புலியாகினின்றாற் செகசக்கிரவர்த்தியாமே. 28

ஒன்பதுபேருநட்பி லொருவருக்கொருவர்நாலாய்
இன்பமாயிருந்தாராகி லிரவொளிபகலால்நின்ற
அன்பதோடாறுதேச மகன்றசாம்பிராச்சியோகம்
என்பதுநாலாயொன்றி லிருந்தரசாகும்யோகம். 29

இடைசிறுமுகமுநல்ல வேந்திழையாளேகேளாய்
குடையுடன்குஞ்சம்வீசு மியோகமேகூறவேண்டில்

படைமன்னனரசன்சுங்கன் மதிபுந்தியினியோர்கூட
விடையனின்னிடத்தாரீரெண் டாயினுமிராஜயோகம், 30

கெஜயோகம்.

அரசனுமிலக்கினத்தா னரவுமேயீரிரண்டாய்ப்
பரிசமாயிருக்கநல்ல பாக்கியவானுங்கூட
விரசமாய்மதிக்குநாலில் வீரியேசுங்கனிற்க
அரசியங்குழலேகேளா யாயிரம்யானைக்கட்கும். 31

சாம்பிராஜ்யயோகம்.

அரசனிருந்தவீட்டா னம்புலிக்கேழினிற்க
விரசமாமதிதனாரான் வீரியேவெள்ளிக்கேழில்
வரிசையாயரவுநின்ற ததிபதியவர்க்குநாழிற்
சரசமாயிருந்தாராகிற் சாம்பிராஜ்யயோகமாமே. 32

யோககாண்டம் முற்றிற்று ஆக-கூங.

பலாபலக் காண்டம்.

உறவு பகை சமன்.

இரவிசனிசெவ்வாய்தானு மிவர்மூன்றும்பேரும்பரவி
அரவுமதிராசன்வீட்டா ராயிடிற்சுபரேயாவர்
வரவுதிசனிசேய்வீட்டா ராயிடிற்சுபரும்பாபர்
உரவறிந்துரைக்கலாகு முபமதுகேளாய்மாதே. 1

உதையமேழ்நான்குபத்து மவர்க்குறவுள்ளோர்கோணர்
மதியமுஞ்சதிரத்தாரும் பதியகோணர்க்குநட்பு
விதியதாறீராரெட்டில் வீரியேயிவர்க்குபொல்லார்
பதியதாங்குறிதானகேளாய் பகைநட்புமறியும்வாறே. 2

ஆறுமீராறுமெட்டோர் கோணமேசமனேயாவர்
வீரியேசெவ்வாய்காரி விளங்குமான்கதிரோன்கூட
ஏறியகோணஞ்சேர விவர்க்குமேசமனேயாவர்
கூரியகண்ணாய்கேளாய் குறியதாய்ச்சமனேசொல்லும். 3

பலன்சொல்லும் விபரம்.

பத்தேழுமுதைய்நான்கு பேருக்கும்பகைவர்கேளாய்
ஒத்தெழுமாறுமெட்டு மொருபன்னிரண்டுமாகக்
கத்தேழிலொன்றுபோகக் கருத்துளோர்சொன்னநாலே
வித்தேழுகமலமாதே விளம்பிடாய்விண்ணுளோர்க்கே. 4

அரவிருந்திடும்வீட்டார்க்கு மம்புலியிரவிக்காகார்
இரவியிந்திருந்தவீட்டா ரிவருமேயரவுக்காகார்
உரவன்றிப்பார்ககலாகா வுபமதுவறியா தார்க்கு
விரைசெறிகுழலினளே விளம்பிடாய்விளங்கத்தானே. 5

பலாபலக்காண்டம் முற்றிற்று-ஆக-௬௮.

தீர்க்காயுள்காண்டம்

தீர்க்கவயது.

மந்தனிருந்தவீட்டான் மறைப்பிலாங்கவரேசேரில்
தொந்தமாயெட்டோனட்பிற் சுகமுடனிருந்தாராகில்
அந்தமாயாதிக்காறி லவனுக்குமுன்பின்னேரும்
வந்தநாளுறவேயாகில் வயதுமேநூறதாகும். 1

அட்டமவீடத்திற்பாப ரின்றியேசுபர்கணிற்கத்
துட்டமாங்காரிநட்பிற் சுகமுடனிருந்தானாகிற்
சட்டமாயிரண்டோனின்ற சனிவீட்டான்சமனாய்நாலில்
இட்டமாயிருந்தானாகி லிவனுக்கேவயது நூறு. 2

சனிக்கிருபக்கமாறிற் சலிப்பில்லாச்சுபர்கணிற்க
விதிக்கோருவர்ட்சிநட்பாய் வீரியேயிருக்கத்தானும்
பதிக்குருசாளாய்நின்றால் பாமனர்பிணியேநூறு
அதிற்குறையாமனிற்கு மம்புலிக்கதிகமாதே. 3

விதிக்கோரீராறிலெட்டில் வெள்ளிபொன்றிங்கணிற்கச்
சனிக்காறினட்போர்னிற்கச் சமனாகச்சனிவீட்டானும்
அதற்காகநாலிற்பொன்னு மமர்ந்திருந்தேட்டோன்கூட
மதிக்கிணைமாதேகேளாய் வயதுமேநூறதாகும். 4

எட்டாறுபனிரண்டோனு மிவருமேயொருநான்காகத்
தொட்டாறுபனிரண்டெட்டோர் சுபமுடன்சேர்ந்திருக்க
நட்டாமிற்காரினிற்க நலமுள்ளோர்பார்வையாகிப்
பெட்டாறுமூன்றுமொன்றிற் பூமியிலிருப்பன்மாதே. 5

காரிக்குமீராறெட்டிற் கனகநற்சுங்கன்புத்தி
சேரிக்கையாகிநின்றார் சென்மமாதிக்குநாலாய்க்
கோரிக்கையாகவெட்டோன் கூடவேமதியுஞ்சேரப்
பாரிக்கமொன்றாய்நூறு வயதாகநிறகுமாதே 6

எட்டிடனாட்சிநட்புமிருந்துடனுச்சமாகில்
நட்டிடன்காரியுச்ச நட்புட்னாட்சிசேரக்

கட்டுடனல்லோர்பார்க்கக் காரியிலிரவியன்றித்
தொட்டிடாதிருக்கின்மாதே தோன்றியவயது நூறு 7

எட்டிருப்பக்கனல்லோ ரிருந்திடக்காரிநட்பில்
தொட்டுமுன்பின்னோர்நட்பாய்ச் சுபருமேயிருந்தாராகிற்
கட்டுடனெட்டுவீட்டான் கனகநற்சுங்கன்சேர
மட்டிலா திருப்பன்மாதே வயதுமே நூறதாக 8

எட்டுடனெட்டுவீட்டானினியவராட்சியாகில்
மட்டுடன்பாபர்பாரா ராயினுஞ்சுபரேபார்க்கக்
கட்டுட னுதையந்தன்னிற் கனகநற்சுங்கனிற்க
விட்டிடா திருக்கி நூறு வயதாகவிருப்பன்மாதே. 9

எட்டவனிரண்டினிற்க வேழுட னுதயஞ்சேரத்
தொட்டவன் தர்மமூன்றிற் றோன்றியேபாபர்பாரா
விட்டவனரசன்பத்தில் வீரியேநின்றானாகில்
இட்டவனாகிவாழ்வ ரிவனுக்கேவயது நூறு 10

ஆறெட்டுக்குடையோர்சேர்ந்திட் டவ்விரையத்தினிற்க
மாறெட்டுவிரையத்தானு மறுத்துமாறெட்டினிற்கக்
கூறெட்டுமுதையந்தன்னிற் குருவாகிச்சுங்கனிற்க
ஏறிட்டுவயது நூறா யிருப்பனேபுவியின்மாதே. 11

சோமனார்பெருமையாகிச் சோதிசேர்வெள்ளிக்கேழிற்
காமனாரசனாலிற் காரியுநின்றானாகிற்
பாமனாரிரவிசேயும் பாம்புமேபாராராகில்
ஏமனாறழைத்திட்டாலு மிருப்பனேவயது நூறாய் 12

உதையத்திற்சுபரேநிற்க வொருபகையாரும்பாரா
மதியத்தினல்லோன்றி மத்தயரிருக்கலாகா
அதையத்திற்சுபரேகூடி யம்புலிபெருமையாகில்
விதியற்றுபோகாதாகி மேதினியிருப்ப நூறாய் 13

உதையாதிபதியுநட்பா யாட்சியுமுச்சமாகில்
மதியாகிலாட்சியுச்ச நட்புடன்பெருமையாகில்
இசையாதிபாபர்பாரா ரென்னினுஞ்சுபரேபார்க்கச்
சிதையாமநூறதாகிச் சிறியதோர்மாதேநிற்கும் 14

கதிரெதிரெழுந்தோர் சமர்த்தராய்க்கோணஞ்சேரச்
சதிரெதிர்வீட்டோனட்பாய்ச் சரசமாய்நிற்கத்தானும்
எதிரதிர்குருவேநிற்க விந்துநட்புச்சமாகிற்
கதிரவன் போலவாகிக் கனக்கவேவயது நூறு 15

தோணியவிலக்கினத்தான் சோமனாரிருந்தவீட்டான்
பேணியவெட்டோன்காரி பிறிவினை யில்லாதாகிக்
காணியேசுங்கன்புந்தி கனகனல்லரசன்சேரப்
பூணியேவிதியுயர்ந்து பூமியிலிருப்பன்மாதே 16

சனியுடன்யாபர்கூடித் தானுமேயாறெட்டாகில்
விதியுமேயாட்சிநட்பாய் வீரியசுபரேபார்க்கப்
பதிமதியரசன்சேரப் பாங்குடன் சுங்கனிற்கில்
அதிபதியாகிநிற்ப னவனுக்கேவயதுநூறு 17

உறபதியாதினின்று யுதையாதிபதிக்குநட்பாய்
நற்பதிசேர்ந்துனிற்க ஞாயிறுபாராதாகிச்
சர்ப்பதிகாரிசெவ்வாய் சரசமாய்க்கோணஞ்சேர
னிற்பதுவயதுநூறு நினைவதையுரைப்பர்மாதே 18

மதிபதியதர்க்குநாலின் மன்னவன்புந்திசுங்கன்
அதிபதியதர்க்கும்பத்தி லவரிருந்திடவேநோக்க
விதிபதியிரவிகாரி வீரியசெவ்வாய்தானும்
மதிபதிகோணனின்றால் விதியதுநூறதாகும் 19

தீர்க்காயுட்காண்டம்-முற்றிற்று-ஆக-௱கஎ.

பிரதியோக காண்டம்.

சத்தமவிடத்தான்றானுஞ் சதிரெதிர்பதியார்கூடி
உத்தமபாக்கியத்தி லுடையவன்கூடச்சேர
அத்தமமில்லாதாகி யைந்துளோன் சன்மஞ்சேர
உத்தமசிவனேநிற்கி லிருந்திடிவிராஜயோகம் 1

ஏழிடமுதயமெட்டி லிருக்கவேயெட்டிற்பின்னேன்
வாழ்வுடன்னியாயனிற்க வருமந்தராஜயோகம்
ஆழியின்தீவுமல்லா மவனதாயரசேயாள்வான்
தோழீனற்கமலமாதே சொல்லிதையவனியோர்க்கே. 2

இராஜயோகம்.

சதிர்ப்பஞ்சத்தானுங்கூடிச் சத்தமஞ்சேர்ந்திருக்க
அதற்கெதிற்பதியேசேரவுற் றேழிரண்டதனினிற்க
அதிர்நவத்திடத்தானாரி லன்றியேயிணக்குஞ்சேர
மதுரமாய்ச்சிவலாபஞ் சேர்ந்திடிவிராஜயோகம். 3

மதிபதியரசன்முன்னேர் பக்கமாய்ச்சுங்கனிற்க
விதிபதியாட்சிநட்பு வேண்டியேநிற்குமாகில்
அதிபதியரசற்கேழி லவனிருந்திடநேர்நோக்கச்
சதிபதிமாதேகேளாய் தாழ்விலாதரசேயாள்வன். 4

உதயமெய்யினியவாளு மொன்றியேநடுவாய்நிற்கக்
கதிர்காரிசெவ்வாய்தானுங் கனத்தவீராறிற்சேரக்
கதிரொளியெங்குந்தீபங் கனத்தமெர்க்கசேஷனாகி
மதித்தவழ்கயிலைகாத்த வண்மைபோலிருப்பன்மாதே. 5

அரவுடனிருந்தவீட்டா னாறிரண்டதனிலில்லாத்
திரமுடனான்கிற்பத்திற் சேயகாரியிரவியன்றிக்
கரமுடனரசன்சோமன கடுவெள்ளியிருக்கக்கூட
உரமுடனிலக்கினத்தா னுடற்பதிசேர்ந்தால்யோகம். 6

பறித்தலக்னாதியாகிப் பாக்கியவிடத்துக்கிப்பாற்
குறித்தைந்துநான்குபேருங் குறையில்லாதணியாய்நிற்க
நெறித்துலோகாதியல்லா நிலையதாயரசேயாள்வன்
வெறித்தகாமத்தினாலே விண்ணுளோர்க்குரைப்பாய்மாதே. 7

பத்துடன்முன்னும்பின்னும் பருமதிச்சுங்கன்புந்தி
இத்துடனரவஞ்சேர்வுற் றிருக்கவேயிரவியன்றி
ஒத்துடனுதயந்தன்னி லுதையாதிகுருவுநின்றாற்
கத்துடன்பெருமையாகிக் கனக்கவேயரசேயாள்வன். 8

நாலுகேந்திரத்தாராட்சி நல்லுச்சமாகிநிற்கக்
கோலெதிர்நவத்தார்கூடிக் கொடும்பகையாருமின்றி
மேலுகந்திடவேசோமன் மேருவினின்றானில்
ஆலுகந்தமர்ந்தமாதே யரசாளுமிராஜயோகம். 9

பத்துடன்பத்துவீட்டிற் பதியைந்துபேருநிற்க
ஒத்துடனான்குபேரு முடுப்பதிசேர்ந்துநிற்க
எத்துடன்சிங்கம்போலே யிருப்பனேயரசேயாண்டு
வித்துடன்கமலமாதே விளம்பிடாயுலகுள்ளோர்க்கே. 10

ஏழுடனேழுவீட்டா னிருந்தைந்துபேருநிற்கத்
தாழ்வுடனிருந்தாராகில் வருமந்தராஜயோகம்
வாழ்வுடனிருந்தாராகில் வருமந்தராஜயோகம்
வீழிடாதரசேயாண்டு மேதினியிருப்பன்மாதே. 11

வாகத்திற்பதியுமூன்று பேருமாய்கூடிநிற்க
நாகத்திற்சேர்ந்துநான்கு பேருமாயுதையஞ்சேர
யோகத்திற்றாழ்வில்லாம லொளிகண்டதூரமெல்லாம்
போகத்திற்சமர்த்தனாகிப் பொருந்தியேயரசேயாள்வன். 12

நாமகன்னிடத்தார்சேர்ந்து நற்பதிலாபஞ்சேர
காகமன்னிரவிசேய்க்குக் கனத்தவீராறினிற்க
வாகமன்னிடத்தான்சோமன் வந்தநாளதனினிற்க
யோகமன்சோமன்வீட்டா னுதையத்திலிருக்கில்ராஜன். 13

அஞ்சுடனஞ்சுவீட்டி லதிபதிநான்குபேரும்
கொஞ்சியேகூடிநிற்கக் கோலமாய்மற்றோர்லாபம்
மிஞ்சியேயிருந்தாராகில் மிருகத்தின்மேடைமீதில்
வஞ்சியேயரசனாகி வையகமெங்குங்காப்பான். 14

சந்திரலக்கினாதி சரசமாயுச்சமாகி
வந்தெதிரேருனின்று வளர்பாம்புநாலாய்நிற்க

தந்திரராஜனட்பாய்த் தனியதனுதையநின்றாற்
கொந்தலர்குழலினாளே குவலயமெங்குமாள்வன். 15

மதியிருந்துறும்வீட்டானு மகிழ்ந்துடனுதயஞ்சேரப்
பதியவன்மதியுங்கூடிப் பத்தினினிற்கத்தானும்
அதிற்கதியரசனேழி லமர்ந்துடனிருந்தாராகிற்
பதிவிதமாதேகேளாய் பாராளுமிராஜயோகம். 16

அரசனார்பெலத்துநிற்க வம்புலிபெருமையாகிச்
சரசமாய்ச்சுங்கன்புந்தி சலிப்பிலாவரவங்கூட
அரசுமாயிலக்கினாகி யாதிசென்மாதிநட்பாய்
உரசதிர்நின்றாராகி லோங்கிடுமிராஜயோகம். 17

சுந்திரவியாழும்புந்தி சுக்கிரனிருக்கில்விட்டார்
வந்தெதிரீரவத்தோடே வருமிலக்னாதிகூடச்
சந்திரவிலக்கினாதி சுதிரமாய்நின்றாராகில்
உந்தரசாளுமியோக முண்டென்றுசொல்வாய்மாதே. 18

பகையோராட்சிநட்பாகப் பருமதியிர்வஞ்சதிராக
மிகையோர்குருபதற்கேழாக மீன்வென்னிமதிக்கேயெதிராகப்
புகையோரிவர்க்கிங்கிடமாகப் புண்ணியரிதற்குவலமாக
இகையோரிப்படிநலமாக விருந்தால்வருமேயரசாள. 19

செனித்தலக்கினாதிநல்ல சென்மா கூடப்பார்க்கப்
பனித்திடுமதிக்குமுன்பின் பாதியினின்றாராகிற்
பனிக்கெடுமிரவிபோலப் பாராளயோகமுண்டு
இனிப்பொருள்சகலயோக மேந்திழைமாதேயுண்டு. 20

உதித்திடமொருவனிற்க வொருமூன்றிற்கிரகமுன்னே
உதித்திடப்பின்னேநாலு கிரகமுங்கலவாநிற்கச்
செனித்தவற்றுடனேசிங்கஞ் செகமெலாமாளும்யோகம்
விதித்திடமுண்டுபாக்கியம் வேண்டியசிவிகையேறும். 21

சுந்திரரிருப்பிடத்துச் சூழ்கின்றோர்முன்னால்பின்னால்
வந்திவரெதிரில்லாமல் வலமிடஞ்சூழ்ந்துநின்றால்
இந்திரவிமானம்போல விருக்குமேசிவிகையோகம்
கொந்தலர்குழலினாளே குறியிதுதப்பாமாதே. 22

மதிக்குமுன்பின்னேழ்வீட்டின் மற்றொருகிரகமில்லா
விதிக்குயர்தர்மகர்மம் வீறிலாதிதனாலாற்
பதிக்கொருகிரகமாகிற் பாராளயோகமுண்டு
இதற்கொருகலனேயில்லை யேந்திழைமாதேசொல்வாய். 23

அம்புலிநின்றவீட்டுக் காறெட்டேழ்கிரகனிற்க
நம்புவியாண்டளப்பா னடுமனையேழினிற்கச்
சொம்புடனரவங்கூடிச சூரியனாறெட்டாகில்
இன்புவியாள்வன்கண்டா யிதுகுறிதப்பாமாதே. 24

இந்துவுக்கைந்திற்கோட்களிருந்திடிற்பாக்கியமெட்டி
சந்திரற்கேழின்மன்னன் றனியனுய்னின்முறைகில்
வந்திடும்யோகமில்லா வம்சமும்விர்த்தியாகும்
அன்னியமாகுமெட்டு மவனியின்மாறுயோகம். 25

காமனுரிருந்தவீட்டான் கண்டிடிலுதயத்தேழிற்
சோமனுர்க்குதையோனேழிற் றேய்ந்துடன்குருவேனின்றும்
பூமனுர்க்குதையமாகும் பொன்னவர்க்கேழேனுவிற்
பாம்புநால்சுங்கன்கூடப் பற்றிறைல்யோகமுண்டே. 26

வெள்ளியும்வியாழஞ்சோமன் வேறொருகிரகங்கூடாத
தெள்ளியேமூன்றுபேருஞ் சீருடனவமஞ்சானல்
ஒள்ளியதனமுமுண்டா யோங்கிடும்யோகமெல்லாம்
அள்ளியவமிர்தமன்னு யரசாளும்யோகமுண்டே. 27

குருமதிநாலாமனிற்க் குணமுள்ளவெள்ளிக்கேழிற்
பருமதிநாலேயாறற் பாக்கியம்வேணதுண்டு
திருகதேயில்லேகண்டாய் செல்வமும்யோகமுண்டு
வருவதுசிவிகையோகம் வையகமாளுமாதே. 28

ஏழுடன்மதியுனிற்க வினியவனிதையஞ்சேர
வாழுமோர்பாக்கியன்சுங்கன் வருமதிலாம்பொன்னும்
சூழ்வதிர்பாபான்றிச் சுத்தமாய்நின்றாகில்
தாழ்வொருநாளுமின்றித் தழைத்திடுஞ்சிவிகையோகம். 29

சந்திரர்க்காரிபுந்தி சலிப்பிலாவாசனேழிற்
சுந்திரர்க்கெட்டிற்சுங்கன் சூரியன்கரிசேய்கூடா
வந்திவர்தனியேநின்றல் வருமந்தராஜயோகம்
சந்திவன்சிவிகையேற மோங்கிடுமாதேகேளாய். 30

சிதனிருந்திடும்வீட்டானுஞ் சிந்தையோர்க்கேழேயாக
மதனிருந்திடுவீட்டானு மந்திரிக்கேழேயாகிற்
பதவிதயோகபாக்கியம் பருவதம்போலேநிற்கும்
இதமுளமாதேகேளா யேறுவர்யானையோகம். 31

ஏகச்சக்கிராதிபன்.

நாளுகோளுச்சமாதி நகருளோராட்சியாக
மாலுள்கேந்திரத்தின் மறுத்தங்கேயொருநான்காக
ஏழுடனின்றாகி லிவனுக்கோராஜயோகம்
சேலுடன்செங்கோலாளுஞ் செகச்சக்கிரவர்த்தியாமே. 32

நால்சதிரமுக்கோண நலமானதனலாப நாலிரண்டாறீறினும் [மும்
மால்பெருகுமாட்சியாய் மருநீசவுச்சமாய்மகிமைபகைநட்பஸ்த
ஏல்பெருகுமிதினின்ற வேழிரண்டவர்தாமிருக்குமதுகோணமாகச்
சேலுடனிரண்டுநாள்குற்றிடப்பெற்றிற்செகச்சக்கிரவர்த்தியாமே

நரயோகம்.

பாம்புளபதிக்கிரண்டு பண்புடனிற்பானாகில்
ஆமுடவனுமேனின்ற வதற்காறிலைந்திற்சேயும்
போமினுடதிக்குநாலிற் பொன்னவனின்றானாகிற்
காம்பிளமூலையினாளே கரிநரயோகமுண்டே. 34

மதிநின்றவிடத்தினாலின் மன்னவனதனால்சுங்கன்
விதிநின்றவிடத்துக்காறில் வெண்கதிர்பூமனிற்க
பதிபாவின்னிபத்தார் பற்றியேநாலேழாகிற்
குதிகொளுநரயோகந்தான் கொடுங்கணைவிழியினாளே. 35

ஈரஞ்சுதலத்தோன்கூட விருலாபமானோர்சேர
ஓரஞ்சுநாலேழோனு மொருமையாய்க்கூடிநிற்கப்
பாரஞ்சுவிடத்திர்சோமன் பரித்தவனுடனேகூட
ஆரணசோரிடத்தான்லாப மாயினால்யோகமுண்டே. 36

சதபாரியனாய்உலகாளும்அரசு,

உதித்தவன்புருடனாகி யுயர்மதியிடத்தோன்பெண்ணாய்க்
கதித்தவர்நடுவாய்நிற்கக் காரியவானுமானாய்
மதித்திடம்வந்துநிற்க மணியரிவிரவிகேழில்
விதித்ததுபாரிநூறாய் விண்ணுலகெங்குமாள்வன். 37

உதைமதியிவர்களானும் பெண்ணுமாய்நடுவேயேழில்
அதையவன்புருடனாகி யம்புரியுடனேசேர
இதவுடனிரவிசேர்வுற் றிருக்கவும்பக்கமாகச்
சதமனையுடனேசேர்ந்து தாகமாயரசேயாள்வன். 38

அநந்தபாரியனாய் உலகாளும்அரசு.

உதையாதிபெண்ணேயாகி யுயர்மதியிடத்தோனானாய்
மதியாமனடுவேயேழின் மனையிடமதியும்பெண்ணாய
பதியதாயிரவிகூடப் பாம்புமேசேர்ந்துநிற்க
அதிகதாயநேகம்பாரி லதுவுண்டாயரசேயாள்வன். 39

குமுதயோகம்.

கரிமதிசுங்கன்ராஜன் கனகவேயுச்சமாகிக்
கொரியரவுக்குநாலாய்க் கோணமாய் நின்றாராகிற்
பரியொருசத்ருமாகாப் பரிமளகுமுதேயோகம்
அருமவரெதிரிலலாமல் லரசதாயாளுமன்னன் 40

முரசயோகம்.

ஆதித்தன்சுங்கன்காரி யமர்ந்தொருசெவ்வாயுச்ச
வேதத்தின்ரவஞ்சேர்ந்து விண்மதிபதிக்குநான்கிற்

சோதித்துநின்றாராகிற் சொல்லுநன்முரசயோகம்
நாதித்துமுழங்கத்தானே நாடெலாமரசேயாள்வன் 41

சகடயோகம்.

ஏழிடமுதையமட்டி லிருக்கவேகுருவுகட்பில்
தாழ்வுடனீராறெட்டிற் றனியனுப்சோமனுகில்
வாழிடங்குலைந்துநின்று வருவதேயோகந்தப்பி
போழிதர்க்கமலமாதே பொல்லாதசகடயோகம். 42

சொற்குறிகனலாபமாகவேநின்றதன் சுகமானபாக்கியமீதில்
வெற்பொரும்பன்னிரண்டெட்டாறினிற்கிலுமிக்கத்தரித்திரயோக
சொற்கினியசகலருங்கூடியாருகவொரு கோணமதில் கேந்திரமே
பற்கினியதனலாபமாயினிவர்பாக்யம்பற்றியும்பற்றுததே[ட்டில் 43

ஒருவிதமாகவுண்டோ வுலகுள்ளமாந்தர்க்கெல்லாம்
வருபதவாக்கியமுண்டே வகுத்துடன்மதியாலாய்ந்து
பொருந்ததைப்பார்க்கவுண்டோ யோவது மாங்தங்கோடி
கருவினுக்கினியசாரங் கண்டுடன்சொல்லாய்மாதே. 44

செல்வன்.

நாலுடனுலினல்லோர் நயந்துடனிருக்கத்தானும்
சேலுடன் சென்மமாதிசேரவேசுபர்கள்பக்கம்
மாலுடன்பாபர்பாரா ராயினுமாதேகேளாய்
பாலுடன்பவிஷுண்டாகிப் பாக்கியவானுமாமே. 45

தனமொடுமினத்தான்லாபந் தனியனுய்நிற்கத்தானும்
மனமொடிலாபந்தானு மகிழ்ந்துடன்றனமேசேரத்
தனமொடிலக்கணத்தான் றனித்துகோணத்தினிற்கத்
தனமிடுபேர்கட்கெல்லாந் தலைவனுயிருப்பன்மாதே. 46

மூணுகோணத்தார்கூடி முன்சதிரத்தினிற்கக்
காணுமேயிலக்கணத்தான் கலந்தொருசதிரத்தாரும்
வேணுமென்றவற்றினின்றல்வேண்டியபாக்கியமுண்டு
சேணுயரிரவிபோலச் செகத்தினிலிருப்பன்மாதே 47

தரித்திரன்.

இந்தொருகுறியிற்பா ரிருந்திடவஸ்தமிக்க
வந்தெதிரீராறெட்டோன் வலத்திடத்திருந்தாராகின்
முந்தொருசொன்னயோக முதற்பாதியாகுநிற்கும்
கொந்தலர்குழலினளே குறியிதுசொல்லுவாயே. ()

தென்மாதிதனக்கு நான்கிற் சேர்ந்திடக்காரிசெவ்வாய்
தன்மாதிதனத்தோனெட்டிற் றனித்தாறிற்குருவேநிற்கச்

கன்மாதிபதியுஞ்சேர்ந்து கனத்தவீராறிற்சேர்ந்தாற்
பொன்மாதினரசேகேளாய் புகழில்லா தரித்திரயோகம். ()

யோகமேயில்லைகேளா யொருநான்கிற்சனிசெவ்வாயும்
நாகமேயிதற்குநான்கி னடுவெதிரிரவிநிற்க
வேகமேயிலக்கினதி வெண்மதிக்கெட்டோன்கூடிற்
சாகவேநினைவதாகிச் சலிப்புடனிருப்பன்மாதே. 50

சந்திரவிலக்கினதி தனியராயிரவிகூட
வந்தெதிருதையத்தானும் பருமதிற்சனியும்பாம்பும்
அங்கொருநடுவேராஜ னவர்க்கேழிற்சுங்கன்செவ்வாய்
இங்கொருவிதமாய்நின்று லிவனுக்கேயோகமில்லை 51

பாம்புடனினியவர்க்கும் பத்தினிற்சுபரிலாமல்
ஆமிடத்தனிற்றீய ரவரிருந்திடவேசேரச்
சோம்புடனிலக்கினித்திற் சூரியனின்றனுகிற்
காம்பிளமுலையினளே காணுதியோகந்தானே. 52

யோகமேயில்லைகேளா யுதையதிசனிசெவ்வாய்க்கும்
நாகமேபனிரண்டாகிற் நற்குருசோமனெட்டில்
வேகமேசோமன்புந்தி வேந்தற்குபனிரண்டாகிற்
சோகமேயடைந்துநிற்பன் றொல்புவியோர்க்குமாதே 43

உதையத்திலாரெட்டோனு மவர்க்கோர்பத்திலிரவிசுங்கன்
அதையத்துக்கேழிற்காரி யம்புலியிரவினிற்கச்
சிதைவுற்றசென்மத்தாதி சேர்ந்துசேய்க்குருவுமெட்டில்
இதையுறின்யோகமின்றி யிருப்பனென்றிசைத்திடாயே ()

எட்டவனுதயஞ்சேர்ந்தங் கிருப்பவனெட்டினிற்க
மட்டவனிலாபஞ்சேர வதின்மன்னன்விரையஞ்சேரத்
தொட்டவன்றர்மமாறிற் றுனிப்பவன்றர்மஞ்சேர
விட்டவன்போலனின்று வியனுலகிருப்பன்மாதே. 55

நற்படி மன்னர்தானு நலமிலாவாறெட்டாகப்
பொற்படிததீயரெல்லாம் பொருந்தியேசதுரமாகிற்
கற்படிப்போலநின்று கலங்குவன்புவியின்மாதே
இப்படியிருந்தால்யோகமிழந்துடன்போமென்றுசொல்வாய் 56

வருவதேயில்லையோகம் வளர்பிறையில்லாதாகி
இருபதிலுதையமேழுக் கினியாளேசனிக்கேநாலாய்
மருவது மில்லாக்கோண மன்னவரவிசெவ்வாய்
ஒருபதிசனிக்கேழ்நின்று லொருநாளும்யோகமில்லை 57

சனிக்குநாலரவநிற்கச் சத்தமஞ்செவ்வாய்சேர
மதிக்குநாலிரவிநிற்க மற்றைபொன்சுங்கன்புந்தி
பதிக்கொருவீனமாகிப் பார்க்கவும்பாபர்தாமும்
இனிக்கையில்யோகமில்லை யேந்திழைமாதேகேளாய். 58

ஈரெட்டானோர்சதிரத்தி லிருநான்குதையமேழோனும்
மாறெட்டாகவீரா றின் மறுத்துநின்றாராமாகில்
ஆறெட்டாகவதற்கேழி லமர்ந்தேகோணத்தவ்வீட்டார்
சீறாட்டாகவிருந்தா லுஞ் சிதையுஞ்செல்வந்தரித்திரனே. 59

அயர்ந்ததோரிரண்டுவீட்டி லணுகியேசுபர்கணிற்க
உயர்ந்தொருகேந்திரகோண மோங்கியேபாபர்சேர
விறன்றருமதிதமீன மாகினான்மாதேகேளாய்
பயன்றருபாக்கியமில்லை பரதேசியாகிநிற்பன். 60

வயந்தருவுதையந்தன்னில் வலமதிற்பாபர்நிற்கச்
சயந்தருகலையுஞ்சோமன் சப்தமாய்ச்சனியுஞ்சேர
முயன்றிடுகேந்திரத்தின் முழுகதிர்வெள்ளிராசன்
இயைந்தொருவிதமாய்நின்றா லிவனுக்கேயோகமில்லை. 61

ஆறாமிடத்துக்கதிபதியு மம்புலிசனியரவற்கூட்
மாறாத்தனையொருசேயு மறுத்தேபனிரண்டவன்கூடப்
பேறாயிடத்தான்பிருகாசு புந்தியிரவிபெட்புறினும்
எறாட்டத்துக்கினியவனை யெடுத்தேதிரிவன்புவிமீதில். 62

நாலாமிடத்துக்கதிபதியு நயந்தேபனிரண்டவன்சேர
மேலாமிடத்துக்கெட்டோனும் விண்மதிசனியுஞ்சேர்ந்திடவே
ஆலால்விடத்துக்கதிபதியோ னமர்ந்தேசெவ்வாயிரவியுடன்
சேலாவிழியாயிருக்கினுமே சேருமிடமுமரிதாமே 63

நண்டோரதிபதிநலனில்லா நற்குருசுங்கன்சனியல்லார்
உண்டோரிவர்க்குண்டாகி லுரையிடுமதிபதியேழாகிற்
வண்டார்குழலாயுலகதனில் வந்துற்பவித்தோர்தமக்கெல்லாம்
கண்டோ தூஷணமதுசெய்யக் கலங்கித்தவித்திங்கிருப்பானே. 64

ஜொந்தமாய்ப்பாபர்சேர்ந்து சோபமாய்ச்சுபர்கணிற்க
அந்தமாய்ப்பாபர்நான்கி லரவுமேநின்றாராகில்
விந்தமாயிலக்கினாதி விண்மதியஸ்தமிக்கில்
எந்தநாளிருப்புமட்டு மிவனுக்குயோகமில்லை. 65

சேர்ந்துடன்பாபர்நாலாய்ச் சென்மாதிபதிக்குப்பத்தாய்
பேர்ந்துடனின்றாராகிப் பிருகாசவனேநீசம்
சேர்ந்துடன் சுபர்கணிற்கிற் செப்பவேயோகமில்லை
வாழ்ந்துடனிருப்ப துண்டோ வந்தநாண்முதலாய்மாதே. 66

இரவிசுன்னிருந்தவீட்டுக் கேழிடன்சமாசுங்கன்
பாவியசோமன்பற்றிப் பாக்கியவானுங்கூடி
அரவுசேய்நாலினின்றா லவனுக்கேயோகமில்லை
மரபுகண்டுரைத்தல்வேண்டு மனத்தினாலறிந்துமாதே. 67

மந்தன்மாமதிகெட்டோனு மருவியெட்டயன்றனுலாய்த்
தொந்தமாய்ச்செவ்வாய்நின்றார் சொல்லவேயோகமில்லை
வந்தநாண்முதலாய்த்தானே வண்ணிலிவ்வுடலமாளும்
அந்தநாளளவுமேழை யாகியேயலைவன்மாதே 68

உதையாதிநின்றவீட்டுக் கெட்டவனுதயநிற்க
மதியானதீனமாகி மந்தனார்கூடிநிற்க
அதிலாகவிரவிபொன்சேய்க்கமர்ந்துடனுலினிற்க
இதமாகவிருந்தாராகி லிவனுக்கேயோகமில்லை. 69

மதியுறுமிடத்துக்கெட்டோன் மகிழ்ந்துடனுதயநிற்கப்
பதியுதயத்துக்கெட்டோன் பனிமதியுடனேசேர
இதுபதியிடத்தார்தாமு மிருவருமாறெட்டாகச்
சதிபதிமாதேநின்றாற் சற்றுமேயோகமில்லை. 70

இப்படிச்சொன்னநூலி லிதிற்குலைசுங்கன்புந்தி
நற்படிசோமநின்று னலமுளோன்பாக்யவானுய்ச்
சொற்படிகல்வியுண்டாய்ச் சுகமுடனிருப்பன்மாதே
பற்படிநன்மைதீமைப் பலனறிந்தினிதுசொல்லே. 71

நண்டவன்குழிகிநிற்க நடுமனைநீலனிற்க
உண்டுபொன்விரையமாக வோரேழிற்றீயர்நிற்க
ரெண்டவனெட்டினிற்க ரெத்தமேனியனுங்கூட
விண்டுமேலாபமாறில் விரையமாம்யோகமில்லை. ()

தனலாபபாக்கியமானோர் தனியராவீராறெட்டிற்
குணமிலாவீராறெட்டோர் குறித்ததனலாபபாக்கியம்
இனமதிலொருவராகி யிருந்திடில்யோகமில்லை
மனமதிற்றுயரமாகி மண்ணினிலிருப்பன்மாதே. ()

வீரியமந்தன்கூடி வெண்கதிர்நாலேயாகப்
பாரின் வெய்யோனுக்கேழிற் பாராளுமரசன்சுங்கன்
சூரியனுலிற்பூமன் சுத்தமாய்நின்றாராகிற்
கூறியபதியும்பின்னே குறிகிடும்யோகமில்லை. ()

அரவுமேசனிக்குநாலா யந்தணனிரவிகூட
மரைவுளோன்புதற்குநாலாய் மந்திரிசனிக்கேழாகில்
திரமுளவுதையத்தானுஞ் செவ்வாயும் விரையமானாற்
குறையுளோனுகிவாழுங் கொடுங்கணைவிழியிறாளே. ()

விரையாதிலாபமாக வெண்கதிருடனேசோமன்
மறையோனும்விரையமாக மந்திரியாரெட்டாகும்
பிறையோனுஞ்சனிக்குநாலிற் பெரியராப்பூமன்கூடில்
நிறையாகயோகமின்றி நிற்பனேபுவியின்மாதே. ()

வில்லவனெட்டினிற்க விரையனுமுதையமாக
னில்லொணுமதியுஞ்சீர்ண னிறைதனலாபமானோர்
வல்லவனிரவிகூடில் வகையறத்தனமேநாசம்
நல்லதுமில்லைமாதே நலங்குன்றும்யோகமில்லை. ()

விதித்தவனுதையனிற்க விரையனும்லாபமாக
உதித்தவனெட்டினிற்க வோருபிறைசனிக்கேழாகிற்
செனித்தவனுடனேழ்வேந்தன் செவ்வாய்க்குநாலேயாகிற்
கதித்தொருநாளும்யோகங் கண்டிடாதறிவாய்மாதே. ()

யோகமேயில்லைகேளா யொருநான்கிற்சனிசெவ்வாயும்
நாகமே கலந்திருக்க நண்டவனீநமாக
வேகமாய்ச்சுங்கன்பொன்னும் வேந்தனோடேழேயாகிற்
போகமும்யோகமில்லை பொல்லாதுகெடுதிமாதே. 79

குருபகவான்சொன்னயோகம்.

செனித்தவர்க்கேழ்நால்பத்தோர் சேர்ந்துடன்மதிக்கைந்தாகி
மதித்தவர்கோணர்கூடிச் செனித்தவர்கர்மஞ்சேர்ந்தால்
இனிப்பெருஞ்செல்வமுண்டா மென்னவேகெஜமேற்கொண்டு
தொனித்தவனரசேயாண்டு தொண்ணூறும்பத்துநிற்பன். 80

சென்மலக்கினத்துக்கோரோன் பதினைந்தோன் கூடினிற்க
தன்பதிமதிக்கேழ்நாலிற் பத்தினிற்கூடிநிற்க
இன்பராக்கதிரிராஜ னிருந்ததிற்கேந்திரங்கூடித்
துன்பமற்றுதையோன்கோண மாயின்முற்பலனேயாகும். 81

உதையாதிமதிக்கேயேழின் மதிபதியுதித்தோர்க்கேழின்
சிதைவறநிற்கமற்றோர் சிறந்திருபுறமுநிற்கிற்
குறைவறச்செல்வமுண்டாய்க் குபேரனுபுலகையாண்டு
அரையிலாதிருப்பநூறு யாயிரம்பிறைதான்கண்டே. 82

பிறைனின்றவிடத்துநாலோன் பின்புதையத்திக்கைந்தில்
இறையவன்பிறைக்குப்பத்தி லிருந்திடிலிராஜயோகம்
குறையன்றிசெல்வமேலாய்க் கொடுப்பரிப்படிமேனின்றால்
அறையொன்றுமில்லைகேளா யம்புலிக்கனையமாதே. 83

நின்றவிலக்கினத்துக் கோர்பத்தோனிறைமதிக்கு
அன்னையோனைந்திற்கூடி லவனுக்கோராஜயோகம்
துன்மையொன்றில்லாச்செல்வஞ் சுபமதாயிருப்பநூறாய்த்
தன்னையொப்பில்லாயோகந் தரணியிலவர்க்குண்டாமே. 84

கண்டுதையத்தோன்பத்தோன் கனமதியதர்க்குத்தர்மன்
கொண்டுதையத்துப்பத்திற் கூடவுமதிக்குநாலோன்

உண்டுயிர்க்கைந்தினின்று லுலகுக்கோராஜயோகம்
அண்டினோர்க்கமுதமீயு மதியோகசாலியாவன். 85

உதித்தவர்கைந்தினுலோன் மதித்தவர்நவநாலாக
மதித்தவர்கர்மத்தானு முதித்தவர்க்கென்பதாகக்
குதித்தவர்மதிக்கைந்தோனுங் கூடிறையுடனேநின்றுற்
கதித்தவர்ராஜராஜ யோகமுமுண்டுமாதே. 86

பெற்றிடத்தைந்துவிட்டான் தறைக்குமேநாலேயாக
மற்றிடமதியுநாலோன் பெற்றிடத்தைந்துணிற்க
இத்துடன்பத்துவீட்டா னிருக்கவும்ராஜராஜன்
பெற்றுடனிருக்கும்ராஜ பேருக்கோராஜசிங்கம். 87

மதிக்கிலாபாதிமன்னன் மகிழ்ந்துறைதனத்தினிற்க
அதற்குறைதனலாபத்தா னவ்வெள்ளியுடனேகூடி
எதிர்த்துடன்மதிக்கிலாபமிருந்திடிலிராஜயோகம்
குதித்துடன்யானைமாவுங் கூட்டமுமனேகமுண்டு. 88

செனித்தலாபாதிமன்னின் சேர்ந்துடன்மதிக்கிரண்டில்
இனிப்பெருமதிக்குதித்தோ னிவரிவர்நவத்தோர்கூடிப்
பெருந்துறைகர்மஞ்சேர்ந்தாற் பேருள்ளராஜனவன்
தனித்தன்றுசென்மமேற்கொண்டு தானுமேயுலகையாள்வன். 89

கண்டிடுயில்க்கினத்தான் கனமதியிடத்தான்கூடி
உண்டுயிர்மதிக்குப்பத்தி லொருமையாய்நிற்கமற்றோற்
அண்டியேயிவர்க்கிலாப மாயினன்மாதேகேளாய்
தெண்டிரைசூழுநாடுந் தேசமுமாளவல்லன். 90

உடற்குநாலைந்தோன்கூடி யுயிர்க்குமிரைந்துநிற்க
மடற்பெருமதிக்குநாலின் மன்னவனவத்தோன்கூட
விடத்திடத்துயிரிற்சந்திர னவ்விடந்தனினின்றுற்
கிடப்பருஞ்செல்வமுண்டாய்க் கனக்கவேயரசேயாள்வன். 91

குறிநிலைதனத்தோன்மந்திரிக் கோர்பதிலாபத்தானும்
மறிநிலைலாபமாகிப் பத்தவன்மதிக்கைந்தாக
அறியவேநவத்தோனின்ற வம்மனைமதிக்குநாலாய்
நெறியிலாதிருக்கில்ராஜ யோகந்தானிஜமாயுண்டே. 92

பறித்தவன்மதியோடாயப் பதியவனுறையனிற்கச்
செனித்தவர்க்கேழின்மந்திரி சென்மாதிக்கேழின்சுங்கன்
குறித்தவர்நிற்கவிவர்க் கவர்கோணகேந்திரமாகில்
மறித்தொருவரையும்பாரா ராயினுஞ்செகமேயாள்வன். 93

இங்கொருவுறையத்தானுன் றிருநதி மதிக்கிலாபம்
அங்கொருமதிவிட்டானு மாசனுமுதித்தோர்லாபம்

சந்திருந்ததற்கேழ்சுங்கன் சாய்விலாப்பிறையுமாகில்
உகந்தொருசேடனாகி யுலகுக்கோர்மன்னனாவன் 94

நல்லதோர்மதிக்கப்பத்தோ னலமுள்ளகுருவுங்கூடச்
சொல்லதற்குதையமைந்திற் சோம்புடனிருக்கமற்றோர்
வல்லதாயிவர்க்கிலாய மாகவேனின்றாராகில்
வெல்லவுங்கீர்த்திபெற்று வேண்டியவரசேயாள்வன். 95

இருவுதையத்தோகூடி யிருந்திடமதிக்கிலாபம்
குருபதியதற்கேழ்சோமன் கோணருமுதையமாகில்
வருமதுசெங்கோல்சிங்கம் வாகனமிதமில்லாமல்
ஒருபதிலட்சங்கோடி சூழ்ந்திடவுலகமாள்வன். 96

வகுத்துதையத்திலாப மிலாபாதிபிருவர்கூடிச்
சகத்துதித்தோர்க்கிலாபஞ் சந்திரனிடத்தான்கூட
மகிழ்ந்தரசாள்வனின்ற மனைக்கேழின்மதியுமாகில்
உகந்தொருகோடிசூழ வுலகுக்கோரரசனாவன். 97

ஒருதையத்திலாப மொன்பதினிரண்டோன்கூடிப்
பார்மதியிருந்திடத்துப் பத்தினிவன்றாராகிற்
சேரவும்யானைக்கூட்டந் திரளுடன்சிவிகையுமாவும்
பேர்பெறச்செல்வங்கோடிப் பெருக்கவேயரசேயாள்வான் 98

ஒத்தசந்திடத்துக் கொன்பதிலாபம்ரெண்டோன்
மெத்தவுங்கூடிலக்ன மேலகப்பத்திநின்றால்
நித்தமுமநேகங்கோடி நெருங்கிடராஜகூட்டம்
பெற்றுமனுலகமேல்லாம் பேருள்ளவரசனாவன். 99

பதியுதையவனாலேழ் பத்தவன்கூடிச்சோமற்
கதுவைந்துமாறிநிற்க வம்புலிவீட்டானாலேழ்
விதிக்குமூடத்தான்கூடி விறைந்ததின்பின்னேநின்றாற்
குதிக்குமாவநேகங்கோடி கோடிமன்னவர்கள்காண்பார். 100

மதிக்குமூன்றைந்துதர்மன் பதிக்குமேற்பத்திநிற்கப்
பதிக்குமேயைந்தொன்பானு மொருமூன்றோன்மதிக்குமத்திற்
பதித்தவர்நின்றாராகிற் பனுமுடிசசேடனாகி
அடிக்கொருகோடிசூழ வரசாளராஜயோகம். 101

சென்மலக்கினத்திற்காறோன் சோமற்குவிரையமாகி
இன்பமொத்திருக்குஞ்சோமன் விரையத்தானுதையத்தாறில்
துன்பமுற்றிருக்கிற்செல்வந் தரகதகெஜமேயுண்டு
பொன்பதராஜயோகம் பொற்சிங்காதனந்தானுண்டே. 102

அதியுதையத்தோன்வீறி யந்தசோமற்கிலாபம்
மதியுதையத்தோன்வீறி மகிழ்ந்துதையத்திலாபம்

பதிவிலாத்தனியராகிப் பண்புடனின்றாராகிற்
குதிகொளுங்கோடிமன்னர் சூழும்வெண்குடையனாவன். 103

கதிரெழுவுயிர்க்கிலாபங் கனத்தசந்திரனார்நிற்க
மதியுளவதற்கிலாப மகிழ்ந்துடனுதித்தோனிற்கப்
பதியுறவுதித்தோன்லாபம பருமதியிடத்தானிற்கில்
அதிகமேகோடிராஜ ரவனுக்கேசூழவிற்பன் 104

இன்னமுமனந்தங்கோடி யிருக்குமேயோகதிட்டம்
சொன்னதுவியாழங்கொஞ்சஞ் சொற்றவருதநீதி
பொன்னவன்சொன்னயோகம் பொய்யாதுசெகத்துளோர்க்குச்
சின்னதோரிடையினாளே செப்பினேனறியத்தானே. 105

சுக்கிரன் சொன்னயோகம்.

குறினிலைமதிக்கிரெட்டோன் குந்தினவிடத்தார்தாமும்
மறிபகைநீசமுட மனைவனுங்கூடவன்றிப்
பறிபடவீனமாகிற் பண்புளோனாகிவாழ்வன்
செறிதருமுன்னும்பின்னுஞ் சிவிகையுமநேகனிற்கும். 106

ஆறிரண்டித்தானின்றவம்மனையாளர்நீசம்
வீறியவிரையத்தானும் வேற்றினமதிக்கெட்டாகக்
கூறியமதிக்கெட்டோனுங் கூடாமல்விரையமாகிற்
சீரியகரியநேகந் தேசமுமாளவல்லன். 107

ஈராறெட்டோரிருந்திடத்தோ ரீனபெலனையிறுக்கிலுமே
ஆராறெட்டிற்சுபரில்தம் புலிக்கவ்விரையமாறெட்டோர்
வேறுக்குறிகியாறெட்டில் வெகுண்டுனின்றாமாகிற்
பேராயுடனேசிவிகையுமாய்ப் பெலத்ததேசத்திகனுமாம். 108

நாலுகாலிடத்தானின்ற நகரவனஸ்தமிக்க
ஏலுளமதிக்கெட்டோனு மிருந்திடநீசனோடே
மேலுகந்தன்றினின்ற விரையமார்க்கனுமெட்டிற்
சேல்விழிக்கண்ணினாளே செப்பிடும்யோகமென்றே. 109

ஆட்சிவீடதற்குகேந்திர கோணமோடதிகலாபம்
மாட்சியாய்னிற்கவிந்த மன்னவரேழுபேரும்
சேஷ்டனாயுலகையாண்டு செங்கோலுக்கதிகனாவன்
சூட்சியாய்மறையோன்சொன்ன சொற்றப்பாதிருக்குமாதே. 110

அரசனின்றிடத்தான்யோக காரகனுடனேசேரச்
சிரசதுவிடத்தான்சந்திககேந்திரமானால் யோகம்
முரசொடெக்காளமூதி முன்னிற்குஞ்சிவிகையோகம்
விரிசதிர்முலையாளீது வேந்தனார்சொன்னநீதி. 111

வெள்ளியுமிருந்தவீட்டான் விடையுடன்கூடிநிற்க
அள்ளியந்திடத்தான்சோமற் கதிகேந்திரமாகிநின்றால்
* துள்ளியேசிவிகைநேகக் துடருமேகரிமாநேகம்
தெள்ளியேசேஷனாகித் தோமேயாளவல்லன். 112

சந்திரனிருந்தவீட்டான் சுபமதாயரவஞ்சேர
மந்திரியுடையோனந்த மனையவன்கூடிநிற்க
இந்திருவோர்க்குநகோண கேந்த்ரமாய்லாபமாக்கச்
சந்திரனுதையமாகிற் சத்தியமரசேயாள்வன். 113

அரசனோடரவனிற்க வதர்க்கினியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினிற்கச் சனியுமேயைந்தாறாகிற்
சிரசின்மேற்க்ரீடனாகச் செகமுளதாதிவல்லன்
நரகெஜதுரகங்கோடி நடக்குமேசிவிகையோகம். 114

செனித்தவன்சிங்கன்கூடிச் சேர்ந்துநின்றிடத்திர்ப்பத்தில்
இனிக்குருசோமன்வீட்டா னிருவருங்கூடிநிற்கத்
தனித்தரவத்துநாலிற் றனியனாய்ச்சோமனிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வர்கோடி 115

குறித்தவனரசன்கூடக் குருமதியிடத்தான்சுங்கன்
மறுத்துமீரைந்திநிற்க மனையவனுதையமாகச்
செனித்தவனரசன்வீட்டான் சேர்ந்தரவத்துநாலில்
எதிர்த்திவர்நின்றாராகி லீரேழுபுவனமாள்வன் 116

பரித்திடஞ்சுங்கனிற்கப் பதியவன்மனையும்வீட்டான்
இனித்துயர்குருவுங்கூட விவர்பத்தினின்றாராகிற்
குறித்துயர்சதிரஞ்சோம னொருவர்கூடாமனின்றாற்
செனித்தநாலாகத்தேச முழுதுமோர்குடைக்கீழாள்வன். 117

மதியாட்சியாகிநிற்க மனைக்குநால்சுங்கன்பாம்பும்
பதியுதித்ததனின்மந்திரி பதியறனவர்க்கேநாலாய்
விதியுமேயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
குதிகொளும்பரிமாவேறுங் கொடிமன்னர்புடையேசூழ்வர் 118

உதையாதிபதியுமாட்சி யொருமையாய்நாலைந்தோனும்
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பத்தோனாட்சி யிருந்திடக்கூட்டமாக
மிதமிலாச்சிவிகைவாசன் முன்னிற்கச்செங்கோலாள்வன். 119

---

* ந, ஏகம் நேகம் எனத்திரிந்தது
இஃது வடமொழிச்சந்தி அநேகம் எனப்பொருள்.

குறியுண்டவிடத்திற்புந்தி கூடவேசுங்கனாரும்
அறிவுண்டசோமன்மந்திரி யவருமேலாபமாகிற்
பறியுண்டவிடத்தான்பாம்பும் பத்தினின்மதிவீட்டானும்
செறிவுண்டுநின்றாராகிற் செகமேலாமாள்வன்மாதே. 120

அரவுநின்றிடத்துக்கைந்தி லமர்ந்திடமந்தனாரும்
உரமதாயரவ்வீட்டார் னொளிமதிசுங்கனார்க்கும்
பாவுறும்வேகனார்க்கும் பத்தினினின்றால்யோகம்
அரசயபதாதிசேனை திரளணியுண்டாய்வாழ்வன் 121

அரவமுமறையோர்கூட வலதுகேந்திரமாய்நிற்கப்
புரமதாயிருந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே. 123

மறையோர்கேந்திரகோணத்தார் மதியினிடத்தா னுதித்தோனும்
குறையொன்றில்லாச்சுகப்படினுங் கொடுக்கும்யோகம்பாம்பாகும்
அறையுற்றிருக்கும்பாம்பினுக்கு வவர்க்கேந்திரங்கோணமல்
இறையொத்திருக்குமர்யோகம் பெலக்குஞ்சிவிகைமாவுடனே, 123

முடவனார்க்கீராறெட்டில் முனிபிறைபுதனிருக்க
விடையிருந்தவ்விடத்துக் கதிர்சுன்சேயாறெட்டாகிற்
குடையுடன்செங்கோ லுண்டு கொத்தள்க்கரிமாநேகம்
புடைகண்டுசூழ்வரென்று புண்ணியவியாழஞ்சொன்னார். 124

உரைத்ததுவியாழங்கொஞ்சம் மட்டமுமநேகமுண்டு
திரத்தினிலறியவேண்டிச் செகமெலாமுரைக்குநீதி
உரைத்திட்வல்லோர்க்கெல்லா முவப்பொருளல்லமந்திரி
விரைத்தது விளையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம். 125

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுபமதுதெரியாதார்க்கும்
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ளபேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே. 126

அந்தொருமொழியைக்கொண்டு வகஸ்தியர்தமிழாற்செய்து
விந்தியபருவதத்து மேலிடங்கீழ்தெற்கோர்க்கு
எந்தொருவருமேகாண வியம்பினவசனம்பற்றி
இந்தொருகுறியைச்சொல்ல விடையூறுவருவதில்லை. 127

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்ததேமுதலாய்க்கொண்டு
அனைத்திவர்விரையமட்டி லவரவரிருப்பறிந்து
இனித்திருந்தவரைக்கண்டு விட்டார்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுங்கனாரு மியம்பியவசனந்தப்பா. 128

சந்திரனிருந்தவீட்டான் சுபமதாயரவஞ்சேர
மந்திரியுதையோனந்த மனைவயன்கூடிநிற்க
இந்திருவோர்க்குங்கோண கேந்த்ரமாய்லாபமாக்கச்
சந்திரனுதையமாகிற் சத்தியமரசேயாள்வன். 113

அரசனோடரவனிற்க வதற்கினியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினிற்கச் சனியுமேயைந்தாறுகிற்
சிரசின்மேற்கிரீடனாகச் செகமுளதாதிவல்லன்
நரகெஜதுரகங்கோடி நடக்குமேசிவிகையோகம். 114

செனித்தவன்சிங்கன்கூடிச் சேர்ந்துநின்றிடத்திர்ப்பத்தில்
இனிக்குருசோமன்வீட்டா னிருவருங்கூடிநிற்கத்
தனித்தரவத்துநாலிற் றனியனாய்ச்சோமனிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வர்கோடி. 115

குறித்தவனரசன்கூடக் குருமதியிடத்தான்சுங்கன்
மறுத்துமீரைந்திநிற்க மனையவனுதையமாகச்
செனித்தவனரசனவீட்டான் சேர்ந்தரவத்துநாலில்
எதிர்த்திவர்னின்றாராகி லீரேழுபுவனமாள்வன். 116

பரித்திடஞ்சுங்கனிற்கப் பதியவன்மனையும்வீட்டான்
இனித்துயர்குருவுங்கூட விவர்பத்தினின்றாராகிற்
குறித்துயர்சதிரஞ்சோம னொருவர்கூடாமனின்றாற்
செனித்தநாலாகத்தேச முழுதுமோர்குடைக்கீழாள்வன். 117

மதியாட்சியாகினிற்க மனைக்குநால்சுங்கன்பாம்பும்
பதியுதித்ததனின்மந்திரி பதியறனவர்க்கேநாலாய்
விதியுமேயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
நிதிகொளும்பரிமாவேறுங் கொடிமன்னர்புடையேசூழ்வர். 118

உதையாதிபதியுமாட்சி யொருமையாய்நாலைந்தேனும்
சிதையாமற்றனலாவத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பத்தோனாட்சி யிருந்திடக்கூட்டமாக
மிதமிலாச்சிவிகைவாசன் முன்னிற்கச்செங்கோலாள்வன். 119

குறியுண்டவிடத்திற்புந்தி கூடவேசுங்கனாரும்
அறிவுண்டசோமன்மந்திரி யவருமேலாபமாகிற்
பறியுண்டவிடத்தான்பாம்பும் பத்தினின்மதிவீட்டானும்
செறிவுண்டுநின்றாராகிற் செகமெலாமாள்வன்மாதே. 120

அரவுநின்றிடத்துக்கைந்தி லமர்ந்திடமந்தனாரும்
உரமதாயரவவீட்டா னொளிமதிசுங்கனார்க்கும்
பரவுறும்வேதனாற்கும் பத்தினினின்றால்யோகம்
துரகபதாதிசேனை திரளணியுண்டாய்வாழ்வன். 121

அரவமுமறையோர்கூட வலதுகேந்திரமாய்நிற்கப்
புரமதாயிருந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி

அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திரமாகிற்
பரமதாய்ச்சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே. 122

மறையோர்கேந்திரகோணத்தார் மதியினிடத்தானுதித்தோனும்
குறையொன்றில்லாச்சுகப்படினுங் கொடுக்கும்யோகம்பாம்பாகும்
அறையுற்றிருக்கும்பாம்பினுக்கு வவர்க்கேந்திரனுங்கோணமால்
இறையொத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகைமாவுடனே. 132

முடவனார்க்கிராறெட்டில் முனிபிறைபுதனிருக்க
விடையிருந்தவ்விடத்துக் கதிர்சுன்சேயாறெட்டாகிற்
குடையுடன்செங்கோலுண்டு கொத்தளக்கரிமாநேகம்
புடைகண்டுசூழ்வரென்று புண்ணியவியாழஞ்சொன்னார். 124

உரைத்ததுவியாழங்கொஞ்சந் திட்டமுமநேகமுண்டு
திரத்திலறியவேண்டிச் செகமெலாமுரைக்குநீதி
உரைத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்லமந்திரி
விரைத்ததுவிளையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம். 125

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுமதுதெரியாதார்க்கும்
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ளபேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே. 126

அங்கொருமொழியைக்கொண்டு வகஸ்தியர்தமிழாற்செயது
விந்தியபருவதத்து மேலிடங்கீழ்தெறகோர்க்கு
எங்கொருவருமேகாண வியம்பினவசனம்பற்றி
இங்கொருகுறியைச்சொல்ல விடையூறுவருவதில்லை. 127

செனித்ததுகிரக்கூட்டஞ் சேர்ந்ததேமுதலாய்க்கொண்டு
அணைத்திவர்விரையமட்டி லவரவரிருப்பறிந்து
இனித்திருந்தவரைக்கண்டு விடர்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்சுங்கனுரு மியம்பியவசனந்தப்பா. 128

உதையாதியதர்க்குமேருக் கொருபக்கநான்குபேரும்
சிதையாமன்மற்றோர்நான்கு பேருமோர்பக்கமாக
இதமாகவிருந்தாராகி லிவனுக்கேராஜயோகம்
மிதமிலாதிருப்பன்மேலாய் மேதினியுள்ளோர்க்கெல்லாம். 129

பிறைநின்றவிடத்துக்கேழுக் கொருபக்கநாலுபேரும்
நிறையன்றிநாலுபேர்மற் றொருபக்கநின்றாராகிக்
குறைவன்றிராஜயோகங் கொடுப்பரேமிதமில்லாமல்
அறையில்லைநிஜமேயுண்டா மம்புலிக்கனையமாதே. 130

சந்திரனிருந்தவீட்டா னிருந்தவராதற்கேழ்மந்திரி
அங்கொருநாலிற்பாம்பு வலமிடமற்றோர்நிற்க
இந்திரப்பதிபோல்வாழ்வ னிவனுக்கேராஜயோகம்
கொங்கலர்குழலினாளே குவலையமெங்குமாள்வன். 131

உதித்தவனிருப்பிடத்துக் கோர்மதியிடத்தானேழாய்க்
கதித்தவர்நின்றிடத்துக் கிருபக்கமற்றோராகப்
பதித்தவர்பாங்காய்நின்றால் பாதாளயோகமுண்டு
மதித்தொருவரையும் பாராராயினுஞ்செகமேயாள்வன். 132

சுங்கனாகின்மந்திரி யாகினுஞ்சுபமாய்நிற்க
அங்கவரிடத்துக்கேழுக் கிருபக்கமற்றோராகில்
எங்கணுமில்லாயோக மிவனுக்கேகொடுப்பர்கண்டாய்
செங்கரும்பனையமாதே செகமெலாமாளவல்லன். 133

பாம்புடனொருவன்சேர விருபுரமற்றோர்நிற்க
வீம்புடனுலகமெல்லாம் விண்ணதிராளும்யோகம்
சோம்பலில்கெஜங்கள்கோடி துரகதங்கோடிசூழும்
காம்பிளமுலைபினாளே கண்டிடுமிது தப்பாதே. 134

அன்புள்ளவரசனிற்க வம்மனைக்கேழிற்புந்தி
நின்றிடமற்றோரெண்டு புரமதாய்நிற்கத்தானும்
பண்புளோனாகிராஜர் பரிவுறவநேகங்கோடி
நன்றுளமன்னனாகி நாடெலாமரசேயாள்வன். 135

சுக்கிரனிருந்தவீட்டான் சுந்திரமகனுக்கேழில்
நிற்கவீங்கிவற்குமற்றோ ரிருபுரநின்றாராகில்
மெய்குருவாகராஜ யோகமேயுளதாமேக
சக்கிரமாகவாழ்வன் சரசசங்கீதபோகி 136

அரசனோடாவநிற்க வம்பனைநாலேழெட்டிற்
சரசமாயிரண்டுவீட்டிற் சரியதாய்நின்றாராகில்
பரிசையோடநேகங்கோடி பரியுடன்கரியுமுண்டு
அரசியன்மாதேகேளா யரசாளயோகமுண்டே. 137

மதனின்றவிடத்துநான்கே ழெட்டினின்மற்றோர்நிற்க
விதம்போறதில்லையோகம் வேண்டியசிவிகையுண்டு
சிதனுமந்தடைவானாகிற் செல்வமுங்கரிமாவுண்டு.
புதனுக்கிப்படியேயானாற் பொற்சிங்காதனந்தானுண்டே. 138

இன்னம் ஒரு அடைவு.

செனித்தவற்கேழ்நாலெட்டிற் சேர்ந்துமுன்னிடத்தினிற்கத்
தனித்தொருநாளுநில்லான் றனக்கோடியமகோணத்தின்
தொனித்தவனரசேயாள்வன் றோன்றியமுதலாய்க்கொண்டு
முனித்தவர்சொன்னநீதி மொழிதப்பாதிருக்குமாதே. 139

பணைத்தொருவிடத்திலைந்து பேருமேகூடிநிற்க
இணைத்திருவில்லாமற்றோ ரெங்கணுமொருவராகில்
அணைத்தொருபரிதிசூழ்ந்த செகமெலாமாளும்யோகம்
கணக்கொருமிதமில்லாமற் கண்டிடுங்கரியநேகம். 140

இருந்திடநாலுபேரு மினியவர்கூடநிற்கப்
பொருந்தியமற்றபேர்க ளிவற்குநாலாகிநின்றால்
அருங்கடல்சூழுகின்ற வவனியேயாளவல்லன்
நெருங்கிடவநேகங்கோடி நிற்கவேயரசேயாள்வன். 141

ஒருவிடமூன்றுபேரு மொருநான்கிலோரீரோரும்
இருந்திடவதற்குநாலி லினியவர்மூவர்நின்றாற்
பொருந்தியகுடைக்கீழாள்வன் போகதேவேந்திரனாகிக்
குருந்தடியிருந்தமாதே கொடுப்பதிப்படியாம்யோகம். 142

ஓரொருகிரகமாகி யொருநான்கினின்றாராகிற்
சீர்புதம்பெற்றுசெல்வுஞ் செகச்சக்கிரவர்த்தியாவன்
ஈரிருகிரகமாக விந்தடைவாகிநின்றாற்
பார்பெருஞ்செல்வமுண்டு பாக்கியராசயோகம். 143

ஆறுபேர்கூடிநிற்க வதற்குமேன்மற்றோர்நிற்க
மீறுமட்டொன்றில்லாமல் வெயிலொளிதேசமெல்லாம்
பேருகொண்டுலகமெங்கும் பேருள்ளராசனாகி
நூறுமட்டுலகையாண்டு நண்யனாயிருப்பன்மாதே. 144

அரசிடமாகநின்ற வவ்விடம்வலத்தினல்ல
உரமுடன்சுக்கன்சோம னொளிமதிநின்றவீட்டான்
திரமுட னுதையத்தானுஞ் சேர்ந்திருபுறமாய்நின்றால்
முரசிடவநேகங்கோடி முன்னிற்கும்ராஜயோகம் 145

அஞ்சவனரசன்சேர வவர்க்குமிந்தடைவேயாகில்
மிஞ்சிடும்ராஜயோக மிதமிலாச்சிவிகையுண்டு
பஞ்சவர்க்கரசனேழிற் பற்றியிந்தடைவேயானால்
நஞ்சீதின்றவரைப்போல் நாடெலாமாள்வன்மாதே. 146

அஞ்சவற்கரசனலா யவர்க்குமிந்தடைவேயாகில்
வஞ்சியேராஜயோகம் வருவதுநிஜமாயுண்டு
விஞ்சியேமூவிரோரு மிதைத்தேழுமைந்தான்நின்றாற்
செஞ்சடைச்சிவனேயாகிச் செகமெலாமரசேயாள்வன். 147

அரவுடனரசனிற்க வவர்க்கு மிந்தடைவேயாகிற்
குறைவில்லாராஜயோகங் கொடுப்பரேமிதமில்லாமல்
திரளுடன்யானைக்கூட்டங் தேடருஞ்சிவிகைமாவும்
அரசுடனநேகங்கோடியவனுக்கேயுண்டுமாதே. 148

அஞ்சவனரசன்சோம னந்தணன்மதிவீட்டானும்
மிஞ்சியேயரவம்வேறோன் மிகைத்துமிந்தடைவேயாகிற்
கொஞ்சியராஜயோகங் கொடுப்பரிப்படியேகண்டாய்
வஞ்சியேயிந்தயோகம் வருமுயர்சுங்கனிதி. 149

தீரசன்றானிறக்கினத்தா னல்வெள்ளிமதியும்வீட்டான்
மூரசதிரிடத்தாள்ரெண்டு மும்மூன்றுபேருநல்லோர்

பாவிதானிருக்கிற்கேந்திர கோணமாய்க்கூடிப்பார்க்கில்
நாபதியானைமாவு நாடாளயோகமுண்டே. 150

பனிரண்டுவிடத்தினல்லோ ரிடமதிற்பணைத்துக்கூடி
அணைவுண்டுமற்றோர்க்கு மம்மனைக்கொருவராக
இனிகண்டுகூடிரெண்டு பேருமாய்நின்றாருகிற்
குதிகொண்டசெல்வமுண்டு கொத்தளத்தானையுண்டே. 151

எந்தவீடாகினுலு மிடமதிலிரண்டுபேராய்
அந்தமாய்நின்றாராகி லவனுக்கேயோகமுண்டு
இந்தவகைவாகினின்றோ ரிவரிவற்கைந்தீராகிற்
செந்திருமாதேகேனாய் ஜெகத்துக்கேமன்னனவன். 152

கூட்டமாயைந்துபேருங் கூடியயவிடத்தின்மற்றோர்
தேட்டமாய்யொருவராகத் திரண்டிரண்டாகிநிற்க
வாட்டமில்லாமலமூன்றோ ருகினும்வருமேயோகம்
சேட்டமாயுலகையாண்டு செங்கோலுக்கதிபனவன். 153

அஞ்சுகால்பேருங்கூட வவற்குமேபகையுமில்லைக்
கொஞ்சியேயைந்தாராகி லிவற்கொருபகையுமில்லை
வஞ்சியேயமிர்தம்போலப் பலனதுகொடுப்பர்கண்டாய்
வஞ்சியினகொடியகாளே மகாராஜயோகமென்னே. 154

அணியோட்டுகேந்திரகோணமமர்ந்தவரிருந்தாராகிற்
பிணியோட்டுங்கிரகதோஷம் பிடிப்பதுமில்லைகண்டாய்
வணியோட்டுமரவம்மீறி மண்டலாதிபமேசெய்யும்
எண்ணியோட்டுக்கிறகதோஷ மில்லையென்றுரைப்பாய்மாதே. 155

நாட்டமாயோகஞ்செல்வ நாகெஜவசுவயோகம்
ஓட்டமாய்வருததற்கிங் குபமதுகேளாய்மாதே
கூட்டமுமணியுங்கேந்திர கோணமாய்நின்றாராகிற்
சேட்கிமேயுடையோனுகிச் செகமெலாமாள்வன்றானே. 156

அஞ்சிடமண்கபோரா யரசுக்கிலாபமாக
மிஞ்சினோர்நாலினிற்க வரசுடனரானின்றால்
வஞ்சியேராஜயோகம் வருமதுநிஜமேகண்டாய்
தஞ்சபாயவேணசெல்வந் தழைத்துடனிருப்பன்மாதே. 147

அந்தனன்வேதமூர்த்தி யவ்வெள்ளிசொன்னநீதி
சந்தேகமில்லையோகந் தப்பாதுசெனித்தோர்க்கெல்லாம்
இந்துணர்வாகப்பார்த்தோ ரியப்பியவசனந்தப்பா
புந்தியிற்றிருப்பர்மாதே பூமியிலநேககாலம். 158

அந்தணன்மந்திரிசோமனவனிருந்திடுவீட்டானும்
ஊன்றொருவுதையத்தானு மோங்கியோவவீட்டார்
இந்தொருநவத்தோர்நன்மை யிவர்சுபங்கொடுப்பர்மேலாய்
சுந்தரிவரேயல்லாற் சொல்லவும்வேறேயில்லை 159

அவயோகம்.

நீலனுமிரவிசேயு நிலேமதிக்கெட்டோன்பாம்பும்
மூலமாமுதையத்தெட்டோன் மூவிருவோரும்பொல்லார்
ஏலவார்குழலேகேளா யிவர்செய்யும்வோறதென்னிற்
பாலனேயுதித்திட்டாற்போய் பாக்கியங்கொடுக்கமாட்டார். 160

ஒருவிடநான்குமூன்று பேருமாய்க்கூடிநிற்க
அருகிடதப்பாலொன்று மிரண்டப்பாவாகிநின்றால்
திருகிடும்யோகந்தப்புஞ் செல்வமுநிலமைதப்பும்
குருவிடமானசுங்கன் கொஞ்சியமொழிதப்பாதே. 161

கூட்டமாய்நின்றோர்முன்பின் கூடிரண்டொருவராக
நாட்டமாநின்றாராகி னகர்விடும்பதிபோந்தீது
ஆட்டமாய்ச்செல்வங்குன்றிப் போமிதுயோகந்தப்பும்
சேட்டமுஞ்செல்வமில்லேக் செகத்துக்கேகடினனுவான், 162

நாலொருகிரகங்கூட நடுமனேக்குள்ளோனுகை
ஏல்பிறியாமல்ரெண்டு பேருமாயெதிர்வொன்றாகிற்
பால்பெருஞ்செல்வங்குன்றிப் பாக்கியயோகந்தப்பும்
மால்பெருங்கண்ணினுளே மயங்குவனவயோகத்தால் 163

அஞ்சினிலிரண்டிர்ப்பாப ராஜனுக்கேழின்மந்தன்
மிஞ்சியேசுங்கனின்ற முன்மனேபின்னேப்பார்
கொஞ்சியேய்பரசனின்ற வதற்கிளமதியெட்டாகில்
வஞ்சியேசெல்வங்குன்றி வருத்தமந்தயோகந்தப்பும். 164

அஞ்சுக்குநாலின்மைந்த னரசனுக்கேழிற்பூமன்
நஞ்சினுக்கிரவிநாலி னன்மதியீனமாக
இனசொர்க்கஞ்சரனேசூழ விரவியுநின்றாராகிற்
பஞ்சுக்குளங்கிபோலப் பறந்துடன்போமேசெல்வம். 165

சுங்கன்ர்சுபமிருக்கச சுற்றியேபகையோராக
அங்கையோரைந்தோனின்ற வம்மனேக்கேழின்மைந்தன்
சிங்கம்போலரசனின்ற சீர்மனேக்கேழிற்செவ்வாய்
பொங்கமாய்நின்றாராகிற் போயவிடும்செல்வமெல்லாம். 166

அஞ்சவனின்றவீட்டுக் கவ்விரையத்தில்ராஜன்
கொஞ்சமாமதிவிட்டானுங் குறுகியேவிரையமாகத்
தஞ்சமேருதையத்தானுந் தனபக்கீராறாகில்
மிஞ்சவேயோகமில்லே மேலன்றிநிற்பன்மாதே. 167

ஆறுளோன்குறைந்தோனுட்சி யும்மனேக்கீறாக
வேறுபட்டவற்குமந்திரி விரையமாய்நிற்கமற்றோர்
கூறுகொண்டெட்டுக்கெட்டாக் கூடாமனின்றாராகில்
தூறுபட்டுலகமெல்லாந் தூர்ச்சனயோகமாகும். 168

அரவமுஞ்சனியுங்கூட வந்தணனிரவிசேர
உரமுடன்சுங்கன்செவ்வா யொருவருக்கொருவரெட்டாய்க்
குறையுறுமதியும்புந்தி கூடியேநிற்குமாகில்
முறையுடன்போமேசெல்வ மொய்குழன்மானேகேளாய். 169

சனியுடனரசனிற்கச் சந்திரனுடனேபுந்தி
முனியுடன்பாம்புஞ்செவ்வாய் முழுகதிர்கூடநிற்க
இனியிவர்நின்றிடத்துக் கிருப்பிடமாரெட்டாகில்
தனியனாய்நிற்பன்யோகந் தவிர்ந்திடுந்தரித்திரயோகம். 170

மந்தனுஞ்செவ்வாய்கூடி மதிக்கேழில்வந்துநிற்கத்
தொந்தமாயிரவிபாம்பு தொடுத்துநாலிவர்க்கேயாக
அந்தமாய்வெள்ளிபொன்னு மம்புலிக்காரெட்டாகில்
எந்தனாளாகிலுந்தா னிவனுக்கேயோகமில்லை 171

அணைத்திருகோணகேந்திர மமர்ந்துநாலைந்துகூட்டம்
பணைத்துமிந்தடைவேநின்றார் பாக்கியுவானேயல்ல
இணைக்கிருவொன்றிரண்டு மிருந்திடில்யோகமில்லை
பிணைத்துமூன்றொன்றிரண்டு மிருந்திடிற்பிழைப்பேயில்லை. 172

ஒருவிடமொருவனாய்மற் றொருவிடமிருபேர்நிற்கத்
திருகில்பின்னொருவனாகத் திரும்பவேமூன்றுபேரும்
அருகில்பின்னொருவனாகி லவனுக்கேயோகமில்லை
மருவுகண்சுணத்தார்சுங்கன் மாற்றிடாறியவேண்டி. 173

சிவிகையோகம்.

சந்திரவிலக்கினாதி சதிர்கோணமுதித்திட்டாலும்
அந்தெதிர்கூடினாலும் வலமிடத்திரிநாலைந்தாய்
கொந்தலர்குழலினாளே குலவியேநின்றாராகில
இந்திரப்பதிபோல்வாழ்ந்திங் கிருப்பனேவ்யதுநாளும் 174

இந்திரநால்வருக்கு மிடர்குறையிருக்கலாகா
அந்தொருமதியுமீன மமாருமிருக்கலாகா,
வந்தொருநான்கிற்சந்திரன் வளர்ந்துச்சவமிசையாகிற்
செந்துரநுதலினாளே மிகுதியாய்ச்சிவிகையுண்டே. 175

உதித்தலக்கினத்தான்வீற வுயர்மதியிடத்தானட்பாய்க்
கதித்திவரேழுக்கேழாய்க் கடந்துடனாலைந்தாகி
எதிர்த்துடன்குருசுங்கற்கு மிதுநிலையாகினின்றால்
விதித்திடமூண்டுபின்பு வேண்டியசிவிகையேறும். 176

அரசற்குசுங்கனுற்கு மதிக்குறியாகிநிற்க
முரசொத்துமதியுங்கூடி முன்பவருடனேசேர
இரவியத்துடனேகாரி யிவருடன்சேய்ப்பார்ப்பின்றன்
விரசமுத்துடையமாதே வேண்டியசெசங்களுண்டே. 177

ஆயுரியோகம்.

முன்னைத்துவரவமற்றோர் முன்போலக்குறியாய்நிற்க
அன்பதோடாறுதேச மகண்டசாம்பிராஜ்யயோகம்
கொன்னைத்தராஜராஜர் கூர்ந்துகைக்கூப்பினிற்பர்
மின்னைத்தவிடையினாளே மிகயோகஞ்சுங்கனீதி. 178

சுங்கனோடாவமற்றோற் சூழ்நன்றகுறிபோனிற்க
எங்கணுமரசர்கூட்ட மிவனையேதொடர்ந்துனிற்பர்
செங்கருவான்போற்கூடி செகயோகபோகபாக்கியம்
அங்குறுமரசர்சூழ்வுற் றவற்கிவன் மூர்த்தியாவன் 179

உதித்திடமிடத்தோன்லாப மதியிடனதற்கிலாபம்
பதித்திடவரவம்பொன்றும் பருவெள்ளியிருந்தவீட்டார
குதித்துடனிவற்கிலாபங் கூடாமற்றன்னியராகில்
விதித்துடவயதுநாளும் விண்ணுலகெங்கும்மாள்வன் 180

ஆட்சிவீடதற்கிலாப மவரவர்நின்றாராகிற்
காட்சிதந்தரனார்போலக் கனசெல்வமிகுதியுண்டு
தாட்சியின்றதற்குளுச்சந் தானிருப்பாரேயாகிற்
சாட்சியாயநந்தஞ்செல்வந் தழைத்திடுஞ்சிவிகையோகம் 181

ஆரவமேநின்றவீட்டுக் காகும்லாபத்தின்மந்திரி
உரமுள்ளசுங்கன்பாம்புக்கொரு மூன்றினிற்கத்தானும்
சிரமதன்பாம்புக்கேழில் செல்வனாய்நின்றானாகில்
துரகதகெஜமாந்தோளி யோகமாய்ச்சொல்வர்மாதே. 182

நிறைமதியதற்குமற்றோற் நிற்கவேலாபமாக
அறையதிற்கூடநில்லா தவற்கவர்லாபமாகக்
குறைவின்றிநின்றாராகிற் கொடுப்பரேயமிர்தயோகம்
பிறையுயர்ந்ததுபோற்சொல்வம்பெலக்குமென்பிருகுசொன்னார் ()

கெண்டயோகம்.

அணியிருகூட்டகேந்திர மமர்த்திடிற்றிரிகோணத்தும்
துணிந்திருந்தோர்கன்பாப ராயினுசுகமேயில்லை
பணியணியிடையினாளே பற்றாதசெல்வமுண்டு
மணியரவுள்ளேயாகின் மாண்டிடுகுழவிதானே 184

சந்திரனிருப்பிடத்துச் சரியிருபுறயாய்ப்பாபர்
முந்திபின்னிருவர்கூடி முகந்தெட்டிலரவனின்றில்
இந்திரபதியானாலு மிறந்திடும்பாக்கியனில்லாக்
கொந்தலர்குழலினாளே குழவியுமன்றேசாமே. 185

உதையமிந்தடைவேயாகிற் சிதையுமேகுழிவிதானும்
அந்தையகாலுதையோனாகி யம்புலிவீட்டானாகி

இதையுடனிருந்தாராகி லெம்கண்டயோகமென்று
புதைபொருட்செல்வமெல்லாம் போய்விடுங்குழவிகூட. 186

அருக்கனார்மந்தன்சேயு மவ்விடம்பாம்புநிற்க
குருநீலன்வெள்ளிபுந்தி கூடாமலாறெட்டாகில்
இருக்கவேபாக்கியமில்லை யிவன்பிறந்தவ்விடத்திற்
செருக்களம்போலேபிள்ளை சேர்ந்திடுமெமபுரத்தே. 187

மந்தனும்பாம்புங்கூட மனைக்குநாடுரவிசேயும்
தொந்தமாம்நிற்கமற்றோர் சுபருமேயாறெட்டாகில்
செந்திடத்ததுவும்பாக்கியஞ் செல்வமுநாசமாகும்
பொந்திடக்கிலேசனாகிப் போகுமன்றிரவுனில்லா. 188

இந்திடவணியேயாக வெந்தவிடுதையமாகில்
வந்திடுந்தீம்புண்டாகும் வலமிடமாகிலுந்தான்
நொந்திடுமாட்சியுச்ச மாகினுநோக்காடுண்டு
சிந்திடுஞ்செல்வமெல்லாஞ் செலவழிந்துயிரிழக்கும். 189

பார்ப்பருபசுபர்கூடிப் பற்றியேயணியாய்நிற்கக்
கார்ப்புடனுதையமந்தன் கனல்புந்திசுங்கன்கூட
நேர்ப்புடன்செவ்வாய்பாம்பு நிலவுபொன்னணியேயாகில்
சீர்ப்பெறவுதித்தகாளை செத்திடுமிரவுநில்லா. 190

ஆறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
ஈறுமோராறுக்காறி லிருந்திடவிரவிபாம்பும்
ஓராறுக்காறுமூன்றி லொருவனுய்ப்பூமனிற்கப்
பேராறுக்கேழ்மூண்மற்றோ ரிருந்திடிற்குழவிசாமே. 191

ஓரெட்டிற்கெட்டிற்காரி யொருமையாம்பாம்புஞ்சேர
ஏரெட்டிற்கெட்டில்ராஜ னிரவிபும்புந்திகூட
சீரெட்டிற்கெட்டிர்ச்சோமன் முடிகியேசெவ்வாய்கூட
நாலெட்டிற்கெட்டிற்சுங்க னைசமாய்க்குழவிசாமே. 192

இரவிக்கோரெட்டோனின்ற விம்மனையுதையமாக
அரவுக்கோரெட்டோனின்ற வம்மனையிரவியாகப்
பரவியமதிக்கெட்டோனும் பண்புள்ளவுதையத்தெட்டோன்
உரமுடசோமன்கூடி லோரிரவதனிற்சாமே. 193

கூடியவிருவர்முன்னே கூடாமலொருவனிற்கத்
தேடியவதற்குமுன்னே செப்புமோரிருவர்நிற்க
நாடிமுன்னொருவனின்று னலமில்லைபிறந்தபிள்ளை
ஆடிடுமதற்குமுன்னே யறுதியாமெமபுறத்தே. 194

திங்கள்பின்முன்னிரண்டு பாபருந்திரண்டுநிற்க
மங்களவானேழந்த் மனைக்குநான்மந்தனை

அங்குளசுகருமற்றோர்க் காறெட்டுபனிரெண்டாகில்
எங்குளமாத்ருவம்ச மிறக்குமேகுழவிகூட 185

சோமனுக்கேழிற்செவ்வாய் நாலிருபுறமும்பாபர்
ஆமெனுமலரியோடே யந்தநாலோனுங்கூடக்
காமனுக்காரின்மன்ன னுடையவானெட்டிநின்றாற்.
சாமெனுங்குழவிமாதா சரியன்றேயிரவுமட்டில் 196

நாலுகால்செவ்வாய்நிற்க நடுவதிற்சோமன்யந்தன்
மேலுகந்தரசன்சுங்கன மேலன்றியஸ்தமிக்கில்
ஏலுடனுதையத்தானு மிராப்பகைவிட்டானெட்டில்
ஆலுகந்தமர்ந்தமாதே யன்னையுங்குழவிசாமே. 197

முந்தியோருதையத்தானு முழுபிறையிடததனெட்டோன்
பிந்தியேசனியும்விட்டான் பெலவீனமாகல்லோர்.
வந்திருந்தன்றேற்பார்வை வலமிடத்தில்லாதாகிற்
சந்தேகமில்லைசாவு சரியிதுவிதியம்மட்டே. 198

எந்தொருவீட்டாரக்கிலிடவரவற்குண்டேயாகில்
அந்தொருவிடமுந்தீதா மீதற்குகாரகருந்தீதே
நொந்திருந்தனரேயாகி ஞேக்காடுமதிகமுண்டு
செந்திருவரையும்பற்றுஞ் செகத்துதித்தோற்குச்சொல்லே. 199

ஒருவருக்கொருவர்கேந்திர கோணமுமணியாய்க்கூட்டம்
இருவராய்க்கூடிக்கேந்திர கோணமுமணியாய்க்கூட
திருகுளோராகிக்கேந்திர கோணமுமணியாய்நிற்க
வருவதுநன்மைதீமை வய்ணமிங்கறிந்துசொல்லே. 200

நாலுபேர்கூடிகேந்திர கோணமுமணியாய்க்கூட
ஏலுடன்சுங்கன்கூடி யிவற்குநால்கோணமாகில்
ஆலுகந்தானுங்கூடி யிவற்குநாலைந்தேயாகச்
சேலுடனேழுபேருஞ் சேர்ந்திருந்தனரேயாகில். 201

தனபதியுடையனுவன் றனலாபமதிகமுண்டு
மனையதிலசுவமுண்டு மகிழ்ச்சியுஞ்சிவிகையுண்டு
பொனின்பதிக்கதிகனுகிப் பொற்சிங்காதனமுமுண்டு
இனிப்பதுமுடையோனுகி யிருப்பனேவயதுநாறாய். 202

இந்தனிகோணகேந்திர கூட்டமுமிருப்புந்தப்பி
அந்தணன்றிகைத்துநிற்க வவகேடுமுட்டேனயுண்டு
நொந்துடனிருப்பநூறு வயதுடன்றனிலேலாபம்
சிந்திடிற்சதியேயாக வாகனயோகமில்லே. 203

ஒருரெண்டுமொன்றுமூன்று யொன்றென்னுய்நிற்கவன்றி
இருவொன்றுமூன்றென்றுக் விருக்கவுமன்றிப்பின்பு

திரியொன்றுமொன்றிரண்டா ரொன்றாகவிருந்தாராகில்
நெறியுண்டகஷ்டமுண்டு நின்றநாட்டியராமுண்டே. 204

ஒன்றொன்றுமூன்றிரண்டு மொன்றொன்றால்நிற்கவன்றிப
பின்னொன்றுமூன்றிரண்டு பின்னிரண்டொன்றாய்நிற்க
அன்றன்றிமூன்றொன்றிரண்டு மொன்றிரண்டணிகிநின்றால்
அன்றாருஞ்செல்வமல்லா லதிகமாய்ச்செல்வமில்லை 205

இருக்கவேநால்வர்க்கூடி யதற்கிருபக்கமூவர்
நெருக்கமாய்நிற்கமற்றோர் நின்றிடவொருவராகச்
செருக்கவுஞ்செல்வமில்லை சென்மசீதளனாய்நிற்பன்
பெருக்கவேயோகமில்லைப் பெலனுண்டாமாயுள்யோகம். 206

ஒன்றிரண்டொன்றிரடா யோரொருவிடமாய்மற்றோர்
னின்றிடவொன்றுக்கொன்று நேரிலாதாரெட்டாகிற்
கொன்றிடுஞ்செல்வமெல்லாங் குடியதமாகச்செய்யும்
என்றுடன்சுங்கன்சொன்ன திதுமொழிதப்பாமாதே. 207

ஆறிடமதினின்றாறு பேருமேயணியாய்னிற்க
வேறுமற்றொருநின்ற விடத்துக்கேயாறெட்டாகில்
நீறுபட்டதுபோற்செல்வ நில்லாமற்குடிவிட்டோடும்
வேறுபட்டுலகமெல்லாம் வெருண்டிடன்றிரிவன்றானே. 208

ரெண்டுமொன்றொன்றிரண்டு மற்றுளோரிவர்க்கிரண்டாய்க்
கொண்டுநின்றிடமுந்தீதாய்க் குறியதாய்நின்றாராகிக்
கண்டிடுமநேக்குற்றங் கலங்கியேபொருளும்போகும்
அண்டியவிடமுந்தப்பி யவதியும்வயதுமற்பம். 209

கூறிநின்றிடத்துமற்றோர் குறிதப்பியாறெட்டாக
ஆடியேயாட்சியுச்சமாகினுமாதேகேளாய்
தேடியசெல்வமெல்லாஞ் சிதறிடுமிடமுந்தப்பி
வாடியேநிற்பன்கண்டாய் வயதுமேயற்பமாக. 210

உண்டிரண்டொன்றுமொன்று மொருரெண்டிமற்றோரெட்டாய்க்
கண்டிடவாட்சியுச்சங் கருதிலாநலமானாலும்
அண்டியேபொருளுமுன்போ மவதியுங்கெடுதியுண்டு
கொண்டுபோநிலைமைதப்பிக் குறியிதுவயதுமற்பம். 211

செல்வராயக்கேந்திரகோணஞ் சேருமுநின்றணுகுமாகில்
அல்லவராட்சியுச்ச மாகிலுமாதேகேளாய்
எல்லவாநலமானாலு மெட்டாறுமாகநின்றாற்
பொல்லவராகச்செல்வம் போய்விடும்வயதுமற்பம். 212

மதிபதியதற்குக்கேந்திர கோணணியாகநின்றிங்
கதிபதியுச்சநட்பு மாகிலுமாதேகேளாய்

பதியவர்க்கொன்றுக்கொன்று பகைத்துமாறெட்டேயாகில்
விதியதுகுறைந்துசெல்வம வீணிலேகுலைந்துபோமே. 213

ஒன்றிரண்டொன்றுமூன்று மொன்றுமாய்நிற்கக்குற்றம்
என்றுள்ளசுகமுந்தப்பி யிருப்பிடமனையுங்குற்றம்
நன்றுள்ளனுகிவாழ்ந்த நலங்குன்றிக்கஷ்டமாகி
நின்றுடன்றிரிவன்றுனே நிலையிதுகுறிதப்பாதே. 214

சூரியன்மந்தன்சேயைச் சூழ்ந்திருபுறத்தின்மற்றோர்
சாரியராகநிற்கச் சாவதுமுடனேயுண்டு
வீரியர்க்கிவ்வடைவேயாகில் வேண்டியயோகமுண்டு
பாரிவையறிந்துகொண்டு பாருளோர்க்குரைப்பாய்மாதே. 215

எட்டணிபாறுமாக விருந்திடிற்செல்வமில்லை
மட்டினிறெட்டார்றுக மனையவர்நின்றாராகில்
விட்டிடுமாயுனில்லா வீணிலேதனமும்போகும்
தொட்டணையாமற்செல்வந் தூரவேநிற்குமாதே. 216

கெடுதியாயுத்தையம்பார்க் கிட்டியேநாலாறுக
அறுதியாய்நல்லோர்நிற்கு மவரவற்காறெட்டாகிற்
படுதியாய்ப்பட்டாற்போலப் பறந்திடுஞ்செல்வமெல்லாம்
பிரிதியாயுதித்தக்காலை பெயர்ந்தெழுமெமபுறத்தே. 217

மதியுடன்புந்திசேர மந்தனோடசனிற்க
விதியுடனிரவிசுங்கன் வேந்தனுக்கெட்டிற்பூமன்
கதிபெறப்பாம்புகூடக் கலந்துடன்பூமனின்றால்
அதிபதியோகமில்லை யவனுக்கேவயதுமற்பம். 218

செல்வமாய்கேந்திரகோணத் தாருமேசுகமாய்நிற்க
அல்லவென்றாட்சியுச்ச மாகினுமேலாய்நிற்க
நல்லவ்ராகினுலு நான்குபேர்வக்கிரமாகித்
சொல்லவுஞ்சுகமேயில்லை தோன்றிடுமரிட்டமாதே. 219

கூட்டமுமணியுமாகிக் குறைந்துனின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பினன்றே ரொருநான்குபேருமாகிற்
சேட்டமேயில்லைகேளாய் சீவனுக்கழிவுமாதே. 220

அல்லவென்றணியுங்கூட்ட மதிகேந்திரகோணமாகில்
நல்லவராகிநிற்க நான்குபேரமிசைநீசம்
சொல்லியுரங்கிசாதி துன்பநீசாஸ்தமாகிற்
பொல்லதுவருமேகூடப் போய்விடுஞ்செல்வமெல்லாம். 221

இன்புமாயணியுங்கேந்திர மிருந்திடிற்றுட்டங்கோணம்
அன்பதாய்நின்றாகி லதிநான்குபேருநீசம்

தன்பதமாகினின்றே ரங்கிசமதுவேயானல்
துன்பமாயாயுள்செல்வஞ் சொல்வதுமற்பமாமே. 222

அல்லவேநான்குபேரு மதிபகையாகினிற்க
னில்லுமவ்வீட்டார்தாமு நீசமூடாஸ்தமாகிற்
செல்வராய்ககேந்திரகோணஞ் சேர்ந்தணியிருந்திட்டாலும்
நல்லவர்போலனின்று நாசமேபுரிவர்மாதே. 223

கூட்டமுமணியுமாகிக் குறைந்துநின்றவருமேலாய்த்
தேட்டமாயிருந்திட்டாலுந் திருகதிலுண்டுகண்டாய்
ஓட்டமாய்த்திரும்பினன்றே ரொருநான்குபேருமாகிற்
சேட்டமேயில்லைகேளாய் சீவனுக்கழிவுமாதே. 224

அல்லவென்றணியுங்கூட்ட மதிக்கேந்திரகோணமாகி
நல்லவராதிநிற்க நான்குபேரமிசைநீசன்
சொல்லிவரங்கிசாதி துன்பதிசாஸ்திரமாகிற்
பொல்லதுவருமேகூடப் போய்விடும்செல்வமெல்லாம் 225

இன்பமாயணியுங்கேந்திர மிருந்திடிற்கூட்டங்கோணம்
அன்பதாய்நின்றராகி லதினனகுபேருநீசன்
அன்பதமாகிநின்றே ரங்கிசமதுவேயாகில்
துன்பமாயாயுள்செல்வஞ் சுபமதுமற்பமாமே. 226

பிரதியோககாண்டம்-முற்றிற்று-ஆக ௩௱௨௬.

ஆயுள்காண்டம்

தீர்க்காயுள்.

இப்படியநேகங்கோடி யெண்ணெணப்பொருள்களுண்டு
மெய்ப்படசுங்கனீதி மேதினியோர்க்குக்கிட்டா
தெப்படியென்னிற்கேளா யெடுத்தோதுமாலுமைக்குச்
சொற்படுஞ்சுங்கன்கூட்சிச் சோதித்துச்சொல்வாய்மாதே. 1

சொல்லுவர்பெரியோராவர் தோன்றுமவரேதெய்வம்
அல்லொடுபகலுமாக வதினுடைச்சாரங்கண்டு
ஒல்லுமோர்வேதமூர்த்தி யுரைத்ததென்றறியலாகும்
செல்லுமேதேசமெல்லாஞ் ஜெகச்சோதியாகநிற்பன். 2

அஷ்டமவிடத்தான்மந்தன் னாட்சியிற்கூடநால்வர்
உட்டமாய்கூடினின்ற திங்களுமதிலேநிற்க
நட்டமில்லாமன்மற்றேர் நாலுநாலாகிநின்றால்
பொட்டெனவயதுண்டாகிப் போய்விடுந்தரித்திரங்கள். 3

மந்தனும்புந்திசுங்கன் மதிவீட்டானுதையத்தோனும்
அந்தமாய்க்கூடமற்றோ ரவற்குநாலைந்தேயாகில்
தொந்தமாய்செல்வமுண்டு தொண்ணூ றும்பத்துங்கண்டு
வந்தநான்முதலாய்க்கொண்டு வளர்ந்திடன்பாக்யமுண்டே. 4

எட்டவன்புந்திசுங்க னிந்துவுமுதையத்தானும்
மட்டினிற்கூடினிற்க மனையவற்காட்சியாகச
சட்டெனமற்றோர்நின்ற சரியிருபுறமாய்ச்சேர்ந்தார்
பொட்டெனவயதுண்டாகும் புகலருஞ்செல்வமுண்டே 5

எட்டினிலெட்டேமற்றோ ரிருபுயஞ்சரியாய்ச்சேர
இட்டிடுமநேகசெல்வமெதிரில்லாயோகமுண்டு
விட்டிடாதிருக்குநூறு விண்ணவர்க்கதிகனாகிக்
கட்டுடன்வாழ்வுன்கண்டாய் கருமுகில்வண்ணன்போல. 6

மந்தனுமாட்சியாய்மற் றவரிருபுறமாய்நிற்க
மூந்தவோர்மந்தனார்க்கு மூன்மனையமிசையாக
ஐந்தடவாகினின்றா லிவனுக்கேவயதுநூறு
சொந்தமாய்செல்வமுண்டு தொல்புவியோர்க்குமாதே. 7

கரியிடமதனினான்கு பேருமாய்கூடினிற்க
அரியிடமகனுங்கூட லவர்க்குநான் மற்றோராக
எரியிடமகனுங்கூட லவர்க்குநான்மற்றோராக
பரியிடச்செல்வமுண்டு பார்தனில்வயதுநூறே. 8

செங்கருநீலனின்ற சீர்மனைக்காறேழெட்டில்
சுங்கனும்புந்திபொன்னுஞ் சுபமதாயிருக்கமற்றோர்
எங்கணுமிருந்தாராகி லிவனுக்கேவயதுநூறு
குங்குமமனையமாதே குறியிதுநெறிதப்பாதே. 6

எட்டுடனெட்டுவிட்டா னிவருடனரசன்சுங்கன்
பொட்டெனமதியுமைந்தன் புகுந்தொருவிடத்தினின்றால்
விட்டிடாதிருக்குஞ்செல்வ மேதினியிருப்பநூறாய்
மட்டிடாசெலவமுண்டு மதகெஜதுரகயோகம். 10

சேர்ந்திருவோருங்கூடச் சென்மநாலிடமேயாகப்
பூர்ந்தவர்க்கொருநாலாகப் புண்ணியரிருக்குமந்தன்
சார்ந்துனின்றிடத்துநான்கிற் சருவுபொன்சுங்கனாகில்
ஏந்துபொன்சொல்வனாகி யிருப்பனேவயதுநூறாய். 11

இருந்திடமந்தனோடே யிருவருங்கூடிநிற்கப்
பொருந்திவர்கைந்திற்கைந்திற் போய்மூன்றுபேராய்நிற்கத்
தரும்விதிநூறாய்னின்று தனபாக்கியமுடையனாவன்
செரும்பவளிதழின்மாதே செப்பினன்சுங்கன்றானே. 12

மூணுபேருடனேமந்தன் முதலவனாகிநிற்கப்
பூணிரண்டொன்றாய்மற்றைப் புண்ணியனின்றாராகிற்
காணுமேசெல்வமிஞ்சிக் கனக்கவேவாழ்வன்மாதே
ஆணுடன்பெண்ணும்பெற்றிங் கவனூறுவயதிருப்பன். 13

மகரகும்பத்தின்மந்தன் மழிநீசவமிசையன்றி
உயருச்சவமிசையாகி யோங்கியேனின்றாராகிற்
சிகரமொத்ததுபோற்செல்வஞ் சேர்ந்தனின்றுலகில்வாழ்வன்
விபரமுற்றுடையனாகி மேதினியிருப்பனாறாய் 14

நீலனுமுச்சமாக நிலவதுவாட்சியாகி
மேலெனுமரசன்சுங்க னிவற்குமேநாலாயனின்றாற்
பால்பெருஞ்செல்வமுண்டு பாக்கியவானுமாக
ஏல்பெரும்யோகமுண்டிங்கிவனுக்கேவயதுநூறு 15

ஆறிரண்டிடத்தான்மந்த னாயுசுகொடுத்தானுண்டாம்
ஏறுமற்றேழுபேரு மிவற்கவர்சுபமேயாகில்
வீறுமேயோகம்பற்றி விண்ணுளோர்க்கதிகனாகப்
பேறுமோரதிகனாகிப் பெரியவனாவனாறாய் 16
கூடியேயிருந்திட்டாலுங் கோணமாய்நின்றிட்டாலும்
நாடியேயணியாய்நின்று நல்லுச்சவமிசையாகில்
ஓடியேவருமேயோக மொளித்துநின்றிசைந்திட்டாலும்
தேடியேபிடிக்குஞ்செல்வந் திரும்பவேவயதுநூறும். 17

உதித்தவன்சோமன்விட்டா னேரெட்டோனீலனாரும்
கதித்தவனிருந்தவீட்டான் கனகனோடாறுபேரும்
ஒருத்தருக்கொருத்தர் துன்ப மில்லையாயுறவேயாகில்
விதித்ததுவயதுநூறு விண்ணுளோரறியத்தானே 18

சனிக்கெட்டிற்பாபரில்லாச் சவிப்பிலார்கூடப்பார்க்க
இனிமட்டிவிவற்குநாலா யிருந்திடப்பாபரன்றி
செனித்திட்டதெட்டுக்கெட்டிற் சீதளனின்றானாகில்
செனித்திட்டுவருமோர்பாலன் சிரஞ்சீவியாகனிற்கும் 19

எட்டுடனெட்டினிற்க விருபக்கஞ்சுங்கன்ராசன்
விட்டிடனுதயஞ்சோமன் வெள்ளிக்கேழாகினிற்க
மட்டுடன்சனிக்குநாலின் மண்மகனிரவியன்றி
கட்டுடனுதித்தகாலை கண்டிடாதெமபுரத்தே 20

வீறுமோர்சனிக்குநான்கில் வெண்கதிர்பூமனில்லார்
மாறுமுக்கோணர்கேந்திர மதியுமேசகடமின்றி
ஆறுமிக்காறிரண்டோ னவன்சுகமானன்மாதே
நூறுமட்டிருப்பனென்று நுவலுவர்நூல்வல்லோரே. 21

நாலுகேந்திரத்துமன்னர் நலமாய்மூக்கோணஞ்சேர
ஏலுகந்திருக்குநீல னிவர்க்கேழிற்றீயோர்னில்லா
மேலுகந்தனத்தோன்மீறி மேருவிலெட்டோனானல்
ஆலுகந்தமர்ந்தமாதே யவனூறுவயதுள்ளோனும். 22

கதிக்கொருவீனமில்லாக் கனலவன்பார்வையின்றி
மதித்தொருவக்கிர மின்றி மன்னவன்பார்வையாகிக்
குதித்திருவுடனேசோமன் கூடவேயுதையனிற்கப்
பதித்தவர்கெட்டுக்கொட்டோன் பருநலமானூறே. 23

பதிமதிவிதியுநல்ல பாபரங்கிசமேயாக
விதிமதிபின்னிடத்தா ரிவருமேசுபரேசேர
விதிமதிபதிக்கோணில் வெய்யவன்பூமனிற்கிற்
சதிபதிமாதேகேளாய் சஞ்சீவிச்சிலைபோலாமே. 24

நீலனுக்கெட்டிற்பூம னிறைமதிக்கெட்டிற்புந்தி
சாலத்திராறிற்றீயுங் காமனுக்கொருநால்வேந்தன்
நூலனுக்குதையமாக நோயிலாதிருந்தாராகிற்
பாலனுக்கொருநூறும் படருமேபாயுரியோகம். 25

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கஞ்சுபரேநிற்க
மட்டில்லாச்சனிக்கேழ்நாலின் மன்னவன்வெள்ளிநிற்க
விட்டிடாப்பிறையுயர்ந்து வெய்யவற்காறிலாகி
இட்டமாயிருக்கிற்காளை யிருப்பனேவயதுநூறாய். 26

அற்பாயுள்.

விதிபதிநீசமின்றி வெய்யவங்கூடம்பார்க்க
அதின்மதிகுன்றினிற்க வதற்குநால்சனியேபுந்தி
மதியதின்குருவேநோக்கில்ல மந்தனும்வெள்ளிகூடிற்
சதிபதிமாதேகேளாய் சாவதிங்குடனேயுண்டு 27

உதையத்துக்கெட்டின்மைந்த னொருவனாய்நிற்கத்தானும்
மதியத்துக்கெட்டிற்பூமன மன்னவரிவர்க்கேழாக
அறையொத்துவிரவினின்றுங் கதற்கேழ்நாள்மந்தனாகில்
விதியற்றுனில்லாதாகு வினையுமேதீம்பாய்மாதே. 28

உதித்தெட்டுக்கெட்டின்மைந்த னூரகனுமிரவினிற்க
மதித்தெட்டுக்கெட்டினல்ல மன்னவர்பூமன்சேரக்
கதித்திட்டுசுங்கன்புந்தி காணவுமில்லாதாகில்
விதித்தெட்டுநாளுனில்லா வினையுமேதீம்பாய்மாதே. 29

அருக்கனுக்கெட்டோன்மந்த னமர்ந்திடவுதையம்பூமன்
இருக்கவுமிவரைநல்லோ ரின்பமாய்ப்பாராகிற்

பருக்கவேசோமனின்றிப் பாம்புடனின்முராகில்
உருக்கமாயுதித்தகாளை யொருநாளுமில்லாமாதே. 30

நீலனார்தனக்குநான்கி னின்றிடவாரற்றானும்
கோலமாய்த்தீயர்நின்ற குடிமனையதற்குநான்காய்ப்
பாலமாய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவேகூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுநில்லா. 31

ஒன்பதுபேருநின்ற நிலையதிலொருமையில்லாத்
துன்பமாயெட்டுக்கெட்டாய்த் தோன்றியேநின்முராகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கிலுந்தீமையாகும்
நன்பலங்கொடுப்பதில்லை நட்டமாமுதித்தகாளை. 32

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின்புநால்வர்கிற்கக்
காட்சியாய்கேந்திரகோணஞ் சரியவர்நின்றிட்டாலும்
மோட்சமுண்டென்றுதானே மொழிகின்றவாறுதப்பாச்
சாட்சியாய்ப்போமேகாளை தனக்கிருப்பில்லைமாதே. 33

பெரியநூற்கெட்டின்மந்தன் பெரியசோமற்கேழ்புந்தி
அறியவற்கெட்டிற்பாம்பு மரும்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்ச நிற்கினுஞ்சுபமேயில்லைச்
சரியதாமிடமானாலுஞ் சாவதுநிஜமேகண்டாய் 34

பறித்தவிலக்கினத்துக் கிருபக்கம்பாபர்நிற்க
மறுத்துநின்றிடிற்பலத்தின் மனையினிற்பாபியாகச்
செறித்தவர்க்கேழிற்பாபி சென்றாதிபாபியாகிற்
குறித்திவராட்சியுச்ச மாகிலுங்கொடுபோங்காலன். 35

விதித்தவனீனமாக வெண்கதிரேழினிற்க
மதித்தவனஸ்தமிக்க மங்களனிவர்க்கேழாகப்
பதித்தவர்பகையேசேரப் பாஸ்கரன்மகனேழாகில்
எதித்தவர்நின்முராகி லேந்திழைமாதேகொல்வர். 36

தஞ்சமாய்கேந்திரகோணந் தரைமகனொருவனிற்க
அஞ்சுநான்முடவன்பாம்பு மவர்க்குநான்கிரவியாக
மிஞ்சியேசுபருஞ்சேர்ந்து வலமிடப்பார்வையின்றி
நஞ்சுடனுதிர்த்தகாளை நாசமன்றிரவுதன்னில். 36

வீசுங்கதிரோனெட்டிருக்க விரையமாவுஞ்சனியிருக்கக்
தேசத்திரமிடமாகச் செவ்வாயொருவன்கதித்திருக்கப் [போல்
பேசும்பெரியோர்நோக்கின்றிப் பெருமைதவிர்ந்துபேதையைப்
நாசக்குழவியன்றிரவு னடக்கும்வழிதானெமபுரத்தே. 38

ஏழோரிடத்திற்சனியிருக்க வெதிரானிடத்திலிரவியனும்
தாழ்வாம்பிறையந்தணனிடத்திற் றாணிசுதன்பாம்புடன்கூட

வாழாநின்றப்பெரியோரும் வலயிடத்தாகிலுநோக்கின்றி
வீழாததன் முன்னேநடந்து வீயுங்குழவியன்றிரவே. 39

நிலமகனுதையும்பாம்பு நின்றிடவிரையமந்தன்
பிலனுடனிரவியெட்டிற் பின்னேழிற்செவ்வாய்நிற்க
நலங்கொடுநல்லோர்நிற்கு நகருளோர்க்கீனமாகிற்
குடிகொண்டுக்கண்டபோது குறிகிடுங்குழவிசீவன். 40

பிறக்கும்பொழுதேயுதையமதிற்பிலனோடாலரவமுதமே
சிறக்குமதியோடிருமந்தன் சென்மாதிக்கோர்பகையாகி
நிறக்குநல்லோர்நோக்கின்றி நிலையற்றெட்டோனஸ்தமிக்கிற்
பறக்குங்குழவியிரவுநில்லாப் பத்தாதணையும்பலரோகம். 41

பிறைதேய்ந்தெட்டிற்கரியினுடன் பெலநோக்கின்றியுதையாதி
சிறையுந்திரவியுடன்கூடிச் செவ்வாய்மதியிடத்தானுடனே
இறைபூந்தெட்டோனரவமுட னெட்டாகநிற்கிலுமே
குறைசேர்ந்திருக்கக்கொடுங்கூற்றன் குறுகுங்குழவியிரவுநில்லா. ()

பத்தாவுதையத்ததிபதியும் பருமதியிடத்தானஸ்தமிக்கப்
பெத்தார்மதியுயரசனியுடனே பேரோடரவஞ்செவ்வாயும்
இத்தோடரவர்க்கெட்டாகம் புண்ணியரிவரைநோக்கின்றேல்
அத்தாடியத்துக்கதுமுன்னே யம்பலமாகுங்குழவியுமே. 43

குதிகொண்டநல்லோர்நிற்க குருமதியாறெட்டாக
மதிகொண்டுபாபர்வீறி மனைக்குநான்காகநிற்க
விதிகொண்டவிடத்தான்வீறி விரையமுன்னவனுமெட்டிற்
பதிகொண்டுநின்றாராகிற் பறந்திடுங்குழவிசீவன். 44

நல்லவர்நால்வர்பாபர் நடுவதினிற்கமற்றோர்
சொல்லுதையாதிசோமன் சுகமின்றிப்பாபர்கிட்டி
நில்லதிலுதையமெட்டோ னிலையவனெட்டிநின்றுள
வில்லமுத்ததிகமாதே வீயுமன்றிரவுதன்னில். 45

பறிநிலைமதியினெட்டோன் பாபருமுதையநிற்கக்
குறிமதியிடத்தான்பாபர் கூடியேமதிக்கெட்டாக
அறிவுநூல்வேதமூர்த்தி யவருமேபாராராகில்
மூறிபடுங்குழவிசீவன் மூவைந்துநாழிதன்னில். 46

எட்டுடனெட்டோன்கூடி யிருபுரம்பாபியாகக்
கட்டுடனெட்டுக்கெட்டிற் கரியரான்மிகைத்துநிற்க
மட்டுடன்வேதநூலான் மனையவர்பாராராகில்
விட்டுடன்போமேசீவன் விமூமைந்துநாழிதன்னில். 47

ஈராறெட்டோர்கேந்திரமதி லிருந்தமனையாராறெட்டிற்
சேராதவருடன்மதிபதியுஞ் சென்மத்துடனுஞ்சேர்ந்திருக்கக்

காராதுடன்வெள்ளிமந்திரியுங் கலந்தேழிரவிக்காகினுமே
ஈராறெட்டுநில்லாதிங் கிரவேகுழவியிறந்திடுமே- 48

இரவிநுன்றிடமுதையமதா யீரைந்திரண்டிடங்கரிசேயாய்ப்
பரவிநின்றிடச்சந்திரனும் பாம்புமவர்க்காறெட்டாகில்
அரவுபகையானிவர்க்காறி லந்தணர்நிற்கவுமதிக்கெட்டாய்க்
குறையுடனெட்டோனஸ்தமிக்கிற் குழந்தையேகுமெமபுரமே. 49

விதியுடனிரண்டொருபாபருமே விடமதியரவமுங்கரியுடனே
மதியுடன்புந்தியுங்கரிக்காறாய் மன்னவனிவர்க்காறெட்டாகில்
அதியுதைமதியவர்பகையாக வந்தணரிவரைநோக்கின்றிறேற்
கதிகுய்யத்துடன்கருமாண்டு கழன்றுவிடுமேகாசினியில். 50

சுந்திரனிடத்தானுதைபதியுஞ் சூரியனுடனேகூடவுமே
மந்திரியெட்டோன்மதிக்கெட்டோன் மந்தனுமாராலும்பார்க்கலுமே
புந்தியும்பாம்புங்கரிநாலாய்ப் பொன்வெள்ளிக்கேழினுமாகினுமே
இந்திரபதியோடானாலு மிறந்திடுமெமபுரவழியதுவே. 51

உத்தமரொருவர்நோக்கின்றி யுதையத்திடமதிற்பாபருமே
சத்தமவிடமதுநான்கினுமே சரிவரவாராலுமந்தனுமாயப்
பத்தினும்பாம்பிராவெள்ளி பாலாய்பொன்னும்நிற்கிலுமே
செத்திட்டன்றேகுழவியுமே சேர்ந்திடுமெமபுரவழியதுவே. 52

ஈனமாயிருக்கச்சந்திர னீராறிலிரவிபாம்பும்
தானுமோர்மதிக்கோநெட்டிற் சனியுமேயொருவனுக
சீனமேயிவர்க்குநான்கிற் செவ்வாயுநின்றனுகில்
தேன்மொழிமாதேகேளாய் செத்திடுங்குழவியன்றே. 53

பருமதிநின்றிடத்துப் பகலவனேந்தேயாகத்
தருவிதியொன்பதாகித் தரைமகன்மதியோடாகத்
குருபதிவிரையமாகிக் கொடும்பாம்புமேழிநின்றால்
வருமதுதீம்புண்டாகிக் குழவியுமன்றேமாளும். 54

நன்றியகோணமேந்திர நகருளோராறெட்டாக
னின்றிடவீராறெட்டோர் னிற்கவேகேந்திரகோணம்
அன்றியமதியோடினோராயினுன்மாதேகேளாய்
சென்றிடச்செய்வதெல்லா னின்றிடாதிருக்குஞ்சீவன் 55

ஆயுள்காண்டம்-முற்றிற்று-ஆக-ருகூஅ.

பிரதி அரிஷ்ட காண்டம்.

எட்டுடனெட்டுவீட்டி லிருந்தவன்பாபராகில்
பட்டிடன்சோமன்காரி மகிழ்ந்துடனவர்க்கேயேழிற்
பொட்டெனவிரவினிற்கப் பொன்சுங்கனிவர்க்கோநான்கிற்
கட்டுடனிருந்தாராகிற் கடனமாய்மரணமாமே. 1

எட்டவர்க்காறுவீட்டி லிருந்தவன்சனியேயாகிப்
பெட்டெனநான்கிற்செவ்வாய் பிரியமாய்னிற்கத்தானும்
மட்டறவிவர்க்கோநான்கின் மன்னவனிரவிதிங்கள்
ஒட்டுறவாகனின்றா லொருநாளின்மரணம்பிள்ளை. 2

பாம்புனின்றதற்குநான்கிற் பத்தியேசனியுநிற்கத்
தேம்புடனிவற்குப்பத்தில் வெய்யவன்சுங்கபுந்தி
ஆமிடமதற்கேயேழி லழ்புலிசெவ்வாய்நின்றாற்
காம்பிளமுலையினாளே கடினமாய்ச்சாவுமுண்டே. 3

மதிக்காறின்மந்தனிற்க மருவிடையிதற்கேயேழில்
அதிர்க்கோணமாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தானாகிற்
பதிக்காறிலிரவிபுந்தி பாங்குடன்சேர்ந்தேநிற்க
விதிக்காறுமாதந்தன்னில் விளையுமேமரணமாக. 4

விதியதிற்சனியேநிற்க வீரிமூன்னிரவியின்சேய்
அதியதிற்கைந்திர்பாம்பு மவருடன்மதியுநிற்கப்
பதியதற்கீறாகப் பருசுங்கனரசம்புந்தி
சதிரதமாகினின்றாற் சாவதுமெய்தான்மாதே. 5

சோமனாரிந்தவீட்டின் சொல்லிடஞ்சனியேநிற்கச்
சோமனார்வலமாயாறிற் றீயருங்குருவுஞ்சுங்கன்
பாமனாரிவற்கேரெண்டிற் பனிபுந்திகூடிநிற்க
ஏமனார்கூடவந்திங் கிழித்துடன்போவன்றானே. 6

எட்டவனிருந்தவீட்டி லிரவியும்பாம்புங்கூட
மட்டெனவவர்க்கேயேழின் மகிழ்ந்துடன்செவ்வாய்சேர
விட்டவனிடத்தின்மந்தன் விண்மதியிவர்க்கேயாறில்
மட்டுடன்சுபருநீச மாயினாற்குழவிசாமே. 7

தாழ்த்தியவெட்டோனீசஞ் சதிர்பின்னோனஸ்தமிக்க
வாழ்த்தியவுதையத்தானும் வலமதுசெவ்வாய்கூட
வாழ்த்தியவரவங்காரி மதிக்கேழினின்றாரீகிற்
போற்றியதனத்திற்சுங்கன்புந்தியுநின்றாற்சாமே. 8

குருவினிற்கெட்டிற்காரி குருமதிக்காறிற்பாம்பு
பிறருக்குமாறிற்சேய்க்கும் பிறகினோனஸ்தமிக்க

மருவொக்கப்புந்திநீச மகிழ்ச்சியில்லாமனிற்கக்
கருவற்றுப்போமேபிள்ளை கண்டுடனுரைப்பாய்மாதே. 9

கதிருதையத்துக்கெட்டோன் கனக்கவேயுதையஞ்சேர
அதைச்சரிகாரிசெவ்வா யமர்ந்துடனிருக்கத்தானும்
எதிரதிர்ச்சுபரில்லாம லிருக்கினுமாதேகேளாய்
சதிரொருநாளுநில்லாச் சாவதுவருவதுண்டே. 10

அருக்கனெனுக்கெட்டோனேழி லதிர்ச்சனிகூடிநிற்க
உருக்கமாயுதையத்தானு மொருமையாயஸ்தமிக்கப்
பெருக்கமாய்ச்சோமற்கெட்டோன் பின்புடன்மதியுஞ்சேர்ந்தால்
அருக்கமாய்ப்பிறந்தபிள்ளை யன்றிரவதனிற்சாமே. 11

புந்திமதிசுங்கன்கன்னி பொருந்தியநான்கின்மந்தன்
விந்தியபாபரெண்டில் வெய்யவன்விரையநிற்க
அந்தியுஞ்செவ்வாய்பத்தி லாறிநிற்குருவேநின்றாற்
சந்தேகமில்லைமாதே சாவதுமுடனேயுண்டு. 12

செனித்தொருவளவிற்காரி சேர்ந்திடவர்வங்கூட
இனிக்குருவேழினிற்க விவர்க்குநால்பூமன்சேரத்
தனித்தொருவீட்டில்வெய்யோ னனக்கேழிற்சோமனின்றாற்
கனிக்கரமானபிள்ளை கண்டிருமாதஞ்சாமே. 13

கரிமுகில்வண்ணன்காரி கதிரவனேழினிற்சப்
பிரியமாய்ப்புந்திக்கேழிற் பெருநாளன்சோமன்சேர.
அரியதாகுருவுக்கேழ லவ்வெள்ளிபூமனிற்கச்
சரியதாய்நிகழுமாகிற் சாவதுமுண்டுமாதே. 14

உதையமாமதிபன்னிரண்டா யினுமாறெட்டாயினுமே
இதையாதிபதிக்கேழினிற்சனி யொருவனுமேநிற்கச்
சிதையாமதியேழிடமாகவே சேரவும்பூமகனுர்
வதையாதியெவருமொரு குழவிமாண்டிடுமே. 15

மந்தனுர்க்கிருபக்கஙகதிரோன்செவ்வாய் மகிழ்ந்துடனெட்டிலொருபாம்மேநிற்கத்,தொந்தனுய்ச் சுந்திரர்க்கேசனியேழாகிற்சுபருமேயிரவிவிடையின்னிடமதாக, வந்தனுருதையத்துக்கதிபதிவருநீசமாகியேவிமாத்திடமதனில் அந்தகனுர்புரமதின்மதிப்பாகவேயவிழ்ந்து குழிவிவருவதிதாகவே. 16

ஆறெட்டுக்குடையோர்சேர்வுற் றம்புலிராஜ[illegible]
மாறிட்டுமெட்டாருக மறுத்தங்கேகூடர[illegible]க்
கூடிட்டவுதையந்தன்னிற் குறிவிடைநிற்க[illegible]தானும்
வேறிட்டுப்போமேபிள்ளை வீவதோராண்[illegible]ண்டில். 17

[illegible] ஆவணக் காப்பக [illegible]
222978

இரவிசுன்செவ்வாய்தானு மிருந்தோரின்னிடத்தார்சேர்ந்து
கருதுதையத்தினிற்கக் கனமதியீனமானல்
அரவுமோருயிரெட்டாக வமர்ந்துடனிருந்தாராகில்
தரவறும்பிள்ளைநில்லாச் சாவதுகுழவிமாதே. 18

பகையோரைந்திலிவ்விடத்தாரு மிகையோர்நான்கிற்சேர்ந்திடவே
மிகையோர்நான்கிடத்தாரு மேலெட்டாறிலிருக்கினுமே
வகையொருபொல்லாதொருவனுமே வந்துதையத்தினின்றிடவே
நகைபருவத்தினிற்சேந்திடுமே நமனுருலகநண்ணுதலே. 19

கண்டிடனுதயமுன்னும் பின்னுமாய்சனியேபாம்பும்
விண்டிடுனின்ருராகில் விண்மதிக்குருவுமெட்டில்
மொண்டுடன்சுங்கன்மூன்றின் முழுகதிர்நான்கினின்ருற்
கொண்டுடன்போவர்தூதர் குழவியைக்கூறுசெய்தே. 20

சங்கனுக்கிராறெட்டிற் சூரியன்காரிசெவ்வாய்
அங்கனேராசனின்ற வதற்கெட்டிலரவநிற்கப்
பொங்கமாய்ச்சனிக்கேநான்கிற் போயிருந்தவனுஞ்சோமன்
இங்கிதமாகநின்ரு லிவனுமோராண்டிற்சாவன் 21

ஏழுடனுதையம்பத்தி லிருக்கவேசனிசேய்தீயர்
வாழ்மதிநல்லோராண்டில் வருந்தவத்திடத்திருந்தால்
தாழ்வுடனரவுமெட்டிற் றளர்ந்திடாதிருந்தானுகில்
வாழ்வுடன்கூடம்பேமே வந்தநாளதனிற்சாகும். 22

கோணத்தார்சேர்வுற்றெட்டிற் கூடியேசனியுநிற்க
நாணெத்தமதியும்வேந்த னுலிரண்டாகிநிற்கச்
சேனுற்றசெவ்வாய்ரெண்டிற் செம்புள்ளிபாம்புநான்கிற்
காணுற்றுநின்ருராகிற் கருதியேகுழவிசாமே. 23

ஆதித்தன்காரிசோம னமர்ந்துடன்கூடிநிற்கச்
கோதித்துக்குருவுமெட்டிற் கோணமேயரவநிற்கச்
சாதித்தத்தனத்திற்செவ்வாய் சரியவருடனேசுங்கன்
வேதித்துநின்ருராகில் வீயுமேயாண்டிரண்டில் 24

போமென்றுசொல்வாய்மாதே பூமனர்சனியுமெட்டில்
ஆமென்றவிலக்கினத்தா னவனுமேயிரவிகூடில்
ஏனென்றவுதையந்தன்னி லெட்டவனிருக்கத்தானும்
நாமென்றுசொல்லவேண்டா நமனதுகொண்டுபோமே. 25

போமென்றுசொல்லலாமே பிதுர்நவநீசமூடம்
ஆமென்றுசொல்லலாமே யந்தெட்டுக்கெட்டோனீனம்
நாமென்றுசொல்லப்பேசமோ நன்மதிபகையுமானற்
சாமென்றுசொல்வாய்மாதே சார்ந்தொருகாளைபேறு. 26

இட்ந்தடவாகநின்று விதிற்குருபார்வையாகில்
வந்தடவாகிநின்று வழிபார்க்குமெமபுரத்தே
செந்தடவாகிச்சுங்கன் சென்மாதிபார்வையாகிற்
பொந்திடத்திருந்தமாதம் போய்விடுமென்றுசொல்லே. 27

பிறையிறைசனியும்பாபி பிரியமாய்நிற்கக்கூட
நறைபிறப்பில்லாவேட்டோ னலங்குன்றியஸ்தமிக்க
இறைபிறந்ததியுங்கேந்திர கோணருநலமேயன்றித்
தரைபெறல்சொல்லலாமோ சாவதுநிஜமேமாதே. 28

புல்லதால்சனிக்கோநான்கிற் பூமனூர்பகைத்தேநிற்க
ஒல்லையிலிரவிநான்கி லொருவர்கூடாமனின்றால்
மல்லதாய்ப்பிறையுந்தேய்ந்து மதிக்கெட்டி லுதயநின்றாற்
சொல்லலாஞ்சாகுமென்று துணிந்துட னுண்மைமாதே. 29

மறித்தொருசனியினிற்க மற்றும்பொன்னஸ்தமிக்க
மறித்தவன்சுங்கனீசம் வெய்யவன்மதிக்கேயெட்டிற்
பறித்தவன்பகையோர்சேர்ந்து பாம்புசேய்க்குதையனிற்றாற்
குறித்துடன்சொல்வாய்மாதே குழவியுஞ்சாமேயென்று. 30

செறித்தலக்கினதிநீசஞ் சென்மாதியஸ்தமிக்கக்
குறித்தங்கேசனியுமெட்டோன் கூடியேயுதையஞ்சேராக்
கறித்தொருசெவ்வாய்நான்கிற கண்டிடிலேழிற்பாம்பு
தெறித்துடனின்றாகின் மரணமேகுழவிதானும். 31

சோர்தபாவியோடே சென்மாதிகூடிநிற்கப்
பாராதநல்லோர்நின்று பனிமதிக்கெட்டாய்நிற்கக்
காராமனுதையத்தானுங் காரிசேய்க்கேழினிற்க
வாராதேவருமேதீம்பு வையகந்தன்னின்மாதே. 32

ஒருமையாய்க்காரிசெவ்வா யுதையத்திற்சேர்ந்துநிற்க
அருமையாய்ச்சோமனேழி லவரியுங்கூடனிற்கப்
பிரியமாய்நான்கிற்பாம்பு மிதற்காறெட்டாறுகிற்
கரியதாய்பிள்ளைகூடக் கலந்துடன்சாமேமாதே. 33

பத்துடன்பத்துவீட்டிற் பதியவர்பதியாய்நிற்க
இத்துடன்கோணத்தாரு மிழிகுலமாயிருக்க
மத்துட னுதயமேழோன் மனமிலடைந்தஸ்தமிக்கச்
செத்துடன்போமேபிள்ளை க்ஷீணசந்திரனுமானால். 34

விண்ணவர்பிறக்கிற்றீது விளையும்வாறேதோவென்னில்
நண்ணவர்சுகப்படாம னலக்கமாமறிப்பேயாகிக்
கண்ணவர்பாம்புஞ்சேயுங் கரியவனிவர்கள்சேரிற்
கொண்ணவர்காலாய்நிற்பர் கொடுங்கணைவழியினாளே. 35

வையகத்துதித்தபேர்க்கு வருகின்றவரிட்டமெல்லாம்
பொய்யரவிரவிகாரி பூமனுநான்காய்க்கோணம்
மெய்யரவாகினின்று மிகைத்தவர்க்காறெட்டாகிற்
கையறமாதனின்று கலங்குவர்புவியின்மாதே. 36

மண்ணுளோர்பிறக்கிற்றீது வருவதுகேளாய்மாதே
நண்ணுளோர்கேந்திரகோண நகருளோராறெட்டாகக்
கண்ணுளவீராறெட்டோர் கதித்துநாற்கோணஞ்சேர்ந்தால்
எண்ணுளசுகமுந்தப்பி யிருப்பதுமில்லைகண்டாய். 37

மரணமேயெனச்சொல்லின மதியுமேசனிக்கேயெட்டில்
அருணனையரவந்தீண்டி லக்கணமிறப்புநோக்கி
இரணமாய்ப்போமேபிள்ளை யிருப்பதுபொய்தான்மாதே
அரணினிலிருந்திட்டாலு மன்றிரவதனிற்சாவே. 38

தோஷநிவர்த்தி.

சாவதுமெய்தான்சொல்வாய் சனிகெட்டுவிரவிநிற்க
ஆவதுகலையுயர்ந்த பூரிணமதியைப்பாம்பு
நாவதுநீட்டிப்பார்க்க நாஞ்லிலத்துதித்தகாளை
போவதுமெய்தான்சாவே பொல்லாதகெடுதிமாதே. 39

பூரணபெலத்தினேடு புண்ணியர்சுபமேயாகிற்
காரணமில்லைசாகக் கனக்கவேவயதுமுண்டு
சீரணமதியேயானுற் செல்வருந்தாழ்ந்துநிற்பர்
கூரனிபபாபர்மேலாய்க் கொல்லுவர்கொஞ்சநாளில். 40

எட்டிரண்டுடனேசோம வீனமில்லாமனிற்க
விட்டோருபதிநான்கேழுக் கினியவற்மேலாய்நிற்பர்
மட்டொருகலையினின்றுன் மாறுமுக்கோணர்மேலோர்
தொட்டதுகுறிதான்பார்த்துச் சொல்லவும்வேண்டுமாதே. 41

முன்மூன்றுபிறையுற்பொல்லா மூனறுகோணத்தார்பொல்லார்
யுன்மூன்றிபிறையிற்கேந்திரப் பதியரும்பொல்லாராவர்
தன்னுறுபனிரண்டெட்டோர் சமனுகவிருப்பர்தாமும்
வன்காதலுள்ளமாதே வகையறிந்தெடுத்துசசொல்லே. 42

பொல்லாதபாபர்நிற்கப் புகுந்திடப்புந்திதானும்
எல்லாருநலமேயாவ ரிருந்திடவிரவிநல்லோர்
சொல்லாதபகையேகொண்டு தோன்றியவயதுமட்டும்
இல்லாதுசொல்லப்போமே விளங்கிளைங்கினியமாதே. 43

உச்சமேயாகினல்லோ ரொருவேளைநீசமாகும்
அச்சமேபொல்லாதாகி யவருமேதிம்பாய்நிற்பர்

குர்ச்சமேய்நீசமாகிற் கொள்குமோருச்சமுண்டே
மெச்சவேநல்லோராகி மேலாகிநிற்பர்மாதே. 44

ஆட்சியாய்நின்றபேர்க்குத் தாட்சியுங்கொஞ்சமுண்டு
தாட்சியாய்நின்றபேர்க்கிங் காட்சியுங்கொஞ்சமுண்டு
ஆட்சியைமகிழ்ந்துபார்த்துத் தாட்சியைத்தள்ளவேண்டாம்
கெட்சியாயூடுதாக்கிச சரிப்படச்சொல்வாய்மாதே. 45

பகையென்றுசொன்னார்ச்சொல்லும் வகையிலேநல்லதாகும்
நகையென்றுசொன்னால்வந்து பகையாகநிற்குமாதே
மிகைவகைதெளிந்துபார்த்து மேதினிதனிலேநன்றாய்
வகைதொகையறியாதார்க்கு வகுத்துரையினியமாதே. 46

ஆட்சிநட்புச்சநீச மறியவேபகையுங்கூடச்
சாட்சியாயுதையந்தொண்டு சதிர்கோணமீராறெட்டும்
மாட்சியாய்லாபம்ரெண்டு மகிழ்ந்திதிலூடுதாக்கி
ஆட்சியாய்ப்பார்த்துச்சொன்னாலையமொன்றில்லைமாதே. 47

ஒன்பதுபேருநின்ற நிலைதனையூடுதாக்கி
இன்பமாய்ப்பார்த்தொன்றுக்கொன் றிருப்பதுகேந்திரகோணம்
தன்பதிக்கீராறெட்டிற் றனலாபமானோர்கொண்டு
பொன்பதிமதிக்கேபார்த்துப் போம்பலன்சொல்லலாமே. 48

காரியைப்பிடித்துப்பார்த்துக் கடுகவேவிதியைச்சொல்வாய்
சூரியன்றனைப்பிடித்துச் சொல்லுவாய்பலன்பிதுர்க்கு
வீரியபாம்பைப்பற்றி விளங்கவேயோகஞ்சொல்வாய்
சோர்விலாச்சுங்கன்றன்னாற் களத்திரபலனைச்சொல்லே. 48

பூமனுடன்பிறப்பைப் போதவுமறிந்துசொல்வாய்
நாமனால்பெரும்புந்தி நல்கணக்கினியபுந்தி
தாமனார்முகத்தினாலே தையலேசொல்லக்கேளாய்
சோமனார்முதலாய்க்கொண்டு சொல்லவேவேண்டுமாதே. 50

மந்தன்பூமன்மதிக்கெட்டின் மற்றோர்குருவுஞ்சுங்கனுமே
வந்தங்கிருந்தவரவினுக்கும் வகையாயிரவிமதிக்கெட்டில்
சொந்தங்கிருந்தாற்சகலமுமே சொக்காடாகவிளையுமது
பந்தயங்கூறிச்சொன்னாலும் பலியாதிவர்க்குப்பகைவருமே. 51

எட்டோனிரவியாயினுமே மதிக்கெட்டாயிற்பகையாமே
கட்டாயமர்வுற்றெட்டினதற் கெட்டாயரசன்கூடினுமே
கெட்டோனரவமிருந்திட்டதுசு கெட்டாய்சுங்கனிருக்கிலுமே
கெட்டோன்கெட்டாலப்போதுக் கெட்டுயிரிழந்துமாண்டிடுமே. 52

மட்டாய்ச்சுங்கன்மதிக்கெட்டின் மலர்ந்தேயரசன்விதிக்கெட்டில்
எட்டாயிருந்தோனவர்க்கெட்டி லிரவுபாம்புமிருந்திடவே

எட்டாய்ச்சனியர்க்கெட்டாகிற் குருபுந்தியைரவியும்விட்டாற்
சிட்டாய்ப்பலந்திடுங்குழவிச் செகமேலிருப்பார்க்குரைமாதே. 53

இரவியாறெட்டிற் பொன்னவனிருக்கநோக்கப்
பரவியுயர்ந்தயிதற்கே யிருநான்கிற்பாம்புநிற்க
அரவுநின்றவவ்வீட்டுக் காறெட்டமரச்சேய்சனியும்
மருவியிருக்கும்மதுவாகிற் செனித்தகுழவிமாண்டிடுமே. 54

உதையத்தாரு மிரவியுமதியினிற்க
மதிபொத்தசனிக்கே யிருநான்கின்மன்னவனும்
அதைத்தொரு நான்கிற்சேய்சுங்கன்
விதியத்துடனிருப்பது மிப்படியே. 55

உதையாதிபார்க்க வுபமதுகாணுதாகில்
மதியாகப்பிடித்துப்பார்க்க வண்மையுந்தெரியாதாகில்
கிரகாதியாகப்பார்க்க கிடைத்திடுமுள்ளதெல்லாம்
விதியாகசசொல்வாய்மாதே வேறொருநினைவேயன்றி. 56

இப்படிச்சொல்லத்தக்க தெத்தனைகுறியோவென்னில்
நற்படியுதித்தோர்நல்ல நசுரம்போற்கிரகம்போலச்
சொற்படிநன்முகூர்த்தஞ் சோபனமருவுஞ்சாந்தி
அப்படிப்பலனீயாது மணையுமதுவேயோகம். 57

சுபமதுசெய்புங்கர்மங் சொற்றனம்வேறேவேண்டாம்
நிபமதிலட்சந்தோஷ நிறுத்துமேகிரககேந்திரம்
இபமதாய்ச்சுபங்களெல்லா மெத்திக்குமதுவேநன்று
உபமதுகேந்திரநல்லோ ருறுதியினதுதான்சொல்லே. 58

பிரதிஅரிஷ்டகாண்டம்-முற்றிற்று-ஆக 456.

தனக்காண்டம்.

தனலாபம்.

தனபாக்கியலாபமானோர் தாழ்விலாச்சுபரேசேர
மனையோக்கியமின்றிநல்ல மனையாட்சியுச்சமாக
இனசவுக்கமிலாபாப ரிவரையேபாரரல்ல
வினவுறுமாதேகேளாய் வேண்டியபொருளுண்டாமே 1

கன்மாதிமுன்பின்னேருங் கலந்துடன்றனமேசேரச்
சென்மாதிதனத்தோன்கூடிச் சேர்ந்துடனிலாபஞ்சேர

மண்மாதினுதிர்த்தோனீலன் மனையிராதிரவிபாராப்
பெண்மானினனையமானே பெருந்தனத்தவனாய்வாழ்வன். 2

தனத்தவனிடத்தான்லாபன்றனியராயவர்க்கேழ்பொன்னன்
சினத்துடனிலாபமானேற் கென்மாதிதனமேழாகக்
கனத்துடனிரவிபூமன் காரியுமரவநோக்கா
மனத்திடமாகநின்றான் மகமேருகிரிபோல்வாழ்வன் 3

உத்தமனுதயங்கூடிச் சத்தமர்க்கேழினிற்க
நித்தமன்மனையோன்கூடிச் கொற்றவர்க்கேழேயாகில்
இத்துடன்சனிசேய்நிய ரிரவிபாம்பிவரைப்பாராப்
பெற்றவன்றவமேயென்னப் பெருமையாய்ப்புவியில்வாழ்வன் 4

சுபர்கோணகேந்திரர்க்கேழ் சுற்றியேபாபரின்றி
அவர்கேந்திரகோணமானே ரம்மனைச்சுபரேசேர
இவர்க்கதிகாரிதீயு மிருந்திடமீறாகில்
எவரிதற்பிறப்பானாலு மேந்திழைதன்றுண்டாமே 5

தனமதுபாக்கியலாபந் தலைவருமிருப்பிடத்து
மனமதுற்றைந்திலாறின் மந்தனராலேழாகி
இனமதுசுபர்நோக்கில்லா திருக்கினுமர்தேகேளாய்
குணமதுதனமேநாசங் குறியிதுதப்பாதாமே 6

தனநஷ்டம்.

பத்தொருவேழிரண்டோன் பாஸ்கரனுடனேகூடி
மற்றொருவிராறெட்டோர் மனையதிற்கூடினாலும்
சத்துருவுடனேகூடிச் சனிக்குநால்சரியுமாகி
மித்துருபார்வையின்றேல் மிகுதியுந்தனமேநாசம் 7

அஞ்சுமூன்றெட்டிற்காரி யாராலுமிரவினிற்க
நஞ்சுபொஞ்சுங்கன்புந்தி நலமதியிவரைப்பாராச்
செஞ்சுடர்க்கிரணன்பக்கல் சேர்ந்துடனுதையனின்றால்
மிஞ்சிடுபாக்கியமில்லை மிகத்தரித்திரமேயுண்டு 8

எட்டொரிரண்டிலாப மிரவியுங்காரியாரால்
மட்டிடோராறெட்டாகி மதிகுருசுங்கனிற்க
விட்டிடோரிரவிக்கேழில் விடையுமேயுதையநின்றால்
இட்டொருநாளுநில்லா திவன்றனநாசமாமே. 9

உதையமூன்றெட்டிற்பாப ரோங்கிடவிலாபமுன்பின்
பதியவேமுன்பின்பற்றிப் பாபரேநிற்கக்கூட
மதியுமேயீனமாகி மனமிடைந்திராறுகிப்
சிதையுமேதனமுநாசஞ் சீர்கேடனுகிவாழ்வன். 10

தனத்தினுவிரவினிற்கத் தரைமகன்றர்ம்மானுற்
செனுத்தநான்மந்தனுகச் சென்மாதிக்கொருநால்புந்தி
மனுத்திலரவனிற்க மந்தனுக்கொருநான்காகில்
இனத்தினுற்றனமேநாச மிருமூன்றிற்சுங்கனுனல். 11

தனக்காண்டம்- முற்றிற்று. ஆக 497.

ரோககாண்டம்.

ரோகமின்மை.

செனித்தவன்மதியுநல்ல சேர்ந்திடஞ்சுபமேயாக
விதித்தவனுறெட்டாகி வெள்ளிபொன்னுதயமானுர்
குறித்தொருநாளும்ரோகம் கொண்டிராதலறியோடும்
பறித்தவனுடனேசோமன் பற்றினுல்ரோகமில்லை. 1

உதித்தவனிலக்கினத்திக் கோரிருபக்கநல்லோர்
மதித்தவனிடத்தினல்லோர் மன்னவன்பார்வையாகிற்
குதித்ததப்புரத்தேயோடிக் கூப்பிடும்ரோகமில்லை
செனித்திடத்திருந்தாற்சுங்கன் சேராதிரோகந்தானே 2

மதிக்கிருபக்கநல்லோர் மன்னவனேழினிற்க
உதித்தொருவிடத்திற்சுங்க னெருவனுய்நின்றுராகிற்
பதித்கொருரோகமில்லாப் பண்டிதனுகிநிற்பன்
இதற்கொருரோகமின்றென் றேந்திழைமாதேசொல்வாய். 3

உதைய்ாதிபதியைநல்லோ ரோங்கியேபார்ப்பாராகில்
இதைஇருபக்கநல்லோ ரிருக்கினும்பாபரின்றி
அதையாதிமதியுஞ்சேர்வுற் றவ்விடலானேயாகிற்
சுதமதன்போலவாழ்வன் சொல்லுவாய்ரோகமில்லை 4

சதிரநால்கோணமூன்றுற் சவுமியரிழிக்கநோக்க
எதிரதிற்கூடிநில்லா திருக்கலும்பாபரன்றி
மதுரமாய்மதியும்வீறி மனையதுநலனேயானுல்
விதாணமாகவாழ்வன் வினைதீம்புரோகமில்லை 5

ரோகம்.

எட்டினிலுதையந்தன்னி லிரவிபுமிருக்கநோக்கப்
பொட்டெறவுதையோன்கூடிற் பொல்லாதபித்தரோகம்
கட்டியகச்சிநாளே கனல்வண்ணனிருந்திட்டாலும்
விட்டிடாதிருக்கும்பித்த ரோகமென்றறிந்துகொள்ளே 6

சீனமாய்மதியிருக்கச் சேர்ந்திடப்பாபர்தானும்
ஈனமாங்கடகந்தேளு மிடர்சுரவாகினின்றால்
ஈனமாமீராறெட்டிலிருக்கிலும் க்ஷயமேயுண்டு
மானமேயுடையமாதே மடிவனேக்ஷயரோகத்தில் 7

சரமதிராசிசுங்கன் றனியிராப்பாபர்கூட
அரவதிற்சனியுஞ்சோம னவருமேயாறெட்டாகி
ஊரமுளவிலக்கினாதி யோரையுமாறெட்டாகில்
வரமதிலுதித்தோர்க்கெல்லாம் வந்திடும்க்ஷயரோகந்தான் 8

இந்தரெண்டெட்டிற்புந்தி யிராசனுங்குச்னேநோக்க
வந்திடஉதயத்தானும் வக்கிரனேடுக்கூட
சந்தோஷமதியுஞ்சீண சவுமியர்பார்வையன்றி
அந்தெட்டுக்குடையோன்லக்ன மாகினார்சுரமேயுண்டு 9

லெக்கினம்பாபர்நிற்க ரெண்டெட்டில்வெள்ளியாகில்
இக்கணமுதையத்தானு மிழிகுலமாயிருக்க
மெய்க்குருசோமனின்ற விடமதிற்பாபர்நோக்கில்
மிக்கெனுநதனத்தினாளே பிரமியவியாதியுண்டே 10

எட்டிரண்டிடத்தில்ராகு விருக்கிலுமுதையஞ்செவ்வாய்
மட்டுடன்சோமனின்ற மனையதிற்பாபர்நிற்க
விட்டிடாதிருக்கின்மூலம் விடையனும்விரையனானல்
தொட்டிடும்பிடைவியாதி தோன்றியமுதலாய்மாதே 11

எட்டினிற்செய்வாய்நிற்க வேழினிற்பாபர்நிற்க
மட்டினிலெண்டிரண்டின் மணியாரக்கேதுநின்றால்
தொட்டிடுந்திலதமாதே தோன்றியமுதலாய்த்தானே
விட்டிடாரெணங்கள்கண்டு வீழ்வனேகுதரோகத்தில் 12

சனியுதையத்தினிற்கச் சந்திரனுரெட்டாக
இனிகுசனிவரைப்பார்க்க விவனுக்கேகிரந்திரோகம்
பனிமதியுடனேபாபர் பார்க்கிலுமிரத்தரோகம்
அணிமதிக்குன்றிநின்று லாசனரோகமுண்டே 13

மகரகும்பத்திற்சோமன் மாறியேபாபர்கூட
அகமுறச்செனித்தராசிக் காரெட்டுமோமேயாகில்
நகருநதராசியர்ள னட்பின்றிநீசமாகில்
விகற்பமாய்க்கெடுதிரோகம் விளையுமேயனேகமாக 14

உதித்தலக்கினத்தில்ராகு வுடையவன்கூடநிற்கப்
பதித்திடத்தெட்டின்மைந்தன் பாபருங்கூடநிற்கக்
கதித்தவனிரவிலக்னங் கலந்துடநின்றாகிற்
செனித்தநாள்முதலாய்மாதே ஜென்மாதிவெள்ளைகுஷ்டம் 15

செனித்தலக்கினத்திற்பாபர் சேந்துடனிராகுனிற்கக்
குறித்தநாலோனுநீசங் குணவீனமஸ்தமாகில்
இனிக்கரிசோமன்கூடி யிவனுமேக்ஷீணமானால்
மனத்தொருநாளுனில்லா மார்பினிசூலைகாணும் 16

எட்டினிற்பூரிசேய்க் கிங்கிருந்ததுமூடவனாகில்
தொட்டுடன்பாபர்பார்க்கத் தோறியவுதையத்தோனும்
மட்டுடன்பகையடைந்து மடிப்பஸ்தநீசமானால்
விட்டிடாமார்பிற்சூலை விளையுமேயதனிற்கண்டம் 17

அட்டமத்தோன்நீசனு மந்துதனிற்கரிசேயாகில்
நட்டமாய்த்திங்கணிற்க நல்லுதையத்திற்பாபர்
இட்டமாய்நல்லோர்பார்க்க விருக்கவுமில்லாதாகிற்
பொட்டெனவருமேரோகம் பொல்லாதசிரகிற்பிணை 18

பூமனுமாறினிற்கப் புகுந்திடவெள்ளிதானும்
சோமனுஞ்சனியுங்கூடிச் சொல்லுதையததிற்பார்க்கக்
காமனுக்கட்டின்மன்னன் கருதியேநீசமானால்
போமதுசீவனில்லாப் பொல்லாதரோகந்தீதே. 19

சுங்கனெட்டதனினிற்கச் சூரியன்கூடச்சேர
இங்கிதமானபூம னிவற்கேழிலுதையமாக
அங்குமோர்சோமனின்ற வந்நிலைபகையுமானால்
இங்கிதராஜனீச் மாகினுவிரணமுண்டே 20

ஆறுமீராறிரண்டி லம்மனையாரும்பாபி
சேருமேயாகினல்லச் சென்மமதியுடனேபாபர்
பாருமேபரிதிநீசம் பகையடைந்தரசனின்றால்
மாறுமேநேத்திரம்ரெண்டு மனந்தடுமாறிநிற்பன் 21

இரவிசுன்மதியுங்கூடி யிருந்திடப்பனிரண்டாக
அரவுசேயிரண்டினிற்க வவர்க்கேழிலரசனாகப்
பகைகேந்திரத்திலானோர் பகைநீசமூடமானாற்
குறைமதியமிசைநீச மாகினாற்குருடனாமே 22

இருமூன்றுமிடத்திற்சோம னிரணியன்கூடநிற்க
வருதனமருவீராறில் வந்திடவுதையம்பாம்பு
குருசனியுடனேகூடிக் கோணத்தின்பின்னேநிற்க
வருமதுநேத்திரானி மைவிழிமாதேகேளாய் 23

முனிலாபத்தின்மன்னர் முன்பின்னாய்ப்பாபர்நிற்க
வேணுமென்றானீச மங்கிசையதுவேயானாற்
பேணுமோர்மதியுமூன்றும் பிறையுடனீனமானாற்
காணுமேகைகாலூனங் கண்டிடுமெசதியாக 24

சரசதிலாபமாகச் சதுரைந்துதிரமேயாக
உரமதுவுபையமேழா யுடையவர்கேந்திரமாகிற்
சுரமதாய்க்காணும்தன்னே சோகமாய்விசாரமுண்டு
இராவிலோர்சுகமில்லாம லிவனுக்கேபேய்பிடிக்கும் 25

இருந்திடமதனிற்பூம னிருக்கவுங்காணமூலம்
வந்திடுந்தீராதாகும் வல்லவர்சுபர்நோக்கானால்
நொந்திடுந்தீம்பைந்தாண்டி னோக்கினாற்றீயர்கொல்வர்
இந்தடைவாகிச்சீவ னிறந்திடுங்குருநோக்காட்டால் 26

சூரியனிருந்தார்க்கேளாய் சொல்பூதமாகக்காணும்
காரியோனிருக்கிற்காணுங் கருமகாபூதமாக
வீரியனிருக்கினல்ல விஷமதுகடித்துக்காணும்
கூரியோன்சிந்தையாகிற கொண்டவெட்சணிபீடிக்கும் 27

மந்திரியிருக்கினல்ல மறையதேவ்தையேகாணும்
சுந்திரனிருந்தாற்றுர்க்கை தோஷமாம்பிசாசுக்கேது
அந்தரசானசுங்க னாகில்ராட்சசியேயாகும்
நந்துறுமசுபர்பார்க்கின் சித்துடன்கொல்வர்மாதே 28

ஆறவலுதையனிற்க வைந்துதையோனுஞ்செவ்வாய்
வேறதுனில்லாக்கூடி வேண்டியேயிடத்தினிற்க
ஏறவுமில்லாச்சோம னிருபிறையாகினின்றால்
தேறவொட்டாமனிற்குந் தெளியாதசுரமேகாணும் 29

கர்ப்பனையுதையந்தன்னிற் கண்டிடிற்கேதுவானால்
நிற்பதுகுளிகன்பத்தேழ் நாலினினின்றானாகில்
அர்ப்பருஞ்சுபருமற்றோ றவரையேபாராராகிற்
சொர்ப்பனமதனிற்றெய்வம் போலவேதோன்றுமாதே. 30

உதையத்திற்சுங்கனிற்க வோரேழின்முடவனைக்
சிதைவுற்றசோமன்றன்னைச் செல்வரும்பாராராகிப்
பதையுற்றபாபர்பார்க்கிற் பிசாசுகள்பூதர்காட்சி
விதமொத்தமயிலினாளே மேலுரைவியாழநீதி 31

ரோககாண்டம்-முற்றிற்று-ஆக 498.

புத்திரகாண்டம்.

வெகுபுத்திரர்.

பஞ்சமனாட்சியாய்ப்பொன் பகையிலாப்பாபரன்றிச்
செஞ்சுடர்க்கீராறுறிற் சீர்தவமந்தன்பக்கம்
மிஞ்சிநாள்கேழிபத்தின் மிகுதியினின்றானாகிற்
கொஞ்சியேயநேகம்புத்திரர் குறைவிலாதிருப்பர்தாமே. 1

அஞ்சுடனஞ்சுவீட்டா ரவ்விடம்பார்வையாகி
மிஞ்சியாண்டளப்பனாட்சி மேருவினிற்கத்தானும்
நஞ்சுகொண்டிருந்தோனாரன் ஞாயிறிபுந்திநீலன்
வஞ்சிரண்டாரெட்டாகிற் புத்திராநேகமுண்டே. 2

புத்திரவிடத்தேநல்ல புண்ணியவான்கணிற்க
மித்துருவானோர்பக்கல் புத்திரவானுஞ்சேரச்
சத்துருவானபாபர் சரியதாய்நில்லாராகிப்
பத்திருமறையோனாற் பாராளப்புத்திரருண்டே. 3

நாலாறுவிடத்தினல்லோர் நல்குருவுச்சமாட்சி
மேலாறுபின்னோனேழின் மிகுத்திலாபத்தினிற்கக்
தானாறுபனிரண்டெட்டிற் றாழ்வுள்ளபாபர்சேரப்
பாலாறுமுடையோனாகிப் பாராளப்புத்திரருண்டே. 4

அரசனார்பெலத்துநிற்க வவ்வைந்துக்குடையோனட்பாய்ச்
சரசமாயைந்தாம்வீட்டைச் சத்துருபாபராகில்
அரசராம்பொல்லாராட்சி யுச்சமாயிருக்கத்தானும்
விரசமாயநேகம்புத்திரர் விளையுமேமரிப்பில்லாமல். 5

குருவொருவினமில்லாக் கோணத்தினடுவேநிற்க
அருகிருவைந்துவீட்டா னவனுமேலாபமாகில்
திருகொருபாபாந்தச் செய்காரியாதெட்டாகில்
வருமொருவைந்தினல்லோ ராகினாற்புத்திரருண்டே. 6

அந்தணன்சோமனாக வவற்கொருபகையுமில்லாச்
செந்தணன் மேனியானுஞ் செஞ்சுடர்க்கிரணன்காரி
வந்தனையாமறபததேழ் நான்குடனிருப்பதன்றேற்
சந்ததமேடைமீதிற் சாரவும்புத்திரருண்டே. 7

ஆரல்கரிவிடையழலவன் மறையோனந்தவனுக்கேயுலவாகிற்
சேரர்க்குருசிதளன்புதல்வன் செவ்விடைவெள்ளுபுமேபாகில்
ஆரர்கிருவைந்திடமானதையோ ரையுமருவன்றியேசுபர்பார்க்க
வீரர்கினிபிதைபிதகனாட்கினும் விண்ணுலகாளவும்வெகுபுத்திரர். 8

கல்லுண்டானவனைந்திடமின்றிக் கரியோனிலமகன்பகலில்லா
வில்லுண்டானவனும்முதயவனா மேருவில்வெள்ளிங்கெதிரில்லா
சொல்லுண்டானவனைந்தோன்கூடிச் சொற்சிறுமீனடிதலையில்லா
அல்லுண்டானவனைந்தடியானா லவர்க்கேவெகுபுத்திரருண்டாம். 9

அஞ்சிடமஞ்சேரன்மந்திரி யவரிருந்திடத்தைப்பாபர்
மிஞ்சிடப்பாராராகில் மிகையஸ்தமானமில்லா
தொஞ்சிடமுன்பின்பாபர் தோன்றியநில்லாராகிற்
கொஞ்சிடவநேகம்புத்திரர் கொடும்பகைநீசமன்றேல். 10

ஈரஞ்சுடையோனோரஞ்சி விருந்தோர்க்கேழினன்குடையோன்
ஓரஞ்சுடையானீரஞ்சி லொருமித்தாருஞ்சனிக்கேழிற்
பாரஞ்சிடையினோக்கமில்லாப் பாபரொதுங்கிநிற்கிலுமே
சேரஞ்சிடையின்சுபர்நோக்கச் செழிக்கவெகுபுத்திரருண்டே. 11

மன்னவனஞ்சினோக்கில்லா மனையவன்கரிய்வற்கெதிரில்லா
என்னவனஞ்சிலிருக்கில்லா விருபாலருக்கன்குசனில்லா
அன்னவனஞ்சேழ்போக்கில்லா வம்புவிநின்றவர்க்கெதிரில்லா
சொன்னவனஞ்சேழ்கரியில்லாச் சொல்லுங்குழவியதுநில்லா. 12

ஆட்டினிலாரானிற்க வஞ்சுடமதுவேயாக
வீட்டினிற்குருமீனாகில் வேண்டியபுத்திரருண்டு
கேட்டவர்க்குரைக்கலாகுங் கேடிலாதிருக்குமாதே
ஓட்டுரையேழின்மந்த னிருந்திடாதிருக்கின்மெய்யே 13

தேனினிற்செந்தீவண்ணன் செனித்ததுக்கைந்தேயாக
ஆளுமோராசன்வில்லி யமர்ந்துடனிருந்தானாகில்
மாளுமுக்கோணம்பின்னே மந்தனுமில்லாதானால்
கேளுநீபுத்திரருண்டு கேட்டவர்க்குரைப்பாய்மாதே. 14

அரியவனாட்சியைந்தா யமர்ந்தொருகுருவேமேஷம்
பெரியவனாகிமந்தன் பேருளமினதுமாகில்
அதிற்சந்தியுடனேபுந்தி சத்துருவன்றிநிற்கத்
தெரியவர்க்கெட்டோர்க்கின்னந் திரள்புத்திரென்றுசொல்லே. 15

இருந்தவனைந்திற்பெண்ணா யிட்டமவனானேயாகிப்
பிறந்தவன்புருஷனாகிப் பெருமதியிடத்தோன்பெண்ணாய்ப்
பொருந்தவர்கேந்திரகோணம் பொன்னுகேயாகிநின்றால்
வருந்தவம்வேறேவேண்டாம் வந்திடுமாணும்பெண்ணும். 16

மதித்தலம்புருஷனாக மன்னவரிருப்பிடத்துக்
கெதிர்த்தலமைந்தோன்பெண்ணாய் கேந்திரமாகிநின்றாற்
பரித்ததற்பெண்ணேயாகிப் பஞ்சமத்தோனேநிற்க
விதித்திடுமாணும்பெண்ணும் வேண்டியதிரளேயுண்டு. 17

வெள்ளியுமைந்தினிற்க வியாழனுக்கதுவீடாகத்
தெள்ளியமறையோனின்ற சீர்மனைச்சோமற்காக
அள்ளியவைந்தோனின்ற வம்மனைச்சுங்கர்க்காக்க
முள்ளில்செண்டகமேல்வீசு மொய்குழற்பெண்களுண்டே. 18

அம்புலியைந்தினிற்க வம்மனைசுங்கர்க்காக்க
நம்புகல்லைந்தோன் சுங்க னடுமனையதனிற்கூடச்
செம்மறையவன்றுன்றெண்டில் சேல்பெண்ணங்கிசமேயர்கில்.
இம்மனிலிருக்குமட்டு மிவருக்குப்பெண்களுண்டே. 19

பொன்னவனைந்தோனின்ற பொருதினியதனுங்கூட
நின்றவனிதர்க்கேழ்நின்றே னிலைபெண்ணங்கிசமேயாக
மன்னவர்பாராராக மற்றதீக்கோட்களின்றி
என்னவனிருந்தாகி லெந்நாளும்பெண்களுண்டே. 20

மடலறிய.

உதையத்துக்கைந்தின்மந்த னேரெட்டிற்பூமனிற்க
அதையத்துக்கேழிலராஜ னந்தவன்கனலிற்சேர
மதியத்திலரவஞ்சேர்ந்து மந்தனுக்கேழேயாகில்
விதியத்தின்மலடனென்று விளம்பினர் நூல்வல்லோரே. 21

பத்துடன்பின்சேயைந்திற் பீசலவனிருக்கநோக்க
ஒத்துடன்காரிலாப முதையனுங்கூடிநிற்க
அத்துடனைந்தோனீச மாயினன்மாதேகேளாய்
செத்துடன்பிறப்பில்லாமற் சென்மாதிமலடனவன். 22

அந்தமாயைந்தோனீச மதிற்குருபார்வையாகின்
மந்தனீரைந்துக்கேழின் மழவிடைசேர்ந்துநிற்க
இந்தொரிலக்கினதி யிரவிசேய்பார்க்கக்கூட
எந்நாளளவுமட்டு மிருப்பனேமலடனுக. 23

ஆறெட்டுக்குடையோர்சேர்வுற் றைந்திடமாகநிற்க
வேறிட்டுமறையோனீசம் வேந்தனுமைந்தோன்சேரக்
கூறிட்டவுதையங்காரி குளிகனுங்கூடிநின்றல்
மாறெட்டின்மதிசேய்சேர்ந்தான் மலடனேமலடன்மாதே. 24

இருமூன்றுக்குடையோரெட்டி லிருந்திடவிரவிகூட
வருமூன்றிலிரண்டிலெட்டோன் வக்கிரன்சேர்ந்துநிற்கக்
குருநாணீசமாகிக் கொண்டிடுமுறையநீலன்
பருவானமதியும்பாம்பும் பற்றினன்மலடனவன். 25

ஈரைந்திற்பாபியாகி யினியவர்நீசமாக
ஓரைந்திலுதையத்தானு மொருவெள்ளிமதியுங்கூடப்

பாரைந்துக்கேழிற்பாம்பு பற்றியேநின்ருனகில்
ஆரைந்துதபமானுலு மவனுக்கேபுத்திரரில்லை. 26

முடவனுரைந்தினிற்க முதற்பிறையுடனேபாபி
இடமதாயைந்தோனட்பா யினிக்குருவுடனேபாபி
திடமதாயுதையந்தன்னிற் சிதனுமேநின்ருனகில்
நடவதேபுத்திருண்டாய் நசித்துடன்போமேசொல்லாய். 27

அஞ்சவன்பாபிசேர வதனிடைச்சுபரேநிற்க
மிஞ்சியேகுருவும்பாபர் நடுவதின்மிகையோராகக்
கொஞ்சுவனுனதிங்கள் குசனுடன்சேர்ந்துநிற்க
வஞ்சியேபிறக்கும்பிள்ளை வகையறமடிந்துபோமே. 28

அஞ்சினிலலரிநிற்க வவர்க்குநாலைந்தோனுக
மிஞ்சினுன்மந்தன்பூமன் மிகுததநானாசேநிற்க
தஞ்சுதையத்திற்சோமன் ருன்குன்றிநின்ருனகில்
இஞ்சிபோனுதித்தபிள்ளை யிறந்திடுநாசமாக. 29

ஆறுநாலலரிமந்த னதற்குநால்குருசெவ்வாயும்
வீறிநாலைந்தோனிற்க வேந்தற்குநாலேழாக
தூறினுலுதையந்தன்னிற் சுபருமேநின்ருராகில்
மாரிலாவுதிக்கும்பிள்ளை மரணமாநாசமாக. 30

மூன்ருன்றிற்சுங்கனிற்க முன்னவனீனமாக
வேணிமென்றரசனல்ல விடமதாய்நிற்கத்தானு
ஆணுகொண்டலரிகாரி பூமனுமுறவேயாகில்
வேணுமேயாணும்பெண்ணும் விளைவதுமடியுநதீம்பாய். 31

சென்மத்திற்பாபிநிற்கச் சிதானுடனேதீயர்
கன்மத்திற்பகையோராகக் கருத்துள்ளோராறெட்டாகத்
தன்மத்திலரவஞ்சேர்ந்து தரைமகனேந்தினின்ருல்
துன்பத்திலுதித்தகாளை தோன்றியவன்றேநாசம். 32

பூரணமதியினேடு புண்ணியர்மேலானுலும்
காரணமானவைந்தோன் கனகனுமூடமானுற்
கூரணிகாரியாறில் குருவைந்தினின்ருராகில்
வாரணிதனத்தினுளே வருமந்தகுழவிநாசம். 33

நண்ணியசுபரும்பாபர் நலந்தீயர்கலந்துநிற்க
அண்ணியேவருகில்ராஜ னவருடன்கலந்துநிற்கப்
புண்ணியவைந்தோன்பாபி பிலவானுயிருந்திட்டாலும்
கண்ணியமானகாளை நில்லாதுகொஞ்சநாளே. 34

அண்ணியலக்னஞ்சோம னேந்திடஞ்சோராஜன்
புண்ணியர்பார்வையின்றிப் போயிருந்திடமுந்தீதாய்ப்
பண்ணியபாவத்தாலே பாவரேமிகுத்துனின்றல்
எண்ணொருபுத்திரரில்லை யேந்திழைமாதேகேளாய். 35

வியாழமுந்திங்கள்கூடி வேறொருகிரகம்பாராச்
சகாயமாயைந்தினிற்கச் சந்ததம்புத்திரநாசம்
னியாயமாய்ச்சுபரேயென்று நினைவதிநினைக்கலாகா
துபாயமாய்ப்பார்த்துச்சொல்வா யுபமதுகுறிதப்பாதே. 36

புத்திரகாண்டம்-முற்றிற்று-ஆக-534.

சகோதரகாண்டம்.

மூணினிற்பாபியாக மின்பின்னோரஸ்தமிக்க
வேணுமேநவத்தின்மீந்தன் வக்கிரனிவர்க்கேநான்காய்
காணவேசுபரில்லாமற் கடும்பகையாகினின்றல்
ஆணுமோரில்லானென்னச் சோதாமில்லைமாதே. 1

ரெண்டொருவிட்த்திர்ப்பூம னிராகுவுமைந்தினிற்கக்
கண்டொருவுதையத்தானுங் காரியுங்கூடிநிற்க
நண்டிருமேனியேர்டே நாகமேகலந்துநிற்க
விண்டொருதனியனாகி மேதினியிருப்பன்மாதே. 2

பொன்னவனெட்டினிற்கப் பூமனுஞ்சனியுங்கூட
விண்ணவர்க்காட்சியான வேந்தனுமூன்றோன்கூட
அன்னவனரவங்கூடி யாறினினின்றராகில்
நின்றவனொருவனாகி நிலைபெறநிர்ப்பன்மாதே. 3

ஆறவன்மூன்றினிற்க வம்புலியுடனேபாம்பும்
கூற்றியுடனேமூன்றோன் கூடியேயெட்டினிற்க
கார்கரிக்கேழிர்ச்செவ்வாய் கருநாகங்கூடிநின்றல்
வேறொருதுணையில்லாமன் மேதினிதிருப்பன்மாதே. 4

சுங்கனொருடனேகூடிச் சூரியன்மூன்றினிற்க
அங்கனேயைந்திர்ச்செவ்வா யதர்க்கேழிற்பிறையுதிக்க
இங்கனேருதையந்தன்னி லிருந்திடப்பாம்புதானும்
செங்கரியுடனேமூன்றோன் சேர்ந்திடிலொருவனாமே. 5

திரிவுடமருவப்பாபர் திங்களுங்கூடிநிற்க
எதிரிடமரவநிற்க விளமதிக்கேழிற்காரி

குருவிடமதர்க்கேழாமிற் குருமதிநான்கேயாகிப்
பருதியுமூன்ருேன்கூடிற் பாலன்பின்னில்லைமாதே. 6

காரியுமாரல்கூடக் கண்டொருவுதையமூன்றிற்
சூரியனுடனேமூன்ருேன் சுபருமேபாராராகில்
வீரியவிடையினுகம் விண்மதிநான்கேயாகிற்
பாரிவனுதித்தபின்பு பாலனேயில்லைமாதே. 7

அங்கொருமூன்றிற்பாப ரமர்ந்தொருசெவ்வாய்நீசம்
இங்கொருமூன்ருேன்பாவி யிருபுறமிருந்தாராகிற்
செங்கருவரவங்காரி திவாகரன்சசிக்குநான்காய்
எங்கிருந்தாலுமாதே புனிச்சகோதரமேயில்லை. 8

இப்படியிருந்தபோதிலிதிற்குருசுங்கன்கூட
நற்படச்சோமன்புந்தி நலமுள்ளோர்கூடப்பார்க்கச்
சொற்படச்சுபர்நலத்திற் ருேன்றிடுஞ்சோதரங்கள்
மெய்ப்படிநம்பவேண்டா மேலாகிநில்லார்மாதே. 9

பூமற்குநான்கிற்பொன்னும் புந்திக்கோரேழின்மூன்ருேன்
காமர்க்குமூன்றுநான்காய்க் கருவெள்ளிக்கரிக்கேழாகின்
மூவர்க்குநடுமூன்ருக மூன்றினிவிரவிபாம்பும்
சோமற்குச்சேய்நான்காகிற் சொல்சகோதரமுமுண்டே. 10

ஆறினிற்சுபரிருக்க வதர்க்கதிபதிலேகிற்க
வேருெருபாபர்பாரா விருட்சிகனுட்சியாகி
ஈரரையரசனிற்க விவர்க்குநால்சோமனுகில்
மேலுரைச்சோதரங்கண் மிகுதியாயுண்டுமாதே. 11

ஓரிருவிடத்தாராட்சி யொருமையாயரசன்சேரப்
பாரிவருடனேபாபர் பார்க்கவுங்கிட்டாதாகி
ஆறிருவிடமாய்நிற்க வாரலுஞ்சுங்கன்கூடி
வீரியசகோதரங்கள் வேண்டியதிரளாயுண்டே. 12

நாலுபின்னவனேயுச்ச நலமுளவைந்தோனுட்சி
சேலுளசெந்தீவண்ணன் சிறுபுநதிவியாழுங்கூட
ஏலுளமூன்றிற்சோம னீராறிலலறிமைந்தன்
மேலுடனின்ருனுகின் மிகச்சகோதரமேயுண்டே. 13

ஒன்பதாமிடத்தில்ராஜ னொருவனுய்நிற்கத்தானும்
இன்புமாய்ச்சோமனுறி லிருந்தவர்லாபந்தன்னில்
துன்பமாய்ப்பாபர்நீசஞ் சுங்கனுமுதயநின்ருல்
அன்பதாய்ச்சகோதரங்க ளநேகம்பேருண்டுமாதே. 14

ஆராலுமுன்றோன்வீட்டை யவ்விடஞ்சுபரேபார்க்கச்
சேரலாய்க்கூடிநிற்கச் சென்மாதிமதியமாக
வீரிலாதிருக்கப்பாபர் வேண்டியசகோதரங்கள்
மாறிலாதிருக்குமாதே மணிமுடிசேஷனுக 15

உண்டுபோமுன்றிற்செவ்வா யொருவனாயிவற்கேழ்மந்தன்
கண்டுபோஞ்சனிமுன்றாகிக் கனலவனேழேயானால்
விண்டுபோய்கரிபாம்பானால் விளைவதுமில்லைபின்பு
கொண்டுபோஞ்சகோதரத்தைக் குறியிதுகேளாய்மாதே. 16

அத்துடன்போமோமுன்றி லாராலுங்காரிநின்றால்
செத்துடன்போமேதப்பிச் செல்வரும்பாராராகில்
வித்துடனறுந்துபோமே வெண்கதிர்மூன்றோன்சேர்ந்தாற்
பத்துடன்வருடந்தன்னிற் பலனிதுகுறிதப்பாதே. 17

நேசமாமுன்றில்வந்து நிகழ்குருசோமன்கூடில்
நாசமாமிவற்கடம்மை நல்லவரைன்னம்போமோ
பாசமாஞ்சுபரேயென்று பார்க்கவுநம்பலாகா
மோசமாஞ்சகோதரங்கண் முடிவதுகுறிதப்பாதே. 18

சகோதரகாண்டம்-முற்றிற்று. ஆக-552.

மாதுருகாண்டம்.

உதையநால்சுபரிருக்க வுத்தமருடனேநாலோன்
சிதையாமற்சோமனிற்கத் திவாகரன்கரிசேய்பாரா
ததையாகக்குருநான்காகி லரவமுமதியைப்பாரா
திதையாகநின்றானாகி லெல்நாளுஞ்சதமேமாதர். 1

பத்துநான்கேழிற்பாப ரன்றியேசுபரிருக்க
முத்துநான்கோனும்பாக்கிய முன்னரசோனுங்கூட
எத்திறற்களையீராறி லிருந்தவனாட்சியாகிற்
கொத்துபோற்றழைத்துமாதா குவலயத்தென்றுநிற்கும். 2

விடையுநான்கிருக்கலன்றி வெயிலவன்கரிசேய்பாராக்
குடையுளோனிருக்கவேழிற் குறுகியேசுங்கனான்கில்
நடையுளோனுச்சமாகி நற்பிறையுதைய்னிற்க
இடைசிறுமாதேகேளா யிருப்பனேமாதர்நூறாய் 3

உதையநான்கேழிபத்தோ னொருமையாய்க்கோணஞ்சேர
அதையவர்கேந்திரமான லந்தமாதாவின்சுற்றம்

சிதைவிலாசோமன்விறிற் சேய்காரிபகலோன்பாரா
வதையிலா திருப்பன்மாதா மண்ணினிநூறதாகி. 4

மதியவர்பெருமையாகி மற்றதீக்கோட்கள்பாராச்
சதிரதிலாசனிற்கச் சத்துருபார்வையில்லா
திவர்கேந்திரநான்காய்நின்று லேந்திழைமாதேகேளாய்.
விதியதிலுயர்ந்தமாதா மேதினியிருப்பணாறுய். 5

சதிர்மதியிடத்தானேழோன் சத்தமஞ்சுபரோயாகிற்
கதிராவிரவிசேய்க்குக் கண்டுடனிவரைப்பாரா
ததிர்நவமாறெட்டாகி லந்தமாதாவின்சுற்றம்
எதிரொருகுறையில்லாம விருப்பனேவயதுநாறுய். 6

நாலுடனுவிநல்ல நலமுள்ளோரில்லாதாகி
ஏலுளநாலேழோனும் மிருந்திடநீசமாகிச்
சேலுளமதியுமீன மாயினன்மாதேகேளாய்
பீலுள்ளவன்னேபின்பு பிழைப்பதுமில்லைகண்டாய். 7

பத்துடன்சனிசேய்தீயர் பாம்புமேநின்றுனாகில்
இத்துடனுன்கேழோனு மிழிகுலமாயிருக்கக்
கத்துடனிருந்தநல்லோர் கனங்குன்றியஸ்தமிக்கச்
செத்துடன்போவாளன்னேச் சிரணச்சந்திரனுனல். 8

அன்னர்மதிநான்காக வதற்குநால்செந்தீவண்ணன்
இன்னகருதையங்காரி யிருந்திடிற்சுபரில்லாமற்
பொன்னவனுறெட்டாகிச் போய்விடுமன்னேயில்லாள்
சொன்னவர்பெரியோரிந்தச் சோதனைக்குறிதப்பாதே. 9

இந்தநான்கேழும்பாப ரினியவர்நீசமாகில்
மந்தனுருடனேசோமன் மனேயவனஸ்தமிக்கில்
அந்தநாளரசராகி யலரியுமுதையநின்றல்
வந்தநாளன்னேதீம்பு வருமிதுகுறிதப்பாதே. 10

குருமதுநான்கிற்கூடக் கொம்பனேயாளேகேளாய்
வருமதுவன்னேக்காகா வங்கிசநாசமாகும்
திருகதுமில்லைகண்டாய் செல்வரும்பாராராகிற்
கருவுடன்மாதாநாசங் கண்டிடுங்குறிதப்பாதே. 11

பூமகனுன்கினிற்கப் புண்ணியர்பாராராகில்
ஆமவுனதனுற்சோப னதற்குநான்கிரவிநிற்கச்
சாமவனுதித்தபோதே சனியுமேயுதையமானுற்
போமதுவன்னேகூடப் பிரிவனேயில்லாதாகி. 12

மூவிருநான்கோர்கூடி மூன்சதுரத்தினிற்க
ஈரிருசதிரத்தாரு மிருநான்கிலீராறுகப்
பாரிவர்க்காரெட்டாகப் பனிமதியரவுங்கூடிச்
சூரியனுதயநின்றாற் சொல்லுவாய்மரணமன்னே. 13

நிலமகனீலன்கூடி நிற்கவேயதுநான்காகச்
சிலைமதனீன்மாகிச் சீணமாய்நின்றானாகில்
நலமில்லாச்சுபர்பாராத தாயினுமாதேகேளாய்
சொல்விதிவேறேயில்லைச் சுத்தமாயன்னைசாவள். 14

இரவிநான்கிருக்கவேழி விளமதிசனியுங்கூடப்
பாவிநான்கேழிற்பூமன் பாம்புமேயுதையநிற்க
உரவிலாதிருக்கநல்லோ ரொருவரும்பாராராகில்
அரமிலாதிருக்குமன்னே யன்றிரவதனிற்சாவாள். 15

இதுவாகவிருக்கத்தீய ரிதிற்குருசுங்கன்பார்க்க
மிதமாகசசிறுநோக்காட்டாய் மேதினியிருப்பாளாகில்
அதுவாகவைதந்தாறுண் லன்னையுமரணமாவள்
பொதுவர்ச்சுபரேகூடிற் போகுமெட்டாண்டிலன்னே. 16

சுவர்பாபிகூடிநான்கிற் சுத்தமாய்மதியோடாரல்
அவர்கூடிச்சுத்தான்கோ னரவமுங்கூடிநிற்க
இவருடனில்லாதாக விருந்திடிலுதயத்தானும்
நவமுறுமாதேகேளாய் நாறுன்கிவீயுமன்னே. 17

சுத்தமும்பாபிகூடிச சூரியனுடனேயில்லா
பத்துமுந்நான்குமேழிற் பனிமதியொருவனில்லா
அத்தமுந்நான்குநான்கோ னுட்சியில்லாமலில்லா
நித்தமுங்கன்னியாகி நெடுங்காலமிருப்பளன்னே. 18

மாதுருகாண்டம் முற்றிற்று. ஆக 570.

பிதுருகாண்டம்.

ஒன்பதுக்கொன்பதைந்தில் வெள்ளியோனரசனிற்க
இன்பதிக்கினியோரோடே யிந்துவுங்கூடப்பார்க்கில்
தன்பதிக்கிரணனுட்சித் தானுமேலாபமாகில்
அன்பதுக்கன்பதாகி யவன்பிதாவிருப்பனாறுய். 1

இரவியுமுச்சமாகிக் கோணருமாட்சியாகப்
பாவியகோணந்தன்னிற் பருமதிபாசனிற்க
அரவுசேய்முடவன்புந்தி யாறெட்டுபனிரண்டாகில்
திரவியமுடையோனுகித் தீர்க்கமாயிருப்பன்றந்தை. 2

பகல்பக்கஞ்சுங்கன்ராஜன் பருமதியொன்பதாகில்
இகலினியோனும்ராஜற் கேழிடமாகிநிற்க
அழலவர்க்கேழிக்காரி யாவுசேய்நில்லாதாகிற்
சகலமுமுடையோனுகச் சாவின்றிப்பிதாவுநிற்பன் 3

அஞ்சொன்பதுள்ளோருச்சா மாயிரங்கதிரோனட்பாய்
இஞ்சொன்மாமறையோன்சுங்க னிவர்க்குமேநான்கேழாகிற்
பஞ்சமாய்ப்பாபிநீலன் பாற்கரற்கேழைந்தில்லாச்
செஞ்சோமன்கோணநின்றாற் றீர்க்காயுபிதாவுக்குண்டே. 4

எட்டோனுமெட்டுவீட்டோ னிரவியேசுபரேபார்க்க
மட்டிருகரிசேய்பாம்பும் விட்டிவர்காறெட்டாக
விட்டொருவுதையந்தன்னில் வெள்ளியும்புதனுநின்றாற்
பொட்டெனப்பிதாவின்பாக்கியம் போகாதுகேளாய்மாதே. 5

ஆரியன்பெலத்துநிற்க வதர்க்கைந்தொன்பதினில்ராஜ
சூரியனுடனேபுந்தி சுக்கிரன்கூடநிற்கக்
காரியுமாரல்பாம்பு கலந்தேழிரண்டிலில்லா
மாரியென்மேகம்போல வருஷிக்கும்பிதாவுக்காயுள். 6

சதிரெதியாஜன்சோமன் சத்தமமிரவிநிற்கக்
கதிரிருபக்கமாகக் கணக்கனும்வெள்ளிநிற்க
இதர்க்கெதிர்பாபர்பாரா திருக்கினுமாதேகேளாய்
பிதுர்க்கதியோகமாகிப் பேருளோனாகிவாழ்வன். 7

கனலவனுடனேபுந்தி காரிசேய்நான்கேழன்றிப்
புன்னவமிடத்தான்சோபன் பொன்னுக்குநான்கேழாகில்
அகல்வெள்ளிக்கைந்தோனாலே ழாகினுமாதேகேளாய்
சுழல்கொண்டுபிதாவின்யோகஞ் சொல்லவுமநேகமுண்டே. 8

வேறொருகுறையில்லாமல் வெள்ளிபொன்னவமிருக்கத்
தாமொருமறைவில்லாமற் றனியனுயிரவிலாபம்.
ஆமொருகலையினூடே யம்புலியுதையநிற்க
வீறிலாப்பாபர்பாரா ராயினும்பிதுர்க்கியோகம். 9

நவமதிற்பாபரன்றி நலமுளோரிருக்கப்பார்க்க
மனமதினலத்தநல்லோர் மகிழ்ச்சியாய்க்கூடிநிற்க
வனமதின்மிருகமேறி வல்லவன்கன்னியாகில்
இனமதின்மிகுதியாக விருப்பனேபிதாநூறுக. 10

ஆரியனீசமாக வைந்தொன்பதாரனிற்கக்
காரியென்றலத்தோன்கூடிக் கணக்கனும்வெள்ளிபாரா
வீரியவிடையினகம் வெண்கதிர்க்கேழேயாகிற்
பாரிவனுதியாமுன்னே பிதர்பதஞ்சேராநிற்பன். 11

செங்குருவெட்டிநிற்கத் திவாகரன்பனிரண்டாக
அங்கொருசனியுங்கூட வாரலுநவத்தோன்சேர
இங்கொருவேத்திர்ப்பாம்பு மிருவிக்கேழ்மதியுமாறு
பின்கருவுதியாமுன்னே பிதுர்படிந்திருக்குமாதே. 12

வெள்ளியோனஸ்தமிக்க வேந்தனுநீசமாகத்
துள்ளியெயதற்கேழ்செவ்வாய் சூரியன்புதல்லனிற்கத்
தெள்ளியநவத்திர்ப்பாம்பு திவாகரனவத்தோநான்காய்
அள்ளியகுழவிமுன்னே யவன்பிதாமரணமாவன். 13

பொன்னவற்கேழிற்பூமன் பொருந்தியநலத்தோனஸ்தம்
நின்றவர்முன்றைந்தாகி னீலனுமிரவிநான்காய்
என்றவனுதித்தபோதே யிருந்திடுலுதையம்பாம்பும்
கொன்றிடும்பிதாவைமுன்னே கொடுங்கணேவிழியினளே. 14

நீலனுமிரவிநான்காய். நிற்கினுநவத்தோன்பூமன்
மாலெனுமதிக்குநான்காய் மந்தனுக்கேழாயாகிற்
காலனுபிதாவைத்தேடுங் கனகனும்வெள்ளிபாராப்
பாலனைப்பெறுமுன்னேம பட்டினம்பிதுர்தான்போவன். 15

இரவிமுன்னீலன்பின்சே யிருநான்கில்வெள்ளிபொன்னும்
அரவுமோர்நவத்தோன்கூடி யந்தநீலர்க்கேயேழிற்
பரவியசோமன்புந்தி பாம்புக்குநான்கேயாகில்
மருவுறுங்குழவிமுன்னே மாண்டிடுபிதாவுமாதே. 16

மதியரசோடுகூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
மிகுதியோரவரைப்பாரா திருக்கிலுமாதேகேளாய்
சதியவர்செய்யுதீமை சத்துபிதாவுக்காகா
விதியதுமுடியுந்தப்பாக் குறியிதுகூறுய்மாதே. 17

மந்தன்சேயிருவர்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
இந்தவரவரைப்பாரா திருந்தவரவரேயானல்
அந்தமாய்ப்பிறப்புநோக்கி லப்போதேமடிவண்விர்கிச்
சொந்தமாய்ப்பிதாவைக்கொல்வா சொல்குறிதப்பாமாதே. 18

நாலுபேர்பாபர்கூடி நவத்தினினின்றாகிற்
கோளுயர்பெரியோர்நல்லோர் கூடியேபார்க்கிலன்றி
மாவிபந்திரும்பவந்தக் குழவிமுன்புதாவின்கண்டம்
ஆலுகந்தமர்ந்தமாதே யதுகுறிதப்பாதாகும். 19

நவத்திடகரிநான்காக நாகமுமிரவிநான்காய்ச்
செழுத்திடநவத்தோனிற்குஞ் செவ்வாய்க்குநான்கேயாகி
மதித்திடநல்லோர்பாரா ராசினுமாதேகேளாய்
குறித்திடும்பிதாவின்கண்டங் கொண்டுபோங்குறிதப்பாதே. 20

ஏழிடமுதையப்பாபி யிருக்கினுநல்லோரன்றித்
தாழ்வுடன்சுங்கநிற்கச் சனிக்குநான்காகிநிற்கச்
சூழிடமேழோன்பக்கல் சூரியனரால்கூடில்
தாழ்விடன்குலைந்துநிற்கும் வருமிதுகுறிதப்பாதே. 21

பிதுருகாண்டம்-முற்றிற்று- ஆக-591.

களத்திரகாண்டம்.

மந்தனர்க்கேழிற்சுங்கன் மனையவனீசமாக
வந்தநாளுடையோன்சோமன் மனைக்கெதிர்புந்தியாக
இந்தவேழுடையன்சேய்க்கே யிரவிக்குநான்காய்நின்றூற்
பந்தமாய்ச்சொல்லாய்மாதே பலியாதுகளத்திரநாசம். 1

குருமூடமாகிநிற்கக் குசனுமேயேழிற்சேர
அருகாடரவத்தினேடே வவ்வேழுடையோர்கூட
பரிவாடரவத்தினலாய்ப் பாங்குள்ளசுங்கனிற்கக்
கரிகூடநான்கேயாகிற் களத்திரமிறந்துபோமே. 2

உதையமேழுடையோன்கூட வொருமையாய்ச்சனிக்குநான்காய்
மதியமேழிடத்தில்வேந்த— மனைக்குநால்சுங்கனிற்கசு
சிதையவேயுதையஞ்செவ்வாய் சோவேசுபர்பார்ப்பின்றேற்
கதையதாய்முடியும்பின்னே களத்திறமிறந்துபோமே. 3

பெற்றவனீசமாகப் பின்னேழுக்குடையோனீசம்
கொற்றவன்பனிரண்டாகக் குசன்வெள்ளிகூடநிற்க
உற்றவனுதையங்காரி யொருபாலரவுநின்றூற்
செத்திடுங்களத்திரமெல்லாஞ் சீர்ணசந்திரனேயானல். 4

தனமவர்குன்றிநிற்கத் தாழ்வதாயேழோனீசம்
மதனவன்காரிகூட மங்களசுங்கன்சேர
இனன்மதனரவங்கூடி யிவர்நடுவாகனின்றூற்
சினமதுநில்லாதாகுஞ் செத்திடுகளத்திரமெல்லாம். 5

நீலனுமாரல்கூடி நிற்கவேயேழிற்றூனும்
கோலரவிரவிசுங்கன் கூடியேநின்றூராகில்
மேலெனுமேழோனீரா றிருக்கினுமாதேகேளாய்
காலனேர்களத்திரங்கள் கருவறுமகுறிதப்பாதே. 6

குருமதிகூடியேழிற் கோலமாய்நின்றூராகில்
மருவிவர்சுபாரமென்று மகிழ்ச்சியாய்ச்சொல்லவேண்டாம்

வருமதுகளத்திரவானி வங்கிசநாசமாகும்
திருகதேயிலிலகண்டாய் தெரிந்துரைகுறிதப்பாதே. 7

வெள்ளியுமீனமாக வியாழமுமேழுக்கேழாய்
புள்ளியனரவங்காரி பொருந்தியேயிவர்க்குநான்காய்
தெள்ளியவுதையஞ்சேய்க்குச் சிருடனிரவியேழில்
துள்ளியேநின்றாராகிற் றுணைவிபோங்குறிதப்பாதே. 8

ஏழவனுட்சியாகி யிருபுரம்பாபியாகத்
தாழ்விலாச்சுங்கனிற்கத் தயனவனுடனேகூடி
ஏள்மதியாசன்புந்தி யிவருமேபாராராகில்
வாழ்வுடன்குலைந்துபோமே வருமிதுகுறிதப்பாதே. 9

சுங்கனூர்சுபமிருக்கச் சுற்றியேபாபர்நிற்க
அங்ஙனேயிரவியோடே வைங்தேழுக்குடையோர்கூட
இங்கையோர்சுபரும்பாரா திருக்கினுமாதேகேளாய்
பங்கமாங்களத்திரவர்னிபவிக்குமேகுறிதப்பாதே. 10

சுங்கனூரேழோன்றானுஞ் சுகமாகநின்றாராகில்
எங்கணுமிவரைநல்லோரி ரிருந்திடம்பார்வையாகி
அங்கொருபாபர்கூடி யவர்பார்வையில்லாதாகிற்
பாங்கமில்லாமற்றேவி பதிவிருதையாகிநிற்பள் 11

ஏழிடஞ்சுங்கனூரோ டிருந்தவர்சுபரேயாகித்
தாழ்வுடனிவரைப்பாபர் சற்றுமேபாராராகில்
வாழ்வுடனுயர்ந்துநின்று வருவதுகளத்திரமொன்று
நீள்புகழ்குடும்பதேவி யாகியேநிற்பண்மாதே. 12

ஏழிருபுரமுநல்லோ ரிருந்துமேபாபரன்றிச்
சூழிருப்புரமுஞ்சுங்கன் சுபர்பார்க்கவிருக்கச்கூட
வாழிருமேழோனேந்தில் வலுமையாய்நின்றாராகில்
தாழ்வொருபயமுமன்றித் தழைத்தொருமனைவியாணிற்பள். 23

ஆட்சியாய்சுங்கனிற்க வவ்வேழுக்குடையோனட்பாய்ச்
சாட்சியாயரசனேழிற் சசிக்கேழிற்சுங்கனின்றற்
சூட்சியாய்ச்சுபரைப்பாபர் சூழிடாதாறெட்டாகில்
ஆட்சியாயுறுங்களத்திர மநேகநாளிருப்பள்மாதே. 14

குடியவனுட்சியாகக் குருவுதையத்தினிற்க
அடியவனுச்சமாகி யவர்க்கேழில்ப்பிறையுதிக்க
வெடியவன்காரிசேய்க்கு விண்ணரவிவரைப்பாராக்
கொடியிடைனிற்பணூறாய்க் குறியிதுதப்பாய்மாதே. 15

ஒருபிறைமதியனிற்க வொருபத்திற்குருவேனிற்கக்
குருவரைநான்கிற்சுங்கன் கொம்பனேக்கேழாயாகில்

திருகுவாராமற்பாபர் திகழுச்சமாட்சியாகில்
மருவுறுகளத்திரபாக்கிய மகம்மேருகிரிபோலாமே. 16

தனமுமேழுடையோர்நட்பாய்த் தனியிராசசுங்கன்புந்தி
இனமேழுவிடத்துநான்கா யிருக்கினும்பாபர்பாரா
மனேயேழிற்குருவேநிற்க மதியுமேவுதையமானுற்
கனமேழுமேகம்போலேக் களத்திரங்கலந்துனிற்கும். 17

சோதிபோல்வெள்ளிவீறிச் சூரியன்முன்னேநிற்கப்
பாதியேழுதயந்தன்னிற் பண்டிதனரசன்சேர
நீதியோரில்லாமந்த னிலமகனிரவிபாம்பு
ஏதிலுமில்லாதாகி யிருக்குமேல்களத்திரயோகம். 18

வருமுதைதனத்தினேழோன் வங்கிசநலனேயாகக்
குருதிங்கள்வெள்ளிபுந்தி குலமுளோர்கூடப்பார்க்க
கரிபூமனிரவிபாம்பு காணுமலோதிங்கினின்றால்
மருமணமொன்றேயாக மகமேருவாகினிற்கும். 19

களத்திரகாண்டம்-முற்றிற்று. ஆக 610.

தானுதிபலக் காண்டம்.

சொல்லுநீபகையாரென்னிற் றேன்றுதையத்துக்கெட்டோன்
நில்லுமோரவியுங்கூட னிசமதுவிரையமன்றேன்
கொல்லுமப்பகைதானுண்டு கொண்டிருந்தவருங்கூட
வல்லினுமிருந்தாராகில் வருவதுபகைதானுண்டே. 1

பூரணமதியேயானுற் பொல்லாதாரியாரோவென்னிற்
சீரணமில்லாதாங்கொற் றவனுமேயீராறெட்டிற்
காரணமாகநின்றூர் கனக்கவேபகையுமுண்டு
வாரணிதனத்தினுளே வருவதுபகைதான்கேளாய். 2

உதையமோரதியுநின்ற வொளிமதிபதியுஞ்சேர்ந்த
அதையதற்கெட்டாய்க்காரி சேய்க்காசிரவியாகாச்
சிதைவுற்றமதியேற்றிங்க ளிருப்பதுமேழினன்று
இதையிந்துபுந்திநின்று லினித்தோஷமில்லைமாதே. 3

சொன்னதோர்கேந்திரத்திற் சுபமதியரசன்சுங்கன்
நின்றதிற்கேந்திரமானு னில்லாதுபாபதோஷம்
ஒன்றதிலேந்திற்கைந்தா யொருமையாய்நின்றூராகில்
வென்றதிலுலகிலுள்ள தோஷமேவிலகுமாதே. 4

சந்திரற்காறிற்புந்தி சரசமாமாறன்மந்தன்
சுந்தரற்கைந்திற்சுங்கன் சொன்னதத்தலத்தில்வேந்தன்
தந்திரமாகனின்றூற் சற்றுமேபகையுமில்லே
இந்திரவிமானம்போலே யிருந்துடன்வாழ்வர்தாமே. 5

கனத்துடன்காரிசெவ்வாய் கனமுடனிரவிபாம்பு
கனத்துடனெட்டெட்டாகி யிருக்கினுநலனேயாகும்
மனத்திடமாகனின்றூன் மாறுமேதீமையெல்லாம்
சினத்துடனிருந்தாராகிற் செல்வமுங்கொடுப்பர்தாமே. 6

உதையமுமதிக்குங்காரி யொதுங்கியேனிற்கத்தானும்
சிதையிலேயிரவிசெவ்வாய் சோமலாபமாறில்
மதிகுதியவர்க்கேழன்றி மற்றொருவிடமாய்த்தானே
இதமாகநின்றூராகி லெங்காளும்பதமேயுண்டு. 7

கனத்ததோர்குருவுக்கெட்டிற் காரியும்விடையுமாகா
மனத்தொருசுங்கனின்றுமீனக்கெட்டிற்செவ்வாயாகாச்
சினத்ததோர்மதிக்கேயேழிற் சேர்ந்திடும்புந்தியாகா
இனத்ததோரிரவுக்கெட்டி லிருந்திடுமதியுமாகா. 8

இன்னொருபகைதான்கேளா யிரவிக்கேழ்சனியுமாகா
பின்னொருசனிக்கேழ்நான்கிற் பூமனிருக்கலாகா
முன்னுறுமரவுகேழின் முழுசுங்கனிற்கலாகா
இன்னொருபூமனுக் கேழினுஞ்சனியேயாகா 9

கொற்றவர்க்கெட்டிற்சோமன் கூறினுமிருக்கலாகா
மெய்த்தவரிரவிக்கெட்டிற் கொற்றவனிருக்கலாகா
சுத்தமாய்க்காரிக்கெட்டிற்சுங்கனுமிருக்கலாகா
அத்தவரவிக்கேழ்நான்கி லரவமுமிருக்கலாகா 10

அரவமுங்காரிநான்கி லேழிலுமிருக்கலாகா
இரவிக்கோரேழுமாக விருப்பதும்பூமற்காகா
உறவற்றுனிற்கும்வாறு முபமதுபாராராகில்
வரவுடல்போககுங்கண்டு வகைசொல்லமாட்டார்மாதே. 11

இனியொருபகைதானுண்டு தியம்புவேன்சொல்லக்கேளாய்
தனியுறுங்குருவுக்கெட்டோன் றன்வந்துகூடலாகா
சனிமதியுடையமெட்டோர் தாமுமேகூடலாகாப்
பனிசுங்கன்விட்டோன்வந்து பரிந்திருந்தாலுமாகா. 12

உற்றதோர்மதிக்கேயெட்டோ னுதயத்திற்கெட்டோன்கூட
இற்றதோரிரவிக்கெட்டோன் மந்தரைப்புந்தியூரான்
உறறதாய்க்கூடினலு மொருமதிக்கிவருமாகா
அற்றதுசொன்னேனின்ன மாகாதுசொன்னேன்மாதே. 13

சுங்கனுர்க்கெட்டோன்மந்தன் சூரியனிடத்தேவேந்தன்
பொங்கமாயிடத்தன்சேரப் பூமனுர்வீட்டான்கூடி
அங்ஙனேசுங்கன்பக்க லமர்ந்துடனிருக்கலாகா
மங்கையோர்க்கினியமாதே மற்றதுஞ்சொல்வேன்கேள். 14

உதையாதிசுங்கன்வேந்தற் கெட்டினிலுறையலாகா
இதமாகவிருந்திட்டாலு மேந்திழைமாதேபொல்லார்
அதையோர்நின்றதுவேபார்த்திங் கமர்ந்தவர்பகைநட்பென்று
விதமறியாதபேர்க்கு மிதையறிந்தினிதுகூறே. 15

அரவினுக்காறுவீட்டோ னவருமேயாறெட்டாகி
குருவுக்குமதிவீட்டானுங் கூடாமலாறெட்டாகி
குருவொக்கமதிக்கேயந்த குருவீட்டானுறெட்டாகில்
இரவுக்குச்சமனுய்நின்றிங் கிவருமேபகையாய்நிற்பர். 16

காணியேசுங்கர்க்கெட்டோன் கருதியேபுந்திக்காகா
பேணியேபுந்திக்கெட்டோன் பெரியசுங்கர்க்குமாகா
நாணியேயிருந்தாராகி னலமில்லைதோஷமுண்டு
பேணியேபகையாய்நின்றுற் பெருமையுமில்லைமாதே. 17

அரசற்குநாலேழ்பத்தோ னம்புலிக்குறவேயாகும்
விரசதிர்மும்மூன்றைந்து மூன்றுடன்வீட்டார்தாமும்
அரியசுங்கற்குநல்லோ ராறெட்டுபனிரண்டோரும்
சரசமாய்ச்சனிக்கேநல்லோ ரிவர்சத்ருவல்லகண்டாய். 18

நலங்கொண்டமதிக்குநான்கே ழுடன்பத்தோர்கொற்றவர்க்காம்
பெலன்கொண்டமூன்றைந்தோன்பான் பிருக்கினுக்குறவேயாகும்
பலன்கொண்டவீராறெட்டோன் பொல்லாதசனிக்கேநல்லோர்
இனங்கொண்டிங்கிருப்பர்மாதே யிப்படிநலன்றுனுண்டே. 19

சுக்கிரனிருந்தநான்கேழ் பத்துடன்வீட்டார்தானும்
மெய்க்குறவாமேசந்திரன் மேலுடன்வந்தார்தாமும்
மிக்குறவாமேராஜன் விரையமோடெட்டாறேனும்
நற்குறவாமேமந்த னண்ணுறுமுறவுமாதே. 20

நில்லதுபாபர்நின்ற நிலையதுக்கெட்டீராறேர்
வல்லதுசுபர்க்குநல்லோர் வரும்பகையில்லைமாதே
சொல்லதினலறிந்து சூட்சியாயறிந்துசொல்வாய்
அல்லதிதறிந்துபார்ப்போ ரமரர்க்குமிக்கோராமே. 21

சொன்னதோர்சாஸ்திரத்தைச் சோதித்துப்பார்த்தாராகில்
விண்ணதோருலகிலுள்ள வேதனுர்க்கதிகமாவர்

மன்னவருலகிலுள்ள மணிமுனிக்கதிகமாதி
எண்ணவருலகில்வாழ்வு றிருப்பர்சொற்கினியமாதே. 22

தானாதிபலக்காண்டம் முற்றிற்று ஆக-632.

திசைசக்கிர காண்டம்

குருசொன்னது.

பொன்னுடன்றேவமந்திரி பொசிப்புடன்றிசையறிந்து
மன்றினி லுதித்தோர்க்கெல்லாம் வலமிடச்சக்கிரங்கண்டு
விண்ணுட னுலகிலுள்ளோர் விவரமுமறியவேண்டி
எண்ணுடன்வியாழஞ்சொன்ன திதுமொழிதப்பாமாதே. 1

திசையவன்பொசிப்பில்வந்தோன் றிருகிலாச்சரமேயாகில்
விசையுள்ளசக்கிரத்தான் வெகுண்டதின்பகையில்லாமல்
நிசமதுநல்லோராக நின்றவர்வருவாராகில்
அசைவொருநாளுமில்லை யவனியிலிருப்பன்மாதே. 2

சக்கிரம்பிடித்தோனுண்போன் சமனுக்கீவிருக்கின்னன்மை
வக்கிரத்தாராய்மூடம் வரும்பகையிடமிருக்கில்
நிற்கிறதிசைபொசிப்பி னீசமும்பகையோர்கூடில்
நிற்பதேயில்லைசீவ னிசமதுகேளாய்மாதே. 3

சரியிருமாரகமேயாக வருமதுதிசைநாதற்கே
வருபொசிப்பதற்குத்தானே சரியிரிமாரகமேயாக
இருவிதியிடத்தோன்சக்கிர மிருமாரகர்பொசிக்கிற்
கருதொருநாளுமில்லாக் கண்டிடி லுடனேநாசம். 4

மூணுமாரகனைநோக்கி மூடனுறெட்டினிற்கக்
காணவேதிசையோனாகிக் கனலவன்பொசிப்பேயாகி
வேணுமென்றாலுமாக நகருமேசக்கிரமாகிற்
பூணுமேவிதியடைந்து போயவிடுங்குழவிநில்லா. 5

பூரணச்சந்திரன்சக்கிரம் புந்தியார்திசையுமாக
வாயணிச்சந்திரனாரும் வருந்திசைபொசிப்பேயாகி
ஏரணிபுந்தியாரு மெரிசக்கிரம்பொசிப்பேயோனாற்
காரணமாகத்தீம்பு கண்டிடுமுடனேசாவே. 6

சனியுடனிருந்தோன்சக்கிரந் தபனனார்பொசிப்பேயாகில்
விதியுடன்றிசையுமாக வேந்தனார்மந்தனுண்ணிற்
கதிபெறவாறெட்டாகிக் கனிபவராகினாலும்
இனியொருநாளுநில்லா வேந்திழைமாதேகேளாய். 7

மாரகவிடத்தினின்றோர் மனையவர்குடும்பர்கண்டோர்
சீரணமானச்சந்திரன் றிசைபொசிப்பிவரேயானால்
சேரணிமன்னராகிற் றிரும்பியேகொல்வர்பொல்லார்
ஈரங்குழன்மாதேகேளாயிவரையேநம்பலாகா. 8

அட்டமன்றிசையேயாகி யதற்கெட்டோன்பொசிப்பேயாக
* நட்டமற்கெட்டோன்சக்கிர நவிலட்டமாதியுண்ணில்
இட்டமாயக்கேந்திரமாகி யிவ்ருமேபொல்லாராவர்
துட்டராய்க்கொல்வர்கண்டாய் தோன்றியேயிருந்தாராகில். 9

எட்டவனாகமன்ன னிருந்திடவுதையந்தன்னிற்
பொட்டெனவுதையத்தானும் போயிருந்தேதட்டினிற்க
மட்டிலாச்சுங்கனாற்கு மாரகமிரண்டேயாகத்
திட்டெனவிவற்கேசக்கிரந் திசைபொசிப்பானாற்சாவே. 10

ஆறெட்டுச்குடையோனாகி யவன்றிசைபொசிப்பானாலும்
ஏறிட்டுக்கேந்திரமானோ ரிவர்கையிற்சக்கிரமாகில்
மாறிட்டமதிசேய்நீலன் மணிசக்கிரப்பொசிப்பேயானால்
வேறுபட்டுதிரங்கண்டு வீழ்வனேகெண்டந்தப்பா. 11

சேரிருமாகரத்தோன் றிசைவரும்போ துசக்கிரம்
கூரனைப்பிடித்திட்டோனிங் கூடினாற்கொல்வன்மாதே
ஆருமோர்மாரகத்தி லமர்ந்தவன்சக்கிரமேந்திற்
பாரவன்கொல்லானென்று பகர்ந்தனர்நூல்வல்லோரே. 12

உசந்தமாரகற்குமுன்னே யோடியேதிசையிருக்க
அசைந்தமாரகனேகொல்ல வாகாதுகெண்டகதப்பும்
இசைந்திவற்குசந்தபோதிங் கிருவருங்கூடிக்கொல்வர்
கசந்தமாரகரேயானாற் கண்டமேபிண்டந்தப்பும். 13

ஆட்சியமுச்சநட்பு மமர்ந்தவர்க்கொருநான்காக
சூட்சிமாரகரேயாகிற் சுத்தமாய்ப்பொசிப்பிற்கொல்வர்
காட்சியில்லாமனீசங் கடும்பகைமூடமானோர்
சாட்சியாய்த்திசையிற்கொல்வர் சக்கிரம்பிடித்த பர்சாவே. 14

உதையநான்கேழுபத்தோர்க் கொருவேளைதிசையேயானால்
இ[illegible]தவரும்போதசக்கிர மிருகோணர்பிடித்தாராகிற்

---

* நட்டமன் க்ஷீணசந்திரன் விரையாதிபதியென்றும்சிலர்.

சிதைவொருநாளுமில்லைச் சிரஞ்சீவியாகிகிற்பன்
விதைபதிமாதேகேளாய் விண்ணுளோர்க்குரைக்கும்போதே. 15

சதிரவன்சக்கிரமாகிச் சார்ந்தவன்பொசிப்புமாக
விதியுடைத்திசையுமாக வெண்கதிர்பொசிப்புமாக
கதிபெறவந்தாராகிற் கண்டிடுங்கொண்டதோஷம்.
இதிலோர்மாரகருமில்லா திருக்கினுங்கொல்வர்மாதே. 16

குருவுடைத்திசையுமாகக் கொடுநீலன்புத்தியாகில்
அருகொருசுங்கன்சக்கிர மந்தணன்பொசிப்பேயாகில்
திருகோர்மாரகமுமில்லா திருக்கினுமாதேகேளாய்
வருமொருகண்டமாக வந்தபின்கொல்வர்கண்டாய். 17

சந்திரன்றிசையோனைச் சக்கிரம்புந்தியேற்கச்
சுந்திரன்றிசைபொசிப்பிற் சிந்தையோனுண்ணலாகி
அந்திரபுந்திசக்கிரஞ் சுந்திரனுண்ணலாகில்
இந்திரப்பதியோரேனும் விழுத்துடன்கொல்வர்மாதே. 18

கேதுவின்றிசையிற்புந்தி கீழ்மகன்பிதாவுமுண்ணிற
சாதுவின்பூமன்சுக்கிரஞ் சனிபொசிப்பாகிற்கெண்டம்
ஏதின்மாரகமேயாகி லேந்திழைமாதேகேளாய்
சூதுபோலல்லலுமாய்ச் சுத்தமாய்ச்சீவன்போமே. 19

உதையாதிதிசையோனாகியோரெட்டீராறுருண்ணிற்
சிதையாமனைக்காடுண்டு செல்வதுமிகுதியுண்டு
மிதமிலாக்கிலேசமாகு மேதினியிருப்புந்தாழ்வாம்
உதவியோர்கள்கிட்டா ரொளித்துடன்றிரிவன்மாதே. 20

திசைநாதரிருப்பிடத்துத் திரிகோணகேந்திரருண்ணில்
அசையாமனின்றேவாழ்வ னிரெட்டோன்விரையனானல்
விசையாகத்தீம்புண்டாகும் வேறுமாரகரேயானல்
நிசமாகச்சீவஹானி நினைவதுகேடுசெய்வார். 21

நன்றவர்திசைநாதற்கு நான்கேழைந்திடத்தோராகி
அன்றிவர்தர்மகர்ம மதிலாபமானோராகிற்
கொன்றிடுவோருமற்றோர் குடியவருண்ணிநன்மை
என்றுமேசுகமுமுண்டா யிருப்பனேபுவியின்மாதே. 22

சக்கிரதிசையுமீதிற் பொசிப்பவனிடமுங்கண்டு
நிற்கிறவிதமறிந்து நினைவினாற்பகையுநீசம்
மெய்க்குறவதுமறிந்து மேவுமாரகமறிந்து
சொற்குறிதப்பாதாகச் சொல்லினன்வியாழன்றானே. 23

மாரகமறிந்துபார்த்து மிடிப்பமஸ்தமானங்கண்டு
சேரவுநின்ருேர்நன்மை தீமையுமிடனறிந்து
பார்மதிநினைவறிந்து பார்த்தவனிருப்புங்கண்டு
சீரகர்பார்வைகண்டு செப்புகவியாழஞ்சொன்னர். 24

இருந்திடத்திசைநாதற்கு மேழிடமானேனுண்ணிற்
பொருந்திடநல்லோராகிற் பொருணலமாகிநிற்கும்
அருந்திநின்றிசைந்தாராகி லவருண்ணினன்மையில்லை
திருந்தமிழ்க்கதிகரான செல்வரேசொன்னநீதி. 25

பொருந்தியதிசைசக்கிரத்திற் பொசிப்பவர்நலனேயானல்
வருந்தவும்வேறேவேண்டாம் வருவதுநலனேயானல்
இருந்தவரொன்றிக்கொன்றே யிடையூறதாகிநின்ருற்
குருந்தையிலிருந்தமாதே கொல்லுவர்குறிதப்பாதே. 26

திசைச்சக்கிரகாண்டம்-முற்றிற்று-ஆக-658.

சுக்கிரகாண்டம்.

சுக்கிரன்சொன்னது.

மிக்கதோர்சக்கிரங்கண்டு மிகைத்தனர்பாபருண்ணும்
தக்கதோர்நிற்கிறத்திற் சரிப்படப்பருதிகாண
இக்கதைசுக்கிரன்சொன்ன திதுமொழிதப்பாதாகும்
ஒக்கவேயுலகிலுள்ளோ ரிக்கருத்தறியத்தானே. 1

ஒருகோணகேந்திரபத்திய மோங்கிநின்றிடினுநட்பாய்
இருலாபமிடமுமாகி யிவனுச்சவமிசையாகி
வருமவன்சக்கிரம்வாக்கில் வல்வினைதீமையெல்லாம்
திருகிலாதிருப்பன்மாதே செல்வமுமனேகமுண்டே. 2

லாபாதிதனத்தோனுச்சம் ரண்டிடதிருப்பன்மாதே
போகாதவிடத்தோனன்றிப் பொருந்தியநவததினிற்க
ஆகாததிமையுள்ளோ ரவருமேயிவரைப்பாரா
தாகாதான்சக்கிரம்வாங்கிற் றனலாபபாக்கியமுண்டாம். 3

வஞ்சியேகேந்திரகோணர்வலமிடச்சக்கிரம்வாங்கில்
மிஞ்சியேதீமைசெய்யார் மிகநட்புப்பெறுதியுண்டாம்
அஞ்சியேசுபமேர்க்கொண்டிங் கருந்தியருண்ணினன்மை
கொஞ்சியவுலகில்வாழ்வன் குயிலன்னமொழியினுளே. 4

நன்றுள்ளேகேந்திரகோணத் திருந்தவர்சுபமாய்நிற்கக்
கன்றுள்ளகாரிசேய்க்குக் கனவிடையிரவிபாரா
தென்றுள்ளசுபமாய்நிற்கி லிவர்கையிற்சக்கிரம்வாங்கிற்
குன்றுபோலுயர்ந்துசெல்வங் குலாவியேயிருப்பன்மாதே. 5

அருதிசையிடத்தோனெட்டுக் கெட்டவன்சக்கிரமாகிக்
குருதிசைச்சக்கிரத்துக் கெட்டவன்றிசையேயாகி
விதிவிரையவர்க்குளுண்ண வாங்கிடுமாகிற்கேளாய்
விதியறவறிந்துசக்கிரம் வேறுபட்டுயிர்தான்போமே. 6

உச்சநட்பாட்சியாகி யோரெட்டாய்நின்றோராறாய்
இச்சையாதிசையுஞ்சக்கிர மிவர்பொசிப்பிவர்க்கேயாகில்
அச்சமில்லாமற்கொல்வா ரவகேடுமுடனேயுண்டு
நிச்சஞ்சுங்கன்சொன்ன நிலைமொழிதப்பாமாதே. 7

உச்சமுச்சாம்சையாகி பொருளாபமானோன்சக்கிரம்
நிச்சயமாகிச்சந்திர லாபாதிதிசையுமாக
இசசையாய்சுபரும்பாப ரீரெட்டோர்பொசிப்பானாலும்
அச்சமேயில்லாதாகி யவின்றனமுண்டயனவன். 8

ஈராறுமெட்டுநீச மிழிகுலமல்தமானம்
சேராதபகைமையோர்க ளிடமதுசேரக்கூடல்
ஆரார்கைச்சக்கிமேனு மறுந்துடன்போமேசொல்வாய்
பார்சுபதில்சயேயாகிற் பலன்படலதிகமாமே. 9

எட்டுவீடவனுமாக விருமாரமவர்க்கேயாகித்
திட்டெனம்பத்தினிற்கத் திசைசக்கிரமிவர்க்கேயாகப்
பொட்டெனமதிகெட்டோனும் பொசிக்கவும்வருவானாகில்
தொட்டதிலருந்துசக்கிரந துன்பமாய்மாளுஞ்சீவன். 10

மாரகவிடத்தினின்றோன் மனையவன்பொசிப்பேயாக
சேரவும்பார்வையானோர் திசையவர்சக்கிரமாகிற்
கோரமாவிடத்தினின்று கூனுடைமதிநான்காகில்
பாரமாயறிந்துசக்கிரம் பதினிலையிழந்துசாவன். 11

இருபுரமிரண்டுமூன்றி லிருந்திடப்பாபர்முன்பின்
வருந்திடுமதனினின்றோன் வலமிடச்சக்கிரமேந்த
திருகெதிர்நின்றோனுண்ணக் கேந்திரமாய்நின்றோருண்ணில்
மருவலர்குழலினாளே மாளுமேசுங்கன்சொன்னார். 12

கலங்கொண்டதிசையேநின்ற நன்மனையதனைப்பற்றிப்
பெலனுண்டுபார்த்துச்சொல்ல பிறக்கினோனுதயம்போல
சலிதிதனக்கீடாகக் சக்கிரத்தோனைப்பற்றி [தே
குலனெண்ணிப்பார்த்துசசொலவாய் குறிப்பொசிப்பதனையாய்ந்

உதையமோர்திசையனுக வோர்மதிசக்கிரமாக
அசையவேதிசைமேற்கொண்டு பொசிப்பவரிடனறிந்து
தசையமாரகமறிந்து சக்கிரப்பொசிப்பறிந்து
இசையுடன்பார்த்துச்சொல்லா யேந்திழைதனத்திளுளே. 14

திசைநாதனிருப்பிடத்துச சென்மாதிவிரையமட்டும்
இசையஸ்தமானநீச மிழிகுலம்பகைமரிப்பு
விசையுச்சமாட்சிநட்பு வேறுமாரகமுங்கண்டு
நிசமதாய்ச்சொல்வாய்மாதே நிலையதுகுறிதப்பாதே. 15

சக்கிரகாண்டம்-முற்றிற்று-ஆக-673.

திசைபொசிப்பு மாரகக் காண்டம்.

திசைநாதன்செய்யுமந்தத் தீதுதீன்சொல்லக்கேளாய்
அசையாமனின்றகோண ரதிகேந்திரர்கொல்வதில்லை
திசையாகவேழிரண்டு திசைநாதற்கதுவேயாக
நிசமாகமதிக்குமந்த வடைவாளேன்கொல்வன்ருனே. 1

வருந்தவன்றிசையில்வந்த வடிவுளோனுகிக்கொல்வன்
இருந்தவனேழிரண்டு மிவன்பொசிப்பாகிற்கொல்வன்
கருந்தவன்காரிகூடக் கலந்தவன்பொசிப்பிற்கொல்வன்
இருந்தவர்பகையேயான லிவருமேகொல்வர்மாதே. 2

எட்டவன்றிசையுமாக விருமாரகர்பொசிப்புமாகிப்
பொட்டெனபகையுண்டாகிற் பொசிப்புவந்தளவிற்கொல்லும்
நட்டமுமனேகமுண்டு நகர்விடும்பதிபோந்தீதே
தொட்டவன்போகமட்டுந் தொந்தரையுண்டுமாதே. 3

எட்டினிலிருந்தோன்வந்தான் மதிக்கெட்டோன்பொசிப்பிற்றீது
பொட்டெனவவர்க்கேயேழீ ராரவன்பொசிப்பிற்கெண்டம்
மட்டினிற்சேரமனின்ற மனக்கேழிரண்டுவீட்டான்
பொட்டிடனவாகின்ருற் போய்விடுமாவிதானே. 4

திசைமரிப்போதேவென்னி லிருமாரமவற்கேயாகி
இசையிருமதிக்குமார னவனுமேபொசிப்புமாகி
அசையவரிவற்கேபொல்லா தாகாதுபகையேயானற்
கொசமச்சாகக்கொல்வர் குறியிதுகேளாய்மாதே. 5

வருதிசைப்படியேபார்த்துப் பொசிப்பவன்பகையைக்கண்டு
தருகுமாரகரைப்பற்றிச் சனிநின்றபகையையாய்ந்து
திருகிலாதூடுதாககித் தீநலஞ்சொன்னான்மெய்யே
மருமணக்குழலினாளே வருந்திசைபார்க்கும்வாறே. 6

உயிருடன்மாரகரைப்பற்றி யொன்றியேதீபர்சேர்ந்து
எதிரிட்டுநின்றுபார்த்தா லிதைக்கொண்டுபோவரென்க
அதையறிந்துரைக்கவின்ன மதிகமாரகருமுண்டு
வயிரமேயிருப்பறிந்து மருந்திசைபொசிப்பறிந்தே. 7

மந்தன்மாரகம் மதியுதையமாரகம்
சொந்தமாயிவர்க ளிவ்விடத்தர்மாரகம்
அந்தமாய்ப்பத்துபேர் மாரகமறிந்து
வந்ததிசைபகை நட்புரைமாதே. 8

உதித்திடும்பிள்ளைக்கின்ன முடன்பிறப்புண்டோவென்னில்
எதிர்த்திடுஞ்சத்ருமாத்ரு வின்னமும்பிதுருபுத்திரர்
மதித்திடுமரவுகாரி மாமணியிவர்க்கேயெல்லாம்
கதித்தகாரணவன்விடுங் காரகநிலேயும்பார்த்தே. 9

செனித்திடுமகற்குச்சொல்லுஞ் சீரதுபாகம்போல
குனித்ததுபார்த்துச்சொல்லக் கூறியநிலேயாய்நிற்கும்
வெறித்துநீவேறேபார்த்து வெளியினித்தேடவேண்டாம்
மறித்தொருநாளும்பொய்யார் மணிக்கண்டகேரளந்தான். 10

இத்தையேபார்த்துச்சொல்வா யெண்ணெணைக்கருமங்கட்கும்
மற்றுமோர்சாஸ்திரந்தேடி மயங்கிடவேண்டாங்கண்டாய்
வித்தையோரதிக்முள்ள வேதனர்சொல்லுநீதி
வித்தகமுள்ள நூலில் விதம்போறதில்லேமாதே. 11

திசைபொசிப்புமாரக்காண்டம்-முற்றிற்று-ஆக-684.

கேரளசோதிடம் முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
222978
சென்னை-600 008

காண்ட அட்டவணை.

காண்டம்.	பக்கம்.	காண்டம்.	பக்கம்.
அரிஷ்டகாண்டம்	௧	தீர்க்காயுட்காண்டம்	௰௬
அற்பாயுட்காண்டம்	௧௰	நலந்தீங்குகாண்டம்	௯
ஆயுள்காண்டம்	௪௫	பலாபலக்காண்டம்	௰௫
களத்திரகாண்டம்	௭௫	பிதருகாண்டம்	௭௨
சகோதரகாண்டம்	௬௮	பிரதியரிஷ்டகாண்டம்	௫௨
சக்கிரகாண்டம்	௮௩	பிரதியோககாண்டம்	௰௮
தனக்காண்டம்	௫௮	புத்திரகாண்டம்	௬௪
தானதிபலக்காண்டம்	௭௭	மாதருகாண்டம்	௭௰
திசைச்சக்கிரகாண்டம்	௮௰	யோககாண்டம்	௬௧
திசைபொசிப்புமாரகக்காண்	௮௫	ரோககாண்டம்	௬௰

இந்நூலில்பனிரண்டு பாவங்களையும் எட்டுபாவங்களாக ஒடுக்கிக்கூறினமையால் ஷ பாவங்களைக் காண்டங்களாகச் சொல்லப்பட்டன.

பொருள் அட்டவணை.

பொருள்	பக்கம்.	பொருள்	பக்கம்.
அநந்தபாரியனுய்உளகாளும் அரசு	௨௨	சுக்கிரன்சொன்னயோகம்	௩௰
அரிஷ்டம்	௫௨	சுக்கிரன்சொன்னது	௮௩
அவயோகம்	௩௮	செல்வன்	௨௩
அற்பாயுள்	௰	தரித்திரன்	௨௩
அற்பாயுள்	௪௮	தனநஷ்டம்	௫௯
ஆயுரியோகம்	௪௰	தனலாபம்	௫௮
இராஜயோகம்	௰௧	தீர்க்கவயது	௰௬
இராஜயோகம்	௰௮	தீர்க்காயுள்	௪௫
உறவுபகைசமன்	௰௫	தோஷநிவர்த்தி	௫௬
ஏகச்சக்கிராதிபன்	௰௩	நரயோகம்	௰௨
ஏகச்சக்கிராதிபன்	௨௧	நரயோகம்	௨௨
குமுதயோகம்	௨௨	நஷடி	௯
குருபகவான்சொன்னயோக	௨௭	பலன்சொல்லும்விபரம்	௰௫
குருசொன்னது	௮௰	பலாபலன்	௧௩
கெஜயோகம்	௰௫	பாலரிஷ்டம்	௧
கெண்டயோகம்	௪௰	பேரியோகம்	௧௩
சகடயோகம்	௨௩	மலட்டிய	௬௬
சதபாரியனுய்உலகாளும்அர	௨௨	மாதருபலன்	௭௨
சதாமுகூர்த்தம்	௯	முரசயோகம்	௨௨
சாம்பிராஜ்யயோகம்	௧௫	ரோகமின்மை	௬௰
சிவிகையோகம்	௩௯	ரோகம்	௬௰
		வெகுபுத்திரர்	௬௪

டி, சாரதா புத்தக சாலையில் தயாராய் இருக்கும்

புஸ்தக விளம்பரம்.

வயித்திய தினுசுகள்.			சோதிட தினுசுகள்.		
போகர் 7000-பாடல்	4	0	மணிகண்டகேரளம்	0	8
கொங்கனர் கடைக்காண்டம்500	0	8	வால்மீகர் ஆரூடம் மூலமும்உரை	0	3
போகர் 700-பாடல்.	0	10	சப்த்தரிஷி வாக்கியம் 1000-பாடல்	0	12
போகர் ஜெனனசாகரம்	0	12	சாதக சிந்தாமணி	2	0
போகர் சரக்குவைப்பு 800-	0	14	மங்களேஸ்வரியம்	2	0
உரோமரிஷி வயித்தியம்-500	0	10	ஜாதகபாரிஜாதகம்	0	10
அகஸ்தியர் வயித்தியசூாவி-1500	1	0	சாதகஅலங்காரம் மூலம்	0	12
அனுபோக வயித்திய அகராதி	1	0	ஷை மூலம் உரையுடன்	2	0
நாடிசாஸ்திரம்	1	0			

டிராமா தினுசுகள்.

சதி-அனுசுயா	0	4	ஞானசவுந்தரி	0	4
ஷை இரண்டாவது	0	4	அல்லி அர்சுன	0	4
லவகுச சரித்திரம்	0	4	ஷை இரண்டாம் பாகம்	0	4
ஷை இரண்டாவது	0	4	நல்லதங்காள்	0	4
கோவிலன்-கர்னகி	0	4	ஷை இரண்டாம்பாகம்	0	4
ஷை இரண்டாவது	0	4	வள்ளி சரித்திரம்	0	4
பாரீஸ் சகுந்தலா	0	4	பாரீஸ் மதிவல்லபமோகன	0	4
பாரீஸ் லங்காதகனம்	0	4	ஷை திருப்புகழ் வர்ணமெட்டு	0	3
கெஜேந்திர மோக்ஷம்	0	4	சத்தியவான் சாவித்திரி	0	4
அதிரூபஅமராவதிமுதல்பாகம்	0	4	சற்குண சாவித்திரி	0	3
ஷை இரண்டாம்பாகம்	0	4	தசாவதார சரித்திரம்	0	6

பல தினுசுகள்.

பழனியாண்டவர் காவடிசிந்து	0	4	தத்துவகட்டளை	0	1
பகவத்கீதை பாக்கிட் சயிஸ் 18-அத்தியாயங்கள் படங்களுடன்	0	8	ஜீவோற்பத்திசிந்தாமணி	0	4
			வராகிமாலை	0	1
ஷை கலிகோ பயிண்டு	0	10	சடாசரமாரல்	0	1
ஷை பெரியது வசனம்	1	8	ஆண்டாள் திருப்பாவை	0	2
ஷை கிரந்த சுலோகம் தமிழ் அர்த் கட்டளை கொத்து	1	0	மகாத்மாகாந்தி வந்தேமாதரம் கதர் துணிபாட்டு	0	1
ஷை கிளேசு	1	8	சீமைதுணி கதர்துணி சண்டை	0	1
நாஞஜீவவாத கட்டளை வசனம்	0	1	பர்மாடாப்பு என்னும்நொண்டிசிந்	0	1
ஷை மூலமும் விசேஷட விருத்தி உறை 3-படங்களுடன்	0	8	சங்கீதபாலவித்தியாபோதினி	0	12
			மங்கைமோகனுள்	0	8

T. சாரதா புஸ்தகசாலை.

நெ. 23, பாளையப்பன் தெரு, மிண்ட் பில்டிங் போஸ்டு மதராஸ்.

வாருங்கள்! வந்துபாருங்கள்!! களிகூருங்கள்!!!

சந்தோஷங் கொண்டாடுங்கள்!!!!

சாரதா புத்தகசாலை.

நண்பர்களே! கவனியுங்கள். கவனியுங்கள்.

நமது புத்தகசாலையில் நவீன நாவல்கள், நாடகங்கள், கதைகள், புராணங்கள், காவியங்கள், கீர்த்தனைகள், சரித்திரங்கள், டிராமாக்கள், விலாசங்கள், வைத்தியங்கள், சோதிடங்கள், வேதாந்தம், சித்தாந்தம், ஸ்கூல்புத்தக தினுசுகள், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், ஒக்கப்பிலேரிகளும், கெடியாரம் எலக்டிரிக் பொன் கெடியாரம் எலக்டிரிக் பொன் ஜர்மன்சில்வர் இமிடேஷன் ஆபரணங்கள் கூந்தல்வளரும் பரிமளத்தைலம் ரப்பர் ஸ்டாம்புகள் முதலிய சாமான்கள் விலைசகாயமாய் விற்கப்படும் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வேண்டிய கனவான்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

எமது கம்பெனி கேட்லாக்கு வேண்டியவர்கள் ½ அணா ஸ்டாம்பு அனுப்பி இனாமாக பெற்றுக் கொள்ளலாம்.

எமது விலாசம்,

T. சாரதா புத்தகசாலை, அதிபர்,

த. துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் போஸ்டு, மதராஸ்.